விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஐப்பசி 12 ஸபர் 3 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (28—10—84) இதழ் 256

### மன்னார் முன்னாள் எம். பி.

## சூசைதாசனின் கைத்துப்பாக்கி கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

முன்னாள் மன்னார் எம் பி. திரு எஸ். சூசைதாசனின் கைத்துப்பாக்கி இனந்தெரியாத நபர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 9-30மணி

(16-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்கவே இந்தியா ஆர்வம்!

## பிரச்னை நீடிப்பதை பிரிட்டனும் விரும்பவில்லை"

### பிரிட்டிஷ் அமைச்சர் யங் சீமாட்டி கூறுகிறார்

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்பதிலேயே மிகுந்த அக்கறை இருப்பதாக இந்திய அரசாங்கம் பிரிட்டனிடம் தெரிவித்துள்ளது" என்று இலங்கை வந்திருக்கும் பிரிட்டிஷ் அமைச்சரான யங் சீமாட்டி தெரிவித்தார்.

யங் சீமாட்டி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்தார். அவர் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யங்சீமாட்டி மேலும் கூறியதாவது:-

"சிறிய நாடான இலங்கை இனப் பிரச்னையால் பாதிப்படைவதைப் பிரிட்டன் விரும்பவில்லை. இந்த இனப் பிரச்னையைத் தீர்ப்பதிலேயே தனக்கு மிகுந்த ஆர்வமிருப்பதாக இந்திய அரசாங்கமும் பிரிட்டனிடம் தெரிவித்துள்ளது.

இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படாது நீடிப்பதை இந்தியாவோ அல்லது பிரிட்டனோ விரும்பவில்லை.

(16-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் குழு தலையீட்டால் இவ்வருடம் 'ராகிங்' இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்தில் புதிய கல்வியாண்டில் அனுமதிபெறும் மாணவர்களுக்கு பழைய மாணவர்களால் 'ராக்கிங்' எதுவும் செய்யப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைப் பீடத்துக்கான மாணவர்கள் கடந்த 25ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்திற்குச் சென்றுகொண்டிருந்த போது சில மாணவர்கள் 'ராக்கிங்' செய்வதற்கு முயற்சித்ததாகவும், தக்க சமயத்தில் ஒரு

[16-ம் பக்கம் பார்க்க]

## 48 மணி நேர மின்கம்பத் தண்டனை!

[யாழ் பாணம்]

திருட்டுச் சமபவங்களில் ஈடுபட்ட இரு இளைஞர்களுக்கு நேற்று யாழ்.நகரில் பகிரங்கமாக 'தண்டனை' வழங்கப்பட்டிருந்தது.

(16-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு புறப்பட்ட மூவர் கைது!

(கொழும்புத்துறை)

வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பிற்குச் சென்ற வடபகுதி வாலிபர்கள் இருவரும், அவர்களைக் கூட்டிச்சென்ற ஆசிரியரொருவரும் கொழும்பில் . பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்

(16ம் பக்கம் பார்க்க)

## 'பூஸா' விலிருந்து சிலர் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

காலி பூஸாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடபகுதி இளைஞர்களில் சிலர் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் காலி பூஸா முகாம் இராணுவ அதிகாரி கேர்ணல் ஈ. எச். பெர்ணண்டோவுடன் தொடர்பு கொண்டபோதே மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## "தமிழர் இனப்பிரச்னை நியாயமானதீர்வுகளைசிங்கள மக்கள்எதிர்க்கமாட்டார்கள்!

### சபையில் சரத் முத்தெட்டுவேகம!

[கொழும்பு]

"தமிழ் மக்களின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நியாயமான அரசியல் தீர்வுகளை சிங்கள மக்கள் ஒருபோதும் எதிர்க்கமாட்டார்கள்" என்று கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம கூறினார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் அவசரகால நீடிப்பு பிரேரணைமீது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சரத்முத்தெட்டுவேகம மேலும் கூறியதாவது:

"தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவுடனேயே நியாயமான அரசியல்தீர்வு இனப்பிரச்னைக்குக் காணப்படவேண்டும். இல்லையேல் படுமோசமான நிலைமையே ஏற்பட்டுவிடும்.

அரசாங்கம் அமெரிக்காவின் விருப்பப்படியே நடந்து

(16ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரகத்தில் இந்திய கற்கள்

(கொழும்பு)

இலங்கையில் அமைக்கப் பட்டுள்ள புதிய அமெரிக்கத் தூதரகக்கட்டிடத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பல கருங்கற்களே பொருத்தப் பட்டுள்ளன.

உறுதியும், கவர்ச்சியும்மிக்கவையாக காணப்படுவதாலேயே அவை இக்கட்டிடத்தில் பதிக்கப்பட்டுள்ளன.

[16-ம் பக்கம் பார்க்க]

### ★ எம். ஜி. ஆர். உடல் நிலை:

## சங்கீத இசையை ரசிக்குமளவிற்கு திருப்தி!

### ஜப்பானிய நிபுணரை அழைக்கஏற்பாடு

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல் நிலையில் தொடர்ந்து திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினமிரவு அவர் நன்கு தூங்கினார். பின்னர் கர்நாடக சங்கீத இசையை செவிமடுத்து ரசிக்குமளவிற்கு அவரது தேகநிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன.

தமிழக சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டேயின் தற்போதைய அறிக்கை விபரம் வருமாறு: நரம்பியல் நிலைமை திருப்தி; நுரையீரல் செயல்பாடு திருப்தி.

ஈ. ஸி. ஜி. பரிசோதனைகள் இருதய நிலைமை சீராக இருப்பதைக்காட்டியுள்ளன. நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் உள்ளன.

முதலமைச்சரின் நிலைமை நன்கு சீரடைந்து வருவதால்

(16ம் பக்கம் பார்க்க)

## மாதகலில் ராணுவம்படகுகளை லொறியில் ஏற்றிச் சென்றது!

### கடற்கரைவாசிகள் வயல்வெளியில் தஞ்சம்!!

(மாதகல்)

மாதகல் சம்பில் துறைமுகத்தில் கட்டிவைக்கப்பட்டிருந்த இரு மீன்பிடிப் படகுகளை நேற்று முன்தினம் நண்பகல் இராணுவத்தினர் லொறி ஒன்றில் ஏற்றித் தம்முடன் கொண்டுசென்றனர். இவற்றுடன் இளைஞர் ஒருவரையும் அவர்கள் அழைத்துச் சென்றனர்.

மாதகல் தற்காலிக இராணுவ முகாம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதை யடுத்து இராணுவம் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டிருந்தது. இதனால் இப்பகுதி மக்களிடையே மீண்டும் பதறம் நிலவியது.

சம்பில்துறைமுகத்தில் கைப்பற்றிய இரு பிளாஸ்திக் மீன்பிடிப் படகுகளையும் பண்டத்தரிப்பிலிருந்து கொண்டுவந்த லொறியொன்றில் ஏற்றியே இராணுவத்தினர் தம்முடன் கொண்டுசென்றனர். அந்த லொறிவண்டி பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினமிரவு 7-30 மணியளவில் மாதக

[16ம் பக்கம் பார்க்க]

# அசி ஊளம்பரம்

## விற்பனைக்கு

Bairaha Farms Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 29ந் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, சொக்குவில். 474

11 அடி அகலம் 40 அடி நீளம் கொண்ட கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: ஏ கனகராஜா, 75, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 456

ஹொண்டா எக்ஸ்பிரஸ் NC 50, 85 ஸ்ரீ மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பே. பரமசாமி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு. 455

புதிய வீடு 4 அறைகள் மாபிள் நிலம், மற்றும் எல்லா வசதிகளுடன் விற்பனைக்குண்டு. 187, 3ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22029 471

கிளிநொச்சி - திருநகர் பிரதான வீதிக்கு அருகாமையில் ½ ஏக்கர் வீட்டுக்காணி விற்பனைக்குண்டு. குமார், 93, ஜெயந்திநகர், கிளிநொச்சி. 390

யாழ்.அரியாலை யூதாததேயு ஆலயத்திற்கு அருகாமையில் இல. 7 காணி இரண்டு பரப்பு கிணற்றுடன்விற்பனைக்குண்டு தொடர்பு; எற்வேட் சேவியர், 15, ரெம்பிள்ரோட், யாழ்ப்பாணம். 469

டெலிக்கா வான் 38சிறி உன்னத நிலையில் ஒருவர் பாவனையில் 5 கதவுகளுடன் விற்பனைக்குண்டு. 187, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22029 472

நல்லஇன 3மாதஅல்செசன் (Alsation) நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: குமாரசாமி, 435/10, கோவில் வீதி, நல்லூர். 465

அழுத்தமான அம்மி, ஆட்டுக்கல், திருகை, உரல் அனைத்தும் கைதேர்ந்த தொழில்நுட்பக் கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்போர் வவுனியா சூரியா ஸ்டோர், யாழ் நகர் கஸ்தூரியார் வீதி, இந்திரா ஸ்ரோர்ஸ் போத்தல் கடையிலும் கிடைக்கும். 173

பஸ் நிலையத்திலிருந்து 150 யார் தூரத்தில் மாட்டினரோட் வீதியில் 1 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் உபதபாற்கந்தோருக்கெதிராக இருக்கும் ராஜரட்ணம் என்பவரிடம் தொடர்பு கொள்ளவும் 473

கே.கே எஸ். வீதி ருதனுர் மடம் சந்தியில் வியாபார ஸ்தாபனமாகவோ/ வேறு தேவைகட்கு யன்படக்கூடிய ஒரு பரப்புக்காணி மாடிக் கட்டட அமைப்புக்குரிய தளத்துடன் கீழ்மாடி பூர்த்தியான நிலையில் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: உ சந்தானகிருஷ்ணன், உடுவில்மகளிர் கல்லூரி, சுன்னுகம் 448

யாழ். வளாகம், இந்துக்கல்லூரி. இந்துமகளிர் கல்லூரி ஆகியவற்றிற்கு அண்மையில் தண்ணீர் தாங்கி, தொலைபேசி வசதியுடையதும்1500சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட வீடும் இரண்டேமுக்கால் வளவும் (உடன் காலியான நிலையில் இதே வீடு வளவுடன் சேர்ந்த பிரத்தியேகமான ஒன்றேகால் பரப்பும் காணியும் விற்பனைக்குண்டு பார்வையிடுவதற்கும், ஏனையவிபரங்களுக்கும் கிழமை நாட்களில் வேலை நேரங்களில் 23703 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் அல்லது விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 463 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 463

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, மானிப்பாய் ரோட்டில் 7பரப்புக்காணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கு அருகாமையில் 7 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி எட்வேட்ஸ், மே/பா J. B. செல்லையா, ''பவிலியன் வியூ'', வட்டுக்கோட்டை, தொலைபேசி வட்டுக்கோட்டை 232. (467)

நல்ல நிலையிலுள்ள 38 ஸ்ரீ Delica Van விற்பனைக்குண்டு. வேறு பெரிய வாகனங்களிற்கு மாற்றியும் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: க. ராஜதுரை, முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 429

நாலு பல வர்ண வைபர் கிளாஸ் (Fibre Glass) கதிரைகளும் நடு மேசையும் ரூபா 2300/- உடன் விற்பனைக்குண்டு புதிய இலக்கம் 262, பழைய இலக்கம் 66, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 386

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக கடை அல்லது மில் கட்டக்கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். வி. நடராசா (அதிபர்), 'சிருப்பர் வளவு'. கோண்டாவில் கிழக்கு, (பலாலி ரோட் சந்திக்கு அருகாமையில்), கோண்டாவில் 421

கோப்பாய் வடக்கு சூசையப்பர் கோவிலடியில் 1½ பரப்புக் காணியில் கீழ்மாடி(கடை) மேல் மாடி (குடியிருப்பு வசதிக் கட்டடம) கொண்ட கட்டடம் (மின்சார, கிணறு, மலசலகூட வசதியுடன்) விற்பனைக்குண்டு தொடர்பு: செல்லர் கந்தசாமி, சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 436

முருங்கன் நானுட்டான் பிரதான வீதி அருகாகையில் கஸ்மீர் கமம் 6½ ஏக்கர் பின்புறம் நானுட்டான் குளம் குழாய் கிணற்றுடன் வீடு கட்ட மேட்டு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 154, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 438

Lister லையிற் என்ஜின் உட்பட ஐஸ் பழப்பெட்டி, பிளான்ட் (Plant) ஐஸ்பழ வான் இவைகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு; 91(149), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பணம். 442

நடமாடும் கல்யாணக் கொட்டகை 16x40 அடி, கதிரைகள், வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர் 441

நாவற்குழி சந்தியில் இருந்து கேரதீவு ரோட்டில் ஒருமைல் தூரத்தில் ரோட்டு ஓரமா 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: சி தில்லைநாதன் (ஆசிரியர்), நாவற்குழி, கைதடி 417

நல்ல நிலையில் முதல் உரிமையாளரின் Vespa 150 Super ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: S குமார், 204, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 443

தொழில் ஸ்தாபனம் அமைக்கக்கூடிய மின்சார வசதியுடன் 10 பரப்பு காணி நுணுவில் சந்திக்கு கிட்ட கண்டி ரோட்டில் விற்பனைக்குண்டு. ஸ்ரீவள்ளி காப்பி கிளப், சாவகச்சேரி. 402

## விற்பனைக்கு

எம்முடைய பாவிப்பிலுள்ள 27 ஸ்ரீ 2000 and 33 ஸ்ரீ 9000 இலக்கத் தொடர்புள்ள Morris Diesel and Bedford Petrol வான்கள் உடன் விற்பனைக்குண்டு. 29-10-84க்குப் பின் தொடர்புகொள்க: முகாமையாளர், Autos Ltd, 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 453

## FOR SALE

Transformers, Core Laminators, Voltmeters and Ammeters Imperial Engineers, Opp Tele. Engineering K. K, S. Road, Tellippalai. 398

## WANTED

Car in good condition required. Immediate payment. No brokers please Jegendran, 96, Ambalavanar Road. Athiady, Jaffna. P' hone 24398 458

## தேவை

அச்சுக் கூடத்தில் சக வேலைகளையும் செய்யக்கூடிய பிளேட்டின்மெஷின்மைண்டர்தேவை. நேரடியாகத் தொடர்புகொள்ளவும். அன்பு அச்சகம்,248/5, கே கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 434

யாழ்நகரிலுள்ள பிரபல்யமான என்ஜினியரிங் தொழிற்சாலைக்கு பழகுனர், அனுபவமுள்ள ஓட்டுனர், பொருத்துனர், கடைச்சல் வேலையாட்கள் உடன் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். முடிவுதிகதி 3-11-84 விளம்பர இல. 461 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 461

ஐஸ் தொழிற்சாலையில் 60 குதிரைச்சக்தி [H.P] றஸ்ரன் எஞ்சின் இயக்குவதற்கு அனுபவம் உள்ள றைவர் தேவை மெக்கானிக் அனுபவம் உள்ளவர்கட்கு முன்உரிமை உண்டு சகல விபரங்களுடன் 10-11-84 சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும் முகவரி: நியூ கனகம் ஐஸ் தொழிற்சாலை, பிரதான வீதி, முல்லைத்தீவு 385

கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட விஸ்வகுல பெண்ணிற்கு அரசாங்க பதவிவகிக்கும் மணமகன் தேவை. இந்து மதம் வயது (37-40) சீதனம் வீடு, நகை காசு 50,000 கொடுக்கப்படும் விளம்பர இல. 407 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 407

ஊதுபத்தி, பற்பொடி, வாசனைத் தைலங்கள் ஆகிய பல சிறு கைத்தொழில்தெரிந்த ஒருவருக்கு பங்காளர் அல்லது தொழில்முறைகளைக் கற்க விரும்புபவர்கள் தேவை. தொடர்பு: சி. மகாதேவன் 18 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 431

## காணவில்லை

நடா என்று அழைக்கப்படும் நடராஜா என்னும் சிறுவனைக் காணவில்லை கடைசியாகக் கறுப்பு நிற காற்சட்டையும், நீலநிற டீசேர்ட்டும் அணிந்திருந்தார். அவர் இருந்த இடம் கோண்டாவில் மேற்கு, முத்தெட்டு மடலேன், வயது 10, உயரம் 4 அடி நிறம்: கறுப்பு இவர் இருக்கும் இடத்தை அறிவிப்பவர்களுக்கு அல்லது கூட்டிக்கொண்டு வந்துகொடுப்பவர்களுக்கு தகுந்தசன்மானம் வழங்கப்படும் விலாசம்: சிங்கராஸ் பார்பஸி, 25, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 428

C 90 மோட்டார் சைக்கிளின் இல: 88 ஸ்ரீ 3481, இன் சூரன்ஸ்ரைக்ஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்துசிவன்பண்ணை ரோட்டிலுள்ளசரஸ்வதி இலெக்ரிக்கல் உரிமையாளரிடம் ஒப்படைக்கவும். 468

## வகுப்புகள்

''வீடியோ விசுவல் ரீச்சிங்'' முறையில் மேலை நாடுகளில் பயன்படுத்தப்படும் புதிய முறையில் வீடியோ நாடாக்களை உபயோகித்து, யாழ் நகரில் முதன்முதலாக ரெலிவிசன் மூலம் செயல்முறை விளக்கங்கள் உட்பட பயிற்சியளிக்கப்படும். குறிப்பிட்ட தொகையினரே சேர்த்துக் கொள்ளப்படுவதால் முன் கூட்டியே பெயர்களை பதிவுசெய்து கொள்ளுங்கள் ஆரம்பம்: 10-11-84 சனி காலை 9.00மணி ''பிரகாசன் எடியூ ரெக்'' மே/பா. ஐ. என். எஸ். இன்சிரியூற், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு, புதன் நாட்களில் காலை 9-00—10-00 மணி வரை மேற்கூறிய முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளலாம். 392

தபால் மூலம் றேடியோ—ரெலிவிசன் பயிற்சி நெறியை தபால் மூலம் கற்கவிரும்புவோர் முத்திரையுடன் கூடிய நீண்ட மேலுறை அனுப்பி விபரம் பெறலாம் ''பிரகாசன் எடியூ ரெக்'' மே/பா. ஜீ. பாலமுருகன், நுணுவில், கல்வயல் வீதி, கல்வயல், சாவகச்சேரி. 393

பெண்களும் வேலைவாய்ப்புப் பெறவேண்டும் என்ற நோக்கில் பெண் போதனுசிரியர் மூலம் வடபகுதியில் முதன் முதலாக றேடியோ - ரெலிவிசன் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. முதலில் வரும் 10 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பம் 10-11-84 சனி காலை 9-00 மணி ''பிரகாசன் எடியூ ரெக்'' மே/பா ஐ. என். எஸ். இன்சிறியூற் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். விபரங்களுக்கு ''சினி வீடியோ'' 253 1/1 ஸ்ரான்லி வீதியில் நேரில் தொடர்பு கொள்ளவும். 395

வெளிநாடு செல்வோருக்கென்று 3மாத காலத்தில்துரித ரேடியோ - ரெலிவிசன் பயிற்சி வகுப்புகள்ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆரம்பம் 10-11-84 சனி காலை 9 மணி. ''பிரகாசன் எடியூ ரெக்'' மே/பா ஐ. என். எஸ் இன்சிரியூற், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ''பிரகாசன் எடியூ ரெக்'', மே/பா ஸ்கந்தா அக்கடமி, சாவகச்சேரி. விபரங்களுக்கு: ''சினி வீடியோ'', 253 1/1, ஸ்ரான்லி வீதியில் நேரில் தொடர்பு கொள்ளலாம். 394

## வாடகைக்கு

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சமீபமாக வேலைபார்க்கும் பெண்கள் அல்லது மாணவிகள் தங்க சகல வசதிகளுடன் கூடிய அறை அல்லது அனெக்ஸ் ஆக ஒரு பகுதி வாடகைக்கு விடப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 406 c/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 406

## குத்தகைக்கு

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்திக்கருகாமையில் பிரதான வீதியில் அமைந்திருக்கும் அரிசி ஆலை குத்தகைக்கு கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும் வ. நடராசா, (அதிபர்), 'சிருப்பர் வளவு', கோண்டாவில் கிழக்கு (பலாலி ரோட் சந்திக்கருகாமையில்), கோண்டாவில். 422

## வாடகைக்கு

யாழ். மாநகராட்சிமன்ற எல்லைக்குள் அல்லது அதிலிருந்து சில மைல்களுக்குள் ஒரு தரமான வீடு தேவை. எஸ் ஜோன், 59, ஒல்பாக்ரோட். யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அறிவிக்கவும். 452

151-ம்இலக்கம் கஸ்தூரியார் வீதியிலுள்ள இரத்தினம் கட்டிடத்தில் (லக்சலா மேல்மாடி) 1000 ச.அடியில் சகல வசதிகளுடன் அலுவலகத்திற்குகந்த இடமும், அதன் கீழ் உள்ள இரண்டு கடைகளும் உடனடியாக வாடகைக்கு விடப்படும். தொடர்பு இ. நீலகண்டன், 699/2, கே. கே, எஸ். வீதி, தொ. இல: 23610, யாழ்ப்பாணம். 432

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**மரியதாஸ் கிருபாகரன்**

யாழ். கந்தர் மடம் இல: 285 அரசடி வீதியைச்சேர்ந்த மரியதாஸ்-லீலாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிருபாகரன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று 28-10-84 ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, சித்தி, மாமா, அத்தை ஆகியோர் வாழ்த்துகிறார்கள். 240

## விளம்பரம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 4000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனையாக உள்ளன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெற்ற விண்ணப்ப படிவங்களில் முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து 30-10-84 செவ்வாய்க்கிழமை பி.ப. 3-00 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கிற்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பணவைப்பு ரூபா 500/-

பதில்
பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப நோ கூ. சங்கம், 426

## வீடியோ புளொசம்ஸ்

உங்கள் சகல வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோ படமாக்கி கொடுப்போம்.
எங்கள் பணி இந்தியா, கொழும்பு போன்ற இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது
**வீடியோ புளொசம்ஸ்**
30, சிவப்பிரகாசம் ரோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(430)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

## எண்பதுக்கு எண்பது

இன்றைய தலையங்கம் ''ஐம்பதுக்கு ஐம்பது'' என்ற அரசியலில் அடிபட்ட சொல்லோவியத்தை நினைவூட்டும் ஆனால் இரண்டிற்கும் எவ்விததொடர்புமில்லை.

வண்டி வண்டியாக வீண்பேச்சுக்களைப் பேசுவதைக் காட்டிலும், முறையற்ற உணர்வுகள் பலவற்றை வளர்த்துக் கொள்வதைக் காட்டிலும் எள்ளத்தனை அற நெறியையும் சமுதாய நீதியையும் வளர்ப்பது நல்லது.

இதனை உணர்ந்து சமூகநீதியென்ற கோட்பாட்டை ஸ்தாபன ரீதியாக விளங்கவைத்தவர் நாட்டின் தலை சிறந்த சிந்தனையாளரும் கத்தோலிக்க மதபெருங்குருவுமான அதி வணக்கத்துக்குரிய பீற்றர்பிள்ளை அவர்கள். இன்று அமரருக்கு எண்பது.

47 வருடங்களாக சமூகநீதிக்கு அரும்பணிபாற்றிவரும் இந்த நிறுவனம் இவ்வருட விருதை சர்வதேச புகழ் பெற்ற சட்டநிபுணர் திரு. சோ. நடேசன் Q.C. அவர்களுக்கு வழங்கியிருக்கிறது இவருக்கும் இன்று எண்பது.

சர்க்கரைப்பந்தலில் தேன்மாரிபொழிந்த சுவையுடைய செய்தி.

மத, மொழி, நிறம், இனம் போன்ற வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட ''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'' என்ற திருமூலரின் திருமந்திரத்துக்கு ஒளியூட்டும் இரு தாரகைகளே இவ்விரு குரவருமென நாம் வாழ்த்துகின்றோம்.

தெய்வ நம்பிக்கையில் உதயமாகும் சகோதரத்துவமும் மனிதாபிமானமும் அழியாவரம் பெற்ற அருமந்த பண்டங்கள்.

# மனிதஉரிமைக்கும் சமூக நீதிக்கும் அயராதுழைக்கும் நடேசன் கியூ. ஸி.

ஈராயிரத்துஐந்நூறுஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழ்க் கவிஞன் பாடினன்; ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று. மனித சகோதரத்துவமும், உலகளாவிய அன்புமே சகல சமயங்களினதும் உள்ளார்ந்த கருத்தாகும் இதிலிருந்தே, வாழும் உரிமை, சிந்தனை உரிமை, பேச்சுரிமை ஆண்பெண்களுக்கிடையில் சமத்துவ உரிமை போன்ற மனித உரிமைகள் ஊற்றெடுக்கலாயின சகல சமயங்களினதும் திருநூல்களில் இந்த உரிமைகள் எல்லாம் இடம்பெற்ற போதிலும் பல ஆண்டு காலமாக இவை செயல் அளவில் பயன் படுத்தப்படவில்லை உலகின் பெரும் பகுதிகளில் மனிதனுக்கு மனிதன் மனிதத் தன்மையின்றி நடந்துகொள்வதைக் கண்டிருக்கிறோம். மனிதனே மனிதனின் பரம வைரியாக மாறிவிட்டிருக்கிறான்.



### சமூக நீதியின் முன்னோடி

இலங்கையில் பிதா பீட்டர் பிள்ளை அவர்கள் சமூக நீதியின் முன்னோடித் தூதராவார். சர்வதேசப் பிரகடனத்தின் 22, 25 வது ஷரத்துக்களில் அவர் எதற்காகப் பாடுபட்டாரோ அவை இடம் பெற்றுள்ளன. 1937ம் ஆண்டு இந்த இயக்கத்தை பிதா பீட்டர்பிள்ளை சமூக ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஆரம்பித்தார்.

**சமூக நீதிக்கும் மனித உரிமைக்கும் சிறந்த பணியாற்றியமைக்காக 1983ம் ஆண்டுக்கான பீட்டர்பிள்ளை மன்றவிருது (Peterpillai Foundation Award) பிரபல சட்டவல்லுநரும், இராணிவழக்குரைஞரும் மனிதஉரிமைக்காப்பாளருமான திரு. சோமசுந்தரம் நடேசன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் கொழும்பில் இடம்பெற்றபோது விருதினைப்பெற்றுக்கொண்டு திரு. நடேசன் நிகழ்த்திய ஆங்கில உரையின் சில பகுதிகளை இங்கு தமிழில் பெயர்த்துத் தருகின்றோம்.**

ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் பின்னர் சோவியத் ஒன்றியம் ஆகியவற்றில் புரட்சிகள் நடந்துள்ளன.

உரிமைகள் பற்றிய சட்டங்களில் மனித உரிமைகளுக்கும் மனித உரிமைகள் பற்றிய பிரஞ்சுப் பிரகடனத்திலும் மனித உரிமைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது''

1948ம் ஆண்டு டிசமபர் மாதம் ஐ நா. வினல் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமானது மனித உரிமைகள் தொடர்பான மனிதஇனத்தின் சிந்தனைக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது. இதில் சமூக நீதியும் அடங்கும்.

பிதா பீட்டர் பிள்ளையின் இறைசேவை மனித சேவையாகவிருந்ததுஅவர் ஒரு மனித நேசர். உண்மை ஜனநாயகத்தில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார். அவரது சமூக உணர்வுகளும், மனித நலனுக்கான அவரது அக்கறையும் நமக்கெல்லாம் உந்து சக்தியாக அமைந்தன.

இந்த விருதினை நான் மிகுந்த பணிவோடும், மனித உரிமைகளுக்காக நான் ஆற்றிய சேவை மிகவும் சிறியதே என்ற உணர்வோடும் பெற்றுக்கொள்கின்றேன்.

1923ம் ஆண்டு காலத்திலிருந்தே நான் மனிதஉரிமைகளிலும் சமூகநீதியிலும் அக்கறை கொண்டு வந்திருக்கின்றேன். 1931ம் ஆண்டு நான் ஒரு வழக்கறிஞரானதின் பின்னர் ஜனநாயக உரிமைகள் தொழிலாளர் உரிமைகள் போன்றவை சம்பந்தமான பல வழக்குகளில் ஆஜராக நேர்ந்துள்ளது.

> ''நாட்டில் நீதி நிலை நாட்டப்பட வேண்டுமானால் பொறுப்பான பதவிகளில் அமர்ந்துள்ளவர்கள் நேர்மையாளர்களாகவும்பற்றறுத்தவர்களாகவும் நன்நோக்கம் படைத்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் அரசியல் காரணங்களுக்காக தமது வழியிலிருந்து பிறழாமல் நீதியை செயல்படுத்த வேண்டும்''

### ஓய்வுபெறும் நோக்கம்

1974க்குப் பிறகு எனது 75 வயதளவில் ஓய்வுபெற்றுக் கொள்ளும் நோக்குடன் படிப்படியாக எனது தொழில் தொடர்பான வேலைகளைப் படிப்படியாகக் குறைத்து வரலானேன். ஆனால் மனித உரிமைகள் விடயத்தில் இது சாத்தியமில்லை குறிப்பாக ஜனநாயக உரிமைகள் இயககம் என்னை அவ்வாறு செய்வதினின்றும் முற்றாகத் தவிர்த்துவிட்டது.

வாழ்க்கையேபணி, பணியே வழிபாடு என்கிறது உபநிடதம்

எனது வாழ்வின் முதியகாலத்தில் ஜனநாயக உரிமைகள் இயக்கத்தினர் உறுப்பினன் என்றவகையிலும் மக்கள் நலனுக்காகவும் பலபோராட்டங்களை நடத்தியுள்ளேன். சிலவற்றில் வென்றேன், பலவற்றில் தோற்றேன். லட்சியத்

(14-ம் பக்கம் பார்க்க)

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605



# அடியார்க்கு நல்லார் இலங்கையர் என நிரூபித்த செகந்நாதன்

கந்தையா குணராசா



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் 'அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி' என்ற ஓர் அரிய நூலினைப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது இந்நூல் 1941 ஆம் ஆண்டு தென்னிந்தியப் பதிப்பகம் ஒன்றினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. வேலணையைச் சேர்ந்த புலவர் பொ. செகந்நாதன் என்பவர் அதனை ஆக்கியிருந்தார். இந் நூலினைப் படித்தபோது வியப்பும் நம் நாட்டவர் ஒருவர் ஆக்கிய நூல் என்பதால் பெருமிதமும் ஏற்பட்டன படித்து முடித்தபோது. நிச்சயமாக இந்நூல் தத்துவ கலாநிதிப் பட்டத்திற்கு விதந்துரைக்கத் தக்க ஆராய்வு நூல் என்ற எண்ணம் மனத்தில் தோன்றியது.

நமது நாட்டில் பிறந்து வளர்ந்து இலக்கிய ஆக்கங்கள் மூலம் தமிழைப் பெருமைப் படுத்தும் அறிஞர்கள் பலரை நாம்சரிவரக்கணிக்கவில்லை மதிக்கவில்லை. நாற்பத்துமூன்றுவருடங்களுக்குமுன் ஆராய்ச்சி நூல் ஒன்றினை எழுதி வெளியிட்ட அறிஞர் பெருமகன் குறித்து நாம் மறந்துவிட்டோம்.

அவரைச் சந்திக்கவேண்டும் என்ற அவா மூண்டது. கண்டேன். அளவளாவியபோது அவரது பேரறிவு புலனாயிற்று. செகந்நாதனவர்களுக்கு இன்று வயது 72 ஆகின்றது. வயோதிபத்தின் தளர்ச்சியின்றி இளைஞர்போலக் கம்பீரமாகக் காணப்பட்டார். 1912 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வேலணையில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை வேலணை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும், சரஸ்வதி வித்தியாசாலையிலும் பெற்றார் பின்னர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார் 1933 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். வேலணை சரஸ்வதி வித்தியாசாலை, இடைக்காடு புவனேஸ்வரி வித்தியாசாலை, கல்வியங்காடு செங்குந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் சேணியதெருப் பாடசாலை, நயினாதீவு தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பல

செகந்நாதன் அவர்கள் தமது பதினெட்டாவது வயதில் கவிதைகள் ஆக்கத் தொடங்கினார் ஏட்டில் இடம்பெறாத, அச்சு வாகனமேறாத கவிதைகள் பல நூறு. வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மை மீது பல பதிகங்களை இவர் பாடியுள்ளார். அவை அச்சிலுள்ளன.

''கோவிலோடு தொடர்புடைய சிலரும் விழாக்காரர்களும் என்னை அவ்வம்மன் பேரில் ஊஞ்சற் பாக்கள் பாடித்தருமாறு கேட்டார்கள். பதி புண்ணியத்தை யாம் எவ்வாறு மறுக்க வல்லோம். அவர்கள் கேட்டவண்ணம் ஊஞ்சற் பாக்களை இயற்றினேம்'' என்கிறார். அத்தோடு வேலணை முத்துமாரியம்மை மீது பதிகமும், புதுத் தேர் பவனி வந்தபோது தேருக்கு வரவேற்பும் தேவிக்கு விண்ணப்பமும் பாடியிருக்கின்றார். புதிய தேரில் புதிதொரு அம்மன் விக்கிரகத்தை வைத்து ஊர்வலம் செய்ய முயன்றபோது அதனை எதிர்த்து, ''கோயிலெழுந்தருளியை மாற்றி வழிபடற்கு ஏயநூலொன்றிலும் விதியில்லை'' என்று பாடல்களில் தனது எதிர்ப்பைத் தெரிவித்து புராதன விக்கிரகத்தையே ஊர்வலம் வரச் செய்திருக்கிறார். செகந்நாதனின் கவிதைகளைக் கேட்ட, படித்த வேலணையூர் மக்கள் அவருக்குப் புலவர் என்ற கௌரவத்தை அளித்தார்கள்.

புலவர் செகந்நாதன் அவர்களின் இலக்கியப் பணிகளில் தலையாயது என அவர் ஆக்கிய ''அடியார்க்கு நல்லார் வரலாற்றாராய்ச்சி'' என்ற நூலினைக் குறிப்பிடலாம். அடியார்க்கு நல்லார், பதினைலாம் நூற்றாண்டில் ஈழநாட்டுச் சிங்கைத் தமிழ அரசன் குணபூஷணன அமைச்சராய், அவன் படைத் தலைவனை பொப்பண்ண காங்கேயன் ஆதரவு பெற்று, இந்நாட்டிலிருந்தே சிலப்பதிகாரவுரையை இயற்றினார் என்பது இந்த ஆராய்ச்சியாளரின் துணிபாகும். இதற்குப் பல சான்றுகளும் காட்டி 180 பக்க அளவில் மிகவிரிவாக செகந்நாதன் அவர்கள் இதனை எழுதி முடித்துள்ளார்கள். சிலப்பதிகாரத்திற்கு முதன் முதல் உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார் ஆவார்.

அந்த உரையை எழுதிய அடியார்க்கு நல்லாரும இலங்கையில் அமைச்சராகவிருந்த அடியார்க்கு நல்லாரும் ஒருவரென செகந்நாதன் அவர்கள் இந்த ஆராய்ச்சி நூலில் நிறுவியிருக்கின்றார்.

''இம்முடிவு புதுமையேயாயினும் தக்க புறச்சான்றுகளோடு மாறுகொள்ளாதவரையில் உறுதியுடையதென்பதில் இழுக்கில்லை எனலாம் இந்நிலையில் இவ்வாசிரியரின் அறிவும் ஆற்றலும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டற்குரியன...'' என 'செந்தமிழ்' பத்திரிகையில் மதுரைத்தமிழ்ச் சங்கம் மதிப்புரை எழுதியிருக்கின்றது.

''இந்நூல் புதுவது கிளக்கும் ஓர் ஆராய்ச்சி நூலாகும் முத்தமிழ்க் கருவூலமாகிய சிலப்பதிகாரத்துக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லாரது சரித்திர சம்பந்தமாக, இதுகாறும் தமிழுலகம் அறியாத சில முக்கிய செய்திகளை இந்நூல் தக்க ஆதாரங்காட்டி விளக்குகின்றது கொங்குமண்டலத்தில் பிறந்த அடியார்க்கு நல்லார் ஈழமண்டலத்தில் அமைச்சுரிமை பூண்டு வாழ்ந்தாரென்றும், அவ்வாறு வாழ்ந்த காலத்தில்தான் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதினார் என்றும், யாழ்ப்பாணத்திற் கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாராய்ச்சி நூலாசிரியர் திரு. பொ. செகந்நாதன் அவர்கள் நிருபித்துள்ளார்கள். இவர்களது மதிநுட்பத்தையும், ஆராய்ச்சித்திறனையும் யான் மிகவும் பாராட்டுகிறேன்'' என யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் அறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள் மதிப்புரை தந்துள்ளார்.

தமிழ்நாட்டுப் பேரறிஞருள் ஒருவரும் நாவலருமாகிய சோமசுந்தர பாரதியார் அவர்கள் இந்நூலினைப் பற்றிப்பின் வருமாறு கூறுகிறார். ''இப்போது நல்லூர் எனப்படும் பழைய சிங்கையில் மந்திரியாய் இருந்த பண்டிதமணியான அடியார்க்கு நல்லாரே இளங்கோவடிகளின் முத்தமிழ் முதற்காப்பிய விரிவுரைக்காரரானால் பெரும் புலவர் அருமரசு விளையாட்சிக்குரியராம் பெருமை நிறுவிய சீர் அடியார்க்கு நல்லார்க்கும் அவ்வுண்மைகண்டு வெளியிட்ட தனிச்சிறப்பு திரு. செகந்நாத பண்டிதர்க்கும் உரியவாகும், தம் நுண்மதியால்எண்ணு பல சான்றுகளை இணைத்திந்தத் துணிபுவலியுறுத்தமுயன்றெழுதிய இக்கட்டுரை, இப்பண்டிதரின் கல்விவளம், ஏதடுக்கும் வாதவலி, உரைப்பவற்றை வற்புறுத்தும் உள்ளவுரன், யாருங்கூறுச்செய்திகளை ஆராயும்பேரார்வம் முதலிய சால்புகளை விளக்குகின்றது.''

மகாவித்துவான் புன்னாலைக் கட்டுவன்பிரம்ம ஸ்ரீசிகணேசையர் அவர்கள் அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி நூலின் சிறப்பினை வியந்து பாராட்டியுள்ளமையொன்றே இந்நூலின் சிறப்பிற்குப் போதுமானது அவர் கூறுகிறார், ''இந்நூல் தமிழகத்திற்கு ஓர் அரிய விருந்தாகும் இந்நூலிலிருந்து செகந்நாதனுடைய பொறுமையான ஆராய்ச்சி வன்மையும் நுண்மதியும் தெரிகின்றது.''

செகந்நாதன் அவர்களின் பணியினைப் பத்திரிகைகள் அக்காலத்தில் பெரிதும் பாராட்டியிருக்கின்றன.

அறிஞரும் புலவரும். பண்டிதருமான பொ. செகநாதனின் ஆற்றலை அறிஞர்ப்பெருமக்கள் பலரும் இனங்கண்டிருக்கிறார்கள். அவரது ஒரேயொரு ஆராய்ச்சி நூலிலிருந்து அவரின் திறனையும் மதிநுட்பத்தினையும் உணர்ந்துபோற்றியிருக்கிறார்கள். இவரால் தமிழுலகம் பெருமைப்படலாம்.

செகநாதன் அவர்கள் இப்போது புதியதொரு ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைத்து வருகிறார். யாழ்ப்பாணச் சரித்திரம்; தமிழரசர் வரலாறும் சாலமும்'' -என்பது அவரின் ஆராய்ச்சியால் வெளிவரவிருக்கும் புதிதொரு ஆய்வு நூலாகும். இந்த நூலின் எழுத்துப் பிரதி நிறைவுறும் கட்டத்தை யடைந்துவிட்டது, மூன்று தசாப்பதங்களாக ஆராய்ந்து கண்டமுடிவுகளை இந் நூலில் விளக்குகிறார். இந் நூல் விரைவில் அச்சுவாகன மேறவேண்டும். வரலாற்றுத் துறைக்கும் ஆராய்ச்சித் துறைக்கும் அவர் அளிக்கும் இன்னொரு கொடையாக அது அமையும் என நம்பலாம்.

## கீரையோ கீரை

மழை காலத்திலும் பனி காலத்திலும் மத்தியானத்தில் தூதுவளை ரசம் வைத்துச் சாப்பிட, ஜலதோஷம் பிடிக்காது. கோடையில் மணத்தக் காளிக்கீரை சூப் சாப்பிட உடம்பில் இருக்கும் நெருப்பு அப்படியே அணைந்துவிடும். வாய்ப்புண், வயிற்றுப்புண் எல்லாம் உடனடியாக ஆறிவிடும். சித்திரை, வைகாசி அறுபது நாளும் தொடர்ந்து பொன்னாங்காணிக்கீரை சாப்பிட்டுவந்தால் பகலிலேயே நட்சத்திரத்தைப்பார்க்கலாம். என்பார்கள்.

அகத்திக்கீரை புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு அற்புதமான மருந்து நுரையீரலைப் பாதுகாக்கிறது. உடம்பைச் சத்தோடு வலுவாக வைத்திருக்கிறது. வயிற்றுப் புண்ணுக்கு அகத்திக்கீரை என்றொரு பழமொழியே உண்டு.

சர்க்கரை வியாதிக்கு முருங்கைக்கீரை கண்கண்ட மருந்து அது பசியைத்தாங்கும். முருங்கைக்கீரையில் இரும்புச்சத்து உண்டு. வைட்டமின் வகைகள் அதிகம் உண்டு முருங்கைப்பூ ஆண்மை நரம்புகளை முறுக்கேற்றும்.

மஞ்சள் கரிசலாங்கண்ணிக் கீரை குடிகாரர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ஈரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு மாத்திரைகள் இதிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன.

குறிஞ்சாக்கீரையும் வயிற்றுப்புண்ணுக்கும் சர்க்கரை வியாதிக்கும் மருந்தாகும்.

சிறுநீர்நிறையப்போகவேண்டுமானால் பசலைக்கீரை சாப்பிடுங்கள் எந்தப் பெண்ணும் கர்ப்பமான நாளிலிருந்து ஆறு மாத காலம் தொடர்ந்து பசலைக்கீரை சாப்பிடவேண்டும். பிரசவம் சுலபமாக அமையும்.

'மில்க்வைற்'

## கடற்கோட்டை

### வாசகர் கருத்து

● கடல்கோட்டை நாவல் சரித்திரம் திறமையாகப்பவனி வந்துவிட்டது கடல்கோட்டை கதை மூலம் 'ஈழநாடு' ஒரு பெரும் மகத்தான பணியைச் செய்துள்ளது. யான் எத்தனையோ நாவல்கள், சரித்திர நவீனங்கள் ஆகியனவற்றைப் படித்திருக்கிறேன். கடல்கோட்டை துடிதுடிப்புள்ள உயிர்ச்சத்தையும் சரளமான போக்கையும் ஆவலோடு வாசிக்க உந்தும் சக்தியையும் கொண்ட உண்மை வரலாற்றைப் பிரத்தியேகமாகத் தந்த நாவல் சரித்திரமாகவே பிறந்துள்ளது.

சு. து. ஷண்முகநாதக் குருக்கள்,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்

● கடல்கோட்டை முற்றுப்பெற்றபின் கதை பிறந்த கதை வாசித்து ஆச்சரியப்பட்டேன். ஒரு வரலாற்று ஆசிரியர் வரலாறு எழுதும்போது எவ்வளவு சிரமப் படவேண்டும்? கடல்கோட்டை பொருத்தமான காலகட்டத்தில் வெளிவந்துள்ளது நிச்சயம் நூலுருப்பெறவேண்டும்.

— எஸ். ராமதாஸ்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

● கடல் கோட்டைக்குப் பின்னால் மறைந்திருந்த வரலாற்றைத் தேடிச் சிறப்பாக ஈழநாடு வாரமலரில் வாரா வாரம் விருந்தளித்து வரலாறு மறையாமல் இளையதலைமுறைக்கு எடுத்துரைத்த உங்கள் பணி தொடர வாழ்த்துங்கள்.

— சி. ச. லிங்கம்
(குஷீபா)
மாவிட்டபுரம்
தெல்லிப்பழை.

● கடந்த ஓரிரு மாதங்களாக ஈழநாட்டில் கடல்கோட்டை என்ற சிறந்த நாவலைப்படைத்துச்சரித்திரம் படைத்து விட்டீர்கள். உண்மையில் தங்களது கடல்கோட்டை கிடுகு வேலியைப்போல ஒரு கலக்குக் கலக்கியது. கதையை நகர்த்திய லாவகம், பண்டைய யாழ் நகரின் சமூகப்பண்பாடுகள், வாழ்க்கைமுறைகளைக் கூறிய விதம் மிகச் சிறந்தாகும். தொடர்ந்து பல இவ்வகை நாவல்களைப் படையுங்கள்.

— தி. இராஜராஜன்
பூம்பொழில்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

● 'பெண்ணாசை' என்ற கருவே கதை முழுவதும் இழுத்துச்செல்கிறது. இது நாவலுக்குப் பெருமை சேர்க்கவில்லை. பெண்பித்தினால் அழிவது பற்றி எழுதுவதற்குச்சரித்திரத்தில் கைவைதிருக்கத்தேவையில்லை. ராமாயணம் எதற்காகப்படைக்கப் பட்டிருக்கிறது? சரித்திரக் குறிப்புக்கள் கிடைத்தால்நான் கூட இப்படி ஒரு நாவல் எழுதுவேன். உண்மையில் இவ்வளவு சரித்திரக் குறிப்புக்களையும் வைத்துக்கொண்டு பல பாகங்களையே படைத்திருக்கலாம். தாங்கள் பதினெட்டு அத்தியாயங்களுடன் முடித்திருக்கிறீர்கள். கற்பனை வறட்சி.

—குட்டி, பருத்தித்துறை
(சரியான பெயரும் முகவரியும் இல்லை).

● யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் கத்தோலிக்க மதத்தைத் தான் பரப்பியவர்கள். ஆங்கிலேயர்தான் புரட்டஸ்தான் மதத்தைப் பரப்பியவர்கள். ஆனால் உங்கள் கடல்கோட்டையின்படி ஒல்லாந்தருடன் வந்த பாதிரியார் புரட்டஸ்தான் மதத்தைப் பரப்பிய மாதிரித் தெரியத் தெரிகிறது. மன்னார்ப் பகுதியிலுள்ள சகல இந்துக் கோயில்களும் இடிக்கப்பட்டது உண்மை ஆனால், இவற்றில் திருக்கேதீஸ்வரம் இடிக்கப்பட்டதாஎன்பது கேள்விக்குரியது யாழ்ப்பாணத்திலிருந்து யானை ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது நம்பக் கூடியதல்ல.

பொதுவாக உங்கள் கடற்கோட்டை ஓர் அரிய படைப்பு என்றே கூறவேண்டும்.

—பி. தனபாலசிங்கம்,
1-ம் ஒழுங்கை, கற்குழி,
சாவகச்சேரி.

● தமிழகத்தில் மட்டுமல்ல ஈழநாட்டிலும் சிறந்த சரித்திரக் கதாசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதைக் ''கடல்கோட்டை'' தொடர் நவீனம் மூலம் நிரூபித்து விட்டார் செங்கை ஆழியான்' அவர்கள்.

அறிஞர்கள், சாதரணமாகப் படித்தவர்கள் விழுந்தடித்து வாசிக்கக் கூடிய அளவிற்கு ஜனரஞ்சகமாவும் சரித்திரத்துடன் எளியநடைலும் விறுவிறுப்பாக எழுதிய எங்கள் கதாசிரியருக்கு எனது பாராட்டுக்கள். இதுபோல் யாழ்குடா நாட்டில் மறைந்து கிடக்கும் வரலாறுகளைச் சிரமம் பாராது செங்கை ஆழியான் அவர்கள் 'ஈழநாடு' பத்திரிகை மூலம் வெளியிடவேண்டும் என்பது எனது அவாவாகும்.


தொடர்க அவர் பணி

ஜி. எஸ். சந்திரசேகரா,
கிளிநொச்சி

## எமது சிறுகதை

# மயங்குகிறாள் மங்கை

திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்



கடந்த சில தினங்களாகச் சுஜாத்தா ஒரு நிலையில் இல்லை. அவள் மனம் ஏதோவொரு இனம் புரியாத பரவசத்துக்குள்ளாயிருந்தது. அவள் கம்பஸ்க்கு வந்து ஒரு வருடம் முடிந்து விட்டது. இந்த ஒரு வருடகாலமும் ஏற்படாத ஒரு இது அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

எத்தனை நாளைக்குத்தான் நெஞ்சுக்குள் முட்டி வைப்பது தனது சிநேகிதி திலகாவிடம் சொல்லாவிட்டால் மனம் ஆற மாட்டாது போல் உணர்வு.

கம்பஸ் கலகலப்பில் சுஜாத்தாவும், திலகாவும் தம்மை நன்றாக இணைத்துக்கொண்டவர்கள் கம்பஸ் கொமன்றூமில் மெதுவாக நடந்தவாறு திலகாவிடம் மெதுவாக விஷயத்தை உரைத்தாள்.

''எடியே திலகா புதிதாகக் கம்பஸ்க்கு வந்த லெக்சரர் அடிக்கடி என்னைப்பார்த்துக் கொண்டிருக்கிறார். எனக்கு ஒரே அந்தரமாக இருக்கு''

''அவர் இன்னமும் திருமணஞ் செய்யவில்லையடி. உனக்கு ஒருவேளை அதிஷ்டம் அடிக்கத்தான் போகிறதோ'' என்று கிண்டல் செய்தாள் திலகா.

''போடி உனக்கு எப்பவுமே என்னைப் பரிகாசம் பண்ணாவிட்டால் சரிப்பட்டு வராது'' என்று சுஜாத்தா குறைபட்டுக்கொண்டாள். ''ஏண்டி இப்படி ஒரேயடியாகப் பார்க்கிறாரோ தெரியவில்லை''

''ஏதோபோகப்போகத்தெரியும்தானே மலிந்தது கடைக்கு வரத்தாண்டி செய்யும். ஆனபடியால் நீ பேசாமல் இரு அவருக்கு விருப்பம் இருந்தால் கேட்பார்தானே'' என்று சொல்லிவிட்டுத் தன்பாட்டுக்குப் போய்விட்டாள் திலகா.

ஆனால் சுஜாத்தாவுக்கோ ஒரே அந்தரமாகத்தான் இருந்தது. ஏன் அவர் என்னைப் பார்க்கவேணும். இத்தனை காலமும், நிம்மதியாக இருந்த என் வாழ்க்கையில் இப்படி ஒரு குறுக்கீடு ஏன் வரவேண்டும் என்று சுஜாத்தா தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

சுஜாத்தா குடும்பத்தில் ஒரே பிள்ளை வீடு, வாசல், காணி, பூமி, சொத்து, பத்துக்களோ ஏராளம். அது மட்டுமல்ல அவளது அப்பாவே பெரிய வர்த்தகர். கஷ்டம் என்பது என்ன வென்றே தெரியாது செல்வம் செல்வாக்கில் வளரும் சுஜாத்தாவுக்கு கம்பஸ் காதல் எல்லாம் வேண்டாத ஒன்றாகவேபட்டது. அப்பா, அம்மா தன் தகுதிக்கேற்ற நல்ல மாப்பிள்ளையைத் தேடித்தருவார்கள் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட அவள் கம்பஸ் காதலை ஒரு பொருட்டாக மதித்தது கிடையாது.

அவள் ஒன்றை நினைத்த போது தெய்வம் வேறொன்றை நினைத்ததோ அல்லது அவளது விதிதான் விளையாடியதோ என்னவோ அவளையும் அறியாமலேயே அவளது மனம் அந்த கணித பாட லெக்சரர் பார்த்திபனைப்பற்றி அதிகமாகச்சிந்திக்கத்தொடங்கியது. தனது கட்டுப்பாட்டையும் மீறித் தன் மனம் தன்னை வருத்துவதை அவள் உணர்ந்துகொண்டாள்.

''கடவுளே நாளாக ஆக என்மனம் ஏதோ மாதிரி வருகிறதே. என்னை ஏன் கஷ்டப்படுத்துகிறாய்'' என்று அவள் கடவுளைக்கூட நொந்து கொண்டாள். சிலவேளைகளில் சாப்பாடு கூட உள்ளே செல்ல மறுத்தது.

கம்பஸ்க்கு வெளிக்கிடும் வேளைகளில் அவளது அலங்காரங்களில் முன்னேற்றம் காணப்பட்டது. அலங்கரிப்பதற்காக அதிக நேரத்தையும் செலவழித்துக் கொண்டாள். அவள் தன்னை அலங்கரித்துக் கொள்வதனாலோ என்னவோ பார்ப்பதற்கு ரதியோ என்று மயங்கும் அளவுக்கு இருந்தது அவளது தோற்றம்.

''ஒருவேளை என்னைப்பணக்காரி என்று யாராவது சொல்லி விட்டார்களோ இல்லை என் அழகில் தான் அவர் மயங்கி விட்டாரோ'' என்றெல்லாம் சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொள்ளும் சுஜாத்தா கணித பாடம் லெக்சர் நடக்கிற நேரம் நோய் துன்பம் என்றால் கூடப் போகத்தவறுவதில்லை. அவளால் முன்புபோலப் படிக்க முடிவதில்லை. படிக்கலாம் என்று புத்தகத்தை விரித்தால் லெக்சரர் பார்த்திபனின் நினைவு வந்து அவளைப் படிக்கவிடாமல் குழப்பிவிடும்.

கணித பாடம் லெக்சரர் நடக்கும்போது அவர் பார்வை அடிக்கடி அவள் பக்கமே சென்று வரும். அந்தப் பார்வையின் தரிசனத்தில் அவள் தன்னையே மறந்து விடுவாள். அவளது கட்டுப்பாட்டுக்குள் நின்ற அவளது மனம் இன்று யாரோ வைத்த கண்ணியில் அகப்பட்டுத் துடிப்பதுபோல யாரிலோ ஈடுபாடு வைத்து அவளை வருத்துவதையும் இன்று அவளையே தன் எண்ணப்படி ஆட்டிப் படைப்பதையும் எண்ணி அவள் வருந்திய நேரங்கள் அநேகம்.

தினமும் கணிதபாட லெக்சர் இருந்து தான் தீரும். அவளோ லெக்சரைக் கட் பண்ணுவதே கிடையாது. சில வேளை அவரது பஸ்ஸில் கூட அவள் பிரயாணம் செய்வது உண்டு. அந்த நேரங்களில் அவர் அவளைப் பார்த்ததே கிடையாது.

அவளுக்குக் கவலையாக இருக்கும் இந்த ஆண்களே இப்படித்தான் போலும். மனதை மாற்றி விட்டுப்பெண்களை வருத்தி வேடிக்கை பார்க்கிற பழக்கம் அவர்களுக்குக் கை வந்த கலை. கம்பஸில் என்னையே அடிக்கடி பார்த்துக் கொள்ளும் அவர் பஸ்ஸில் மட்டும் என்னைப்பார்க்காது இருக்கிறாரே என்று எண்ணி அவள் நெடுமூச் செறிவது வழக்கம்.

ஒரு முறை ஒரு சுற்றுலாவுக்கு லெக்சரர் உட்பட எல்லோரும் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. சுஜாத்தாவுக்கோ ஒரே ஆனந்தம். இன்றாவது தன்னுடன் கதைப்பாரா என்ற ஏக்கம் ஒரு புறம்.

ஸ்பெசல் பஸ்ஸில் எல்லாரும் ஒரே குமாளம். சுஜாத்தா லெச்சரர் பார்த்திபனை அடிக்கடி பார்த்துக் கொண்டாள். லெக்சரரும் அவளைப் பார்க்கத்தவறவில்லை. அவளுக்கோ என்றுமில்லாத ஒரு இன்பம். பார்த்திபன் லெக்சரரோ மற்றவர்களுடன் கதைத்த மாதிரி சுஜாத்தாவுடன் சந்தோஷமாகக் கதைக்கவில்லை. அதுதான் ஏன் என்று சுஜாத்தாவுக்கும் விளங்கவில்லை.

என்மேல் விருப்பமிருந்தால் அவர் ஏன் என்னுடன் கதைக்க நினைக்கவில்லை என்று ஏங்கிக்கொண்டது அவளது மனம். ஆனால் அவர் தன்மேல் அன்பு வைத்திருப்பதாக உறுதி கொண்டு ஆறுதலடைந்தாள் சுஜாத்தா.

யோசித்துக் கொண்டிருந்த சுஜாத்தாவின் கைகளைப் பிடித்து உலுக்கிய திலகா ''எந்தக் கப்பல் கவிழ்ந்து விட்டதோ'' என்று கேட்டபோது தான் நிஜ உலகத்துக்கு வந்து விட்ட சுஜாத்தா கப்பல் இல்லையடி வாழ்க்கை தானே கவிழ்ந்து விட்டிருக்கிறது'' என்று கூறியபோது அவளது கண்கள் குளம் போலாகி எப்பொழுது அணை உடைத்துப் பாயுமோ என்பது போல் நின்றது. ''திலகா என் மனம் மாறிப்போய்ச்சுதடி பார்த்திபன் லெக்சரர் என்னைப் பார்த்துக்கொள்வதனால் என் மனமோ என்னை விட்டு ஓடி அதிக நாளாய்ச்சுதடி. என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை.

''எடி பைத்தியக்காரி உதுக்கெல்லாம் அதிகமாக யோசித்து என்ன லாபம். அவர் உன்மேல் அக்கறை இல்லாவிட்டால் ஏன் பார்க்க வேணும் யாரையாவது விட்டுக் கேட்பிக்கத்தான் வேணும். அவற்றை சிநேகிதன் மாரி ஆரையும் பிடித்துத்தான் இதற்கொரு முடிவு எடுக்க வேணும். அது என் பொறுப்பு. நீ கவலைப்படாமல் இருந்தால் போதும்'' என்ற திலகா லெக்சரர் பார்த்திபனுடன் கதைப்பதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தாள்.

திலகாவின் போய் பிறெண்ட் குமணன். அவரும் ஒரு லெக்சரர்தான். அவர் பொருளியல் லெக்சரர் ஆனபடியால் பார்த்திபனுக்கும் அவருக்கும் அவ்வளவாகச் சினேகிதம் இல்லைத்தான். என்றாலும் குமணனின் நண்பர்கள் பார்த்திபனுக்கும் நண்பர்களாயிருப்பதால் அவர்களைக்கொண்டு கேட்கலாம் என்ற நினைப்பில் ஆறுதலடைந்தாள் திலகா,

''குமணன் நீங்கள் பார்த்திபனுடன் குளோசாப் பழகிறனீங்களோ?'' என்று திலகா கேட்டபோது ஏன் திலகா நான் அவ்வளவு குளோசாப் பழகுறதில்லை. என்ரை பிறெண்ட் ராஜ்குமார் அவற்றை பொக்கற். என்ன விசயம்? விபரமாய்த்தான் சொல்லேன்'' என்று கேட்ட குமணனின் காதுக்குள் இரகசியமாக ஏதேதோ சொன்னாள் திலகா. திடுக்கிட்ட குமணன் ''அவருக்கு ஒரு கேள் பிரண்ட இருப்பதாகக் கதைக்கிறார்களே, நீயும் வா. ராஜ்குமாரைப்பிடித்து பார்த்திபனுடன் கதைத்துக் கேட்டுப்பார்ப்பம்'' என்று கையோடு திலகாவையும் அழைத்துச் சென்றான்.

ராஜ்குமாரோடு சென்ற குமணனும் திலகாவும் பார்த்திபன் லெக்சரருடன் கதைப்பதற்காக அவரிடம் சென்றனர். கதைகள் உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டிருந்தபோது ராஜ்குமார் சுஜாத்தாவின் கதையை மெதுவாகத் தொடக்கினார்.

ஐயோ கடவுளே நானா? நான பார்த்தேனா? அபாண்டமான பழி சுமத்தாதீர்கள். சுஜாத்தாவின் அதே வகுப்பில்தான் எனது காதலி சசியும் படிக்கிறாள். அவளைத்தான் நான் பார்ப்பதுண்டு. சுஜாத்தாவை நான் என்றைக்குமே பார்த்தது கிடையாது'' என்று உறுதியாகவும் இறுதியாகவும் கூறினான். திடுக்கிட்ட நிலைமையிலிருந்து இன்னமும் மீண்டு விடாத லெக்சரர் பார்த்திபன்.

பஸ்ஸில் சுற்றுலா போனபோது கூடப் பார்த்தீராமே என்று இடைமறித்த குமணனை ''யார் சொன்னது? அப்பவும் நான் என் சசியைத் தான் பார்த்திருப்பேன் நான் சசியைத்தவிர வேறு யாரையும் காதலித்ததோ பார்த்ததோ கிடையாது''

''நேர்மையுடனும் மனச்சாட்சியுடனும் நடப்பதுதான் படித்த பண்பாடு. பட்டாம் பூச்சிபோல மலருக்கு மலர் தாவித்திரிய நினைப்பது உங்களுக்கு அழகல்ல'' என்று கோபத்துடன் இருக்கையை விட்டெழுந்த குமணன் திலகாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அவ்விடம் விட்டகன்றுவிட்டான்.

பார்த்திபன் லெக்சரருக்கு ஒரு கண்வாக்கு அவர் தனது வாக்குக் கண்ணால் சசியைப் பார்க்கும் போது எல்லாம் சுஜாத்தாவைப் பார்த்த மாதிரியிருக்க சுஜாத்தா தன்னைத்தான் பார்க்கிறார் என்றுநினைத்துத் தனக்குள் காதல்மாளிகையை எழுப்பியது அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது

இப்படி எத்தனை சுஜாத்தாக்களோ!

[யாவும் கற்பனை]

---

## கடைசிமனம்

சுடலைச் சிறுகுருவி வானத்தில் பாடும்
மமதைப் பெருமனமோ மயக்கத்திலாளும்
படலைச் சிறுசந்தில் சொறிநாய் கத்தும்
பாவிச் சிறுமனமோ சுகத்தையே தேடும்.

வடலிப் பனையடியில் ஆந்தை யலறும்
வாழப் பிறந்தவனே என்றுமனம் கூறும்
அடவிப் பெருமரத்தில் சாவையோ கூவும்
'அடச்சீ' நில் என்று மனம் கூறும்.

தொண்டை கபம்கட்டி சேடம் இழுக்கும்
இண்டைக்கு மட்டும் என்றுமனம் வேண்டும்
சொண்டு மிகவரண்டு பாளம் வெடிக்கும்
சொத்து சுகமெங்கே என்றுமன மேங்கும்,

புலனெல்லாம் நிலைமறந்து சோர்ந்தே போகும்
புதைத்து வைத்தபணம்பற்றி நெஞ் சமேங்கும்
பலவழியில் பாய்வதற்கே உயிர்தரணம் பார்க்கும்
பேரனங்கே பிள்ளையெங்கே என்றுமனம் தேடும்,

— வடகோவை வரதராஜன்

---

## ஹி..ஹு

★

கணவன்: இந்தியாவுக்குப் போய்ப் பார்க்கவேண்டிய இடங்களை ஒருக்காச் சொல்லும் பட்டியல் போடுவம்.

மனைவி: ஹாபர், எயர்போட், றேடியோ சிலோன்...

★

சாஸ்திரியார்; என்ன சுப்பையா, கண்டுங் காணாத மாதிரிக் கவலையாய்ப் போறீர்?

சுப்பையா: இல்லை, மகளைப் பற்றித்தான் கவலை.

சாஸ்திரி: ஏன் காணும் பையனுக்கும் பொண்ணுக்கும் சாதகம் பார்த்துத் தானே திருமணம் செய்தீர்?

சுப்பையா: ஓமோம், அவர்கள் இரண்டுபேரும் சந்தோஷமாய் இருக்கினம். மாமிட குறிப்பும் பார்க்க மறந்திட்டம்.

'டுஷி'

★

மகன்: பஸ் நிலையத்தில் நீச்சல் தடாகம் அமைத்திருக்கிறார்களே, அப்பா?

தந்தை: அது நீச்சல் தடாகமல்ல, மழை வெள்ளம்.

★

தந்தை: தம்பி ரேடியோவை நிறுத்தவில்லையா? சத்தம் கேட்கிறதே?

மகன்: அப்பா அது நுளம்புகளின் சத்தம்.

★

மகன்:- வடிசட்டிய கருமி என்றால் என்ன அப்பா?

தந்தை: பணத்தைக் கண்ணிலும் காட்டாதவன்.

மகன்: 'பணம்' என்றால் என்ன அப்பா.

கிரி

★

கணவன்: கோயில் வாசலிலை நிண்டு அங்கையும் இஞ்சையும் என்ன பார்த்தனி?

மனைவி: அங்கை சாமியைப் பார்த்தனான், இஞ்சை ஆமியைப் பார்த்தனான்.

★

வாத்தியார்; நேரம் போகாத இடம் ஒன்று சொல்.

மாணவன்; யாழ்ப்பாணம் மணிக்கூண்டுக் கோபுரம்.

கன்னா பற்குணம்

## கடந்த கால்நூற்றாண்டில் இங்கிலாந்து

# சகிப்புத் தன்மையும் கல்வி முறையும்

நா. மாணிக்க இடைக்காடர்

[முன் தொடர்ச்சி]

அடுத்ததாக இங்கிலாந்தின் சிறந்த அம்சம் சகிப்புத் தன்மை (tolerance) நான் மாணவனுயிருக்கும் காலத்தில் நிரந்தரமாக வேறு இனமக்கள் இந்திலாந்தில் அதிகம் வசிக்கவில்லை. யுத்தகாலத்தில் போருக்கு ஆண்கள் செல்ல, காப்பிரி மக்களை மேற்குஇந்திய தீவுகளிலிருந்து கொண்டுவந்து பஸ் வண்டிகளுக்கும் புகையிரத வண்டிகளுக்கும் சாரதிகளாகவும் வேறு சில்லறை வேலைகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டனர். சண்டை முடிய பலநாடுகளுக்கு இங்கிலாந்து சுதந்திரம் கொடுத்தது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து பல லட்சம் மக்கள் இஙகிலாந்து சென்று குடியேறினர்கள், தற்பொழுது சுமார் இருபது இலட்சம் வேற்று இனமக்கள் இங்கிலாந்தில் சீவிக்கிருர்கள். இம்மக்கள் ஆங்கிலேயரைப்போல் எல்லா உரிமைகளுடனும் வாழ்கிருர்கள். முக்கியமாகதொழிற்கட்சி இந்த மக்களுக்கு மிகவும் ஆதரவு கொடுக்கிறது. இடையிடையே சில இனக்கலவரச் சம்பவங்கள் நடப்பதுண்டுதான். ஆனுலும் அவை பாரதூரமானவையல்ல. ஆங்கிலேயரின் சகிப்புத் தன்மையில் எல்லாம் சுமுகமாக நடைபெறுகிறது. நாமும் வாழவேண்டும் மற்றவர்களும் வாழவேண்டும். [live and let live] என்ற பரந்த மனப்பான்மையால் இங்கிலாந்து இனப் பிரச்னை இல்லாத ஒரு நாடென்றே கூறலாம்.

இப்படிப்பட்ட மனப்பான்மை இரண்டொரு நாளில் வருவதில்லை. மிகவும் ஆழமான கலாசார அடிப்படையில்தான் இது போன்ற மனப்பான்மை உதிக்கும். சில ஆசிய நாடுகள் ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்க முந்திய நாகரிகம் தங்களிடம் இருந்ததென்று மேடையில் முழங்குவார்கள்.

ஆனுல் நடைமுறையில் பழையநாகரிகத்தின் பண்பாட்டைக் காண்பது கஷ்டம். வேடிக்கையான ஒரு விடயத்தை நான் கவனித்திருக்கிறேன். ஆசிய ஆபிரிக்க மக்கள் தங்கள் நாடுகளில் சுதந்திரமாக வாழமுடியாமல் இங்கிலாந்து வந்ததும் உடனே ஆங்கிலேயருக்குள்ள உரிமையைக் கோருகிருர்கள். கோருகிறதுமல்லாமல் முரட்டுத்தனமாய் ஆங்கிலேயருடன் வாய்ச் சண்டை செய்கிருர்கள். உதாரணமாக ஒரு சாதாரண ஆங்கிலேயர் ஒரு ஆசிய ஆபிரிக்க நாட்டில் சில ஆண்டுகள் சீவித்த பிறகு அந்நாட்டு உரிமை கேட்டால் சில வேளைகளில் உரிமை கொடுக்கக் கூடும். ஆனுல் அநேகமாக இவரை நாடுகடத்தி விடுவார்கள் ஆனுல் ஆசிய ஆபிரிக்க மக்கள் இங்கிலாந்தில் சில வருடங்கள் தங்கியபின் பெரிய வீரர்கள்போல் உரிமைப் போராட்டம் தொடங்குகிருர்கள். இதையெல்லாம் பார்க்குமிடத்து ஆங்கிலேயரின் சகிப்புத் தன்மைக்கு நான் தலை வணங்குகிறேன்.

### கல்வி முறை

அடுத்ததாக இங்கிலாந்தின் கல்வி முறையைப்பார்ப்போம். புதிய புதிய கல்வி முறைகளை பாடசாலைகளில் கையாளுகிருர்கள். எனக்கு இதில் நிபுணத்துவம் இல்லாவிட்டாலும் எனது மூன்று பேரப்பிள்ளைகள் அந்நாட்டில் கல்வி கற்பதால் சிலவற்றை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. முக்கியமானது மாணவர்களை ஆரம்பத்திலிருந்து சிந்திக்க வைப்பது அவர்களின் நோக்கம். சிறு வகுப்புகளில் வீட்டில் படித்து வரும்படி ஒன்றும் கொடுப்பதில்லை. போதிய ஆசிரியர்கள் உண்டு குறைந்தது 12 மாணவர்களுக்கும் கூடியது 30 மாணவர்களுக்கும் சராசரி ஒரு ஆசிரியர் உண்டு. இதனுல் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனையும் கவனிக்கக் கூடியதாயிருக்கிறது. கல்வியுடன் உடல்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. விஞ்ஞானம் மலிந்த நாடாகையால் பிள்ளைகளுக்குப்பலவசதிகள் உண்டு. இரவில் நித்திரைக்கு முன் எனது பேரன் ஒருவன்-வயது ஆறு- Cassette tape recorder இல் கதையைக் கேட்டுக்கொண்டு, அந்தக் கதையை நூல் வடிவத்திலிருக்கும் நூலை பார்த்துப் படித்துக் கொள்கிருன். நித்திரைவந்ததும் கட்டிலுக்கருகில்இருக்கும் மின்சார Switch ஐ நிற்பாட்டி நித்திரை கொள்கிருன். மறுநாள் இரவு விட்ட இடத்திலிருந்து தொடங்குகிருன். இந்த முறையில் பல கதைப்புத்தகங்களைப் படித்துமுடிக்கிருன் இச் சிறுவன். எங்கள் நாட்டில் அடுத்தவீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடுவது போல் வசதிகள் இங்கிலாந்தில் இல்லை. இதனுல் பிள்ளைகள் தங்கள் பாட்டில் நேரத்தை முறையாகச் செலவழிக்கப் பல கல்விமுறைகளைக் கையாளுகிருர்கள்; அரசும் இதற்கு உதவியாயிருக்கிறது. விடுமுறை நாட்களில் ரீ வி. யில் (T. V.) காலையிலே பிள்ளைகளுக்குச் சில நிகழ்ச்சிகளை நடத்துகிருர்கள். பொதுவாக ஆசிரியர்கள் திருப்தியுடன் கடமையாற்றுகிருர்கள். கல்வியின் அபிவிருத்திக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்,

### உயர்கல்வி

பல்கலைக்கழகக் கல்வியைப் பார்க்கும்பொழுது பொதுவாக, தரமான மாணவர்கள் எவ்வளவு பேராயிருந்தாலும் பல்கலைக்கழகங்களில் ஒருவிதமாகச் சேர்த்துக்கொள்ளுவார்கள். மூன்ரும் மண்டல நாடுகளில் இதுநடப்பதில்லை. உதாரணமாக ஒரு மூன்ரும் மண்டல நாட்டில் க. பொ. த. (உயர்தர) இல் பத்தாயிரம் மாணவர்கள் சித்தியடைந்தால் எல்லோருக்கும் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைப்பதில்லை. முக்கிய காரணம் பணக்குறைவே. ஆனுல் அபிவிருத்தியடைந்த நாடுகளில் எல்லாத் தகுதியான மாணவர்களுக்கும் பல்கலைக்கழகப்படிப்புக்கு வசதியளிப்பார்கள். சமீபத்தில் இங்கிலாந்தில் சில பத்திரிகைகளில் பல்கலைக்கழகங்களுக்குப்போதிய பணவசதியில்லாதபடியால் இந்நாட்டிலும் குறைக்கக்கூடும். (Restricted admissions). அமெரிக்காவுக்கு உள்ள பணவசதியில்லாவிட்டாலும் இங்கிலாந்தில் விஞ்ஞானஆராய்ச்சி முன்னேறிக் கொண்டிருக்கிறது. காரணம் கல்விக்கே தம்வாழ்க்கையை அர்ப்பணிக்கும் பெரிய கல்விமான்கள் இங்கு உளர். எப்படி எங்கள் சமயத்தில் ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் உண்டோ அதேபோல் பெரிய கல்விமான்கள் இங்கிலாந்தில் உண்டு நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் கேம்பிறிஜ் ஒக்ஸ்போட் போன்ற பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் கலியாணம் செய்வதில்லை. காரணம் குடும்பம் நடத்த நேரமின்மையே தற்காலத்தில் இம்முறை மாறிக் கொண்டு போனுலும் இப்பொழுதும் குடும்பம் நடத்த நேரமில்லாத பெரிய கல்விமான்கள் இருக்கிருர்கள். இந்தச் சூழ்நிலையில் கல்வி விஞ்ஞானம் மற்றக் கலைத்துறைகள் முன்னேறிக்கொண்டே போகின்றன.

### பொதுஜன அபிப்பிராயம்

கல்வியைக்கையாளும் முறைகளைப்பற்றித் தொடர்ந்து அரசும் மக்களும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிருர்கள். இதனுல் இருக்கும் முறைகளைத் திருத்தியமைக்கக் கூடியதாயிருக்கிறது. சமூகத்தின் அபிப்பிராயத்தை அரசும் செவிசாய்த்து, தக்சன செய்துவருகிறது கல்வியின் முன்னேற்றத்தையே குறிக்கோளாய் வைத்து அலுவல்களைச் செய்கிறது. மூன்ரும் மண்டல நாடுகளில் அநேகமாகத் தீர்மானங்கள் அரசியல் ரீதியில் எடுப்பதால் கல்விக்குப் பாதகம் உண்டாகிறது. ஆனுல் இங்கிலாந்தில் கல்வியின் முன்னேற்றத்தைக் குறித்தே தீர்மானம் எடுப்பார்கள். மாணவர்களை நாடுகாப்பாற்றவேண்டிய மிகவும் முக்கிய பொருளாகக் கருதுவார்கள். மாணவர்களைத் தேசத்தின் பொக்கிஷமென்றெண்ணுகிருர்கள் இதனுல் இவர்களையிட்டு எடுக்கும் எந்தத் தீர்மானத்தையும் தீர ஆலோசித்தே செய்வார்கள்.

(தொடரும்)

## வேய்ங்குழல் வித்தகன்

வேணுகான வித்தகராய் வித்துவத்தின் தத்துவத்தைப்
பேணுஞானப் பேரார் பெருந்தகையாய்— வாணிதானம்
பெற்றசெல்வ நாயகமாம் பேரரிய நாயகமே
நற்றவனருள் சேர்ந்தனையோ நாடி

கற்றுயர்ந்த வித்தைதனைக் கண்போற் காத்துக்
கனிவுறவே மற்றவரும் கற்றுத் தேறச்
சற்குருவாய் மூத்துநின்ற தலைவா! நாத
சக்தியிலும் சித்துநிறை சால்பா! அன்புப்
பொற்புநிறை மாணுக்கர் போற்றும் பண்புப்
புனிதமுயர் செல்வநா யகமே உன்றன்
அற்புதமார் இசையின்ப ஆனந் தத்தை
அடைவதற்கோ ஆதிசிவன் அழைத்தா ரையா!

—வி. கே. சண்முகராசா

அண்மையில் மறைந்த புல்லாங்குழல் வித்துவான் செல்வநாயகம் அரியநாயகம் அவர்களுக்கு அஞ்சலி


வளமான வாழ்விற்கு
நம்பிக்கையான வழிகாட்டி

"ஷப்ரா"

நிதித்துறையில் உங்கள் தோழன் அவனே!
உங்கள் பணம் பல்கிப் பெருக
உங்கள் தோழனை நாடுங்கள்

SHABRA

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.
தொலைபேசி இல: 589310.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073.


# கொடும்பாவி வழக்கம் எப்படி வந்தது?

என்னெஸ்

நம்மூரில் ஒரு பழக்கம் உண்டு அது, கொடும்பாவி கட்டி இழுப்பது வைக்கோலினுல் ஓர்உருவம் செய்து அதன் மீது களிமண் பூசி கிட்டத் தட்ட மனித உருவைக் கொடுக்கத் தக்கதாக கண், மூக்கு. வாய் என்றெல்லாம் வைத்து, வித விதமான வர்ணம் தீட்டுவார்கள்.

பிறகு ஊரார் கூடி அவ்வுருவத்தைக் கயிறுகட்டி இழுத்து தெருத் தெருவாகச் சுற்றி வந்து இறுதியில் ஒப்பாரி பாடிச் கொள்ளிவைத்து எரிப்பார்கள்!

இது என்ன வழக்கம்? ஏன் இவ்விதம் செய்கிருர்கள்? பருவமழை தவறினுல் இப்படி கொடும்பாவிகட்டி இழுப்பார்கள். அப்படி இழுத்தால் மழைபெய்யும் என்று சொல்வார்கள். கொடும்பாவிக்கும் மழைக்கும் என்ன சம்பந்தம்?

கொடும்பாவி இழுக்கும் பழக்கம் எமது நாட்டில் மாத்திரம் தான் இருப்பதாக நினைக்க வேண்டாம். ஐரோப்பா, இத்தாலி, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் இத்தகைய பழக்கம் உண்டு.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதன் வெயில், மழைபோன்றவற்றை எதிர்கொண்ட போதும், வெயில்காலத்துக்குப்பின் மழைகாலம் வரும் என்று திட்டமாக அறிந்திருக்கவில்லை.

வெயில் காலம் அவனுக்குக் கடினமான காலமாக இருந்துள்ளது நீர் வற்றியது: அவன் வைத்த, வளர்த்த பயிர்கள் கருகி இறந்தன. மழை வந்ததும் நீர் நிறைந்து பயிர்கள் செழித்தன இதன் காரணமாக முன்னுள் மனிதன் மழையை விரும்பி வரவேற்றுன்.

எப்போது மழை வரும் என்பதை அவன் தெரிந்திருக்கவில்லை. காரணம் காலநிலை மாற்றத்தை அன்று அவனுல் புரிந்துகொள்ளமுடியவில்லை

மழைவரவில்லைஎனில்மழைத் தெய்வத்துக்குக் கோபம் வந்துவிட்டதென நினைத்தான். மழை வராமைக்குக் காரணம், மழைத் தெய்வத்துக்குப் பிடிக்காதவன் எவனே பூமியில் இருக்கிருன் என்பதுதான் என அவன் நம்பினுன். மழைக்குப் பிடிக்காத அந்த 'அவனைக்' கொன்று மழை அன்னையின் மனத்தை மகிழ்விக்க வேண்டும் என்று அவன் எண்ணினுன்.

அந்த எண்ணமே கொடும்பாவி கட்டி இழுக்கும் வழக்கமாயிற்று. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பு-மனிதன் அறிவு வளம்பெருத காலத்திலே கையாளபபட்ட ஒரு வழக்கம் இன்றும் நம்மிடையே நிலைத்து நிற்கின்றது.

## ஏழு பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

## தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!

## கோகிலா மகேந்திரன்

"கமலனை இவள் கமலாக்குக் கட்டிவைச்சால்...... எங்கட குடும்பத்தின்ரை தரித்திரமும் கொஞ்சம் குறையும். அவளும் சுகப்படுவள். நான் போய்க் கேட்டால் கமலன் தட்டமாட்டுது... ஆனல் இவள் கமலா ஓமண்ணுவளோ..."

அக்காவை விரும்பி அக்காவிற்குக் கடிதம் கொடுத்த ஒருவனை மணந்துகொள்ள ஒருவேளை தங்கை விரும்பாதிருக்கக்கூடும் என்ற சிந்தனை அவளை அப்பால் இழுத்துச் சென்றது.

"பிறகு? என்ரை எதிர்காலம்? இந்தக் குடும்பத்துக்காண்டியே என்னைச் சாம்பலாக்கிக்கொண்டு... ஒவ்வொரு பிள்ளையளா நல்ல நிலைக்கு உயர்த்திவிட்டுக் கொண்டு... ஏணி மாதிரி... ஏணியள் ஒரு நாளும் ஏறுறதில்லைத்தானே... ஆனல்... ஒருவிதத்திலை பார்த்தால் அது ஒரு தோல்வி கண்ட வாழ்க்கைதான்...."

இந்த எண்ணமும் அவளுக்குத் திருப்தியளிப்பதாய் இல்லை. "ஏன் இப்பிடிச் செய்தால் என்ன? எங்கடை தாழ்த்தப்பட்ட சாதியருக்காகவே ஒரு சங்கம் தொடங்கி இவயளின்ரை நன்மைக்கான வழியளை ஆராய்ந்து அதைச் செயல்ப்படுத்தி எனக்காண்டி வாழ்ந்ததை விட்டிட்டு என்ரை சமுதாயத்துக்காண்டி என்னைப்போல பாதிக்கப்பட்ட இன்னும் பாதிக்கப்படப் போற மகேஸ்வரியளுக்காண்டி... சீ... உண்மையிலை அதுவும் பிரச்னையளைக் கண்டு பயந்து பிரச்சனையளை விட்டு ஒதுங்கிப்போற தன்மைதான். அதை ஒரு வெற்றிகரமான வாழ்க்கையாகக் கருத ஏலாது. பிரச்னையளோடை போராடி வெற்றி காணவேணும்..."

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் கற்ற சிறிதளவு உளவியல் இப்போது அவளுக்கு மும்முரமாகக் கைகொடுத்து உதவியது ஒரு பெண்ணின் உளவியல் தேவைகளில் முக்கியமானதாகத் திருமண வாழ்க்கை அமைகிறது. அன்புத் தேவையே பூர்த்திசெய்யப்படாத பெண்ணொருத்தி சமூக சேவையென்று புறப்படுவது... அது வெளிப் பார்வைக்கு எவ்வளவு பெரிதாகத் தோன்றினலும் உள்ளார்ந்த தோல்விதான்! அப்படியானல்...?

மகேஸ்வரியின் எண்ணச்சிட்டு எங்கெல்லாமோ பறந்து பறந்து ஒவ்வொரு கிளையாக அமர்ந்தமர்ந்து...முடிவில் அவளது எண்ணச் சுழலில் திடுதிப்பென்று உதித்த அந்தச் சிந்தனை அவளுக்கு மிகுந்த திருப்தியை அளித்திருக்க வேண்டும். அந்த முடிவுதந்த அமைதியில் அவள் அப்படியே நிம்மதியாக உறங்கிப் போனாள்.

முதிர்ச்சி கூட வராட்டி நான் ஆசிரியையாயிருந்து பிரயோசனமில்லை."

சிந்தனைச் சங்கிலிகள் நீளமாய்த் தொடர்ந்ததில் அவளுக்கு மாஸ்டர் வீட்டை அடைந்தது கூடத்தெரியவில்லை.


வீட்டில் உள்ளவர்கள் அவளை யாரென்று புரிந்துகொண்டு அதனல் ஏற்பட்ட திகைப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்னர் அவள் செருப்பை வாசலில் கழற்றிவிட்டு விறுவிறென்று உள்ளே சென்று ஒரு கதிரையைத் தானக இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்து கொண்டாள்.

பிக்கொண்டு வெறுப்புடன் பதிலளித்தான்.

"அப்பிடி ஏதும் இருந்தாலும் நீ தரகரிட்டைச்சொல்லி விட்டிருக்கலாமே பிள்ளை?"

—தாயின் குரலில் கொஞ்சம் அனுதாபம் தொனித்தாலும் ஒரு குமர்ப்பிள்ளை கலியாணம் பேச, அதுவும் தனது கலியாணத்தைப் பற்றிப்பேசப் புறப்பட்டு வந்த புதுமை அவளால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை என்பது அந்தக் கேள்வியில்மிகத் தெளிவாகத்தெரிந்தது.

"இல்லை மாமி... இது தரகரிட்டையோ அல்லது வேறை யாரிட்டையுமோ சொல்லிக் கதைக்க முடியாத விஷயம். நானும் உங்கடை மகனும்



அதிகாலைக் குளிரைக் கிளித்துக்கொண்டு அவள் வேகமாக நடந்தாள். மனத்தில் ஒரு குறுகுறுப்பு!

இந்த முயற்சி பலிக்குமா?

'பலித்தாலென்ன, பலிக்காவிட்டாலென் முடிந்தவரை போராடத்தான் வேண்டும்"

உலகத்திலுள்ள பிரச்னைகள் எல்லாவற்றிற்கும்
ஒரு தீர்வு இருக்கும் அல்லது இல்லாமலிருக்கும்.
ஒரு தீர்வு இருந்தால் அதனைச் செயற்படுத்த முனை
இல்லாவிட்டால் கவலையற்றிரு

ஓ! என்ன அருமையான தத்துவம்!

'இவ்வளவு படிப்புப் படிச்சு இவ்வளவு வாழ்க்கை அநுபவங்களைக் கண்டு இன்னும் எனக்கு இந்த அளவு உள

இவ்வளவும் நடந்து முடிந்த பின்னரே திகைப்பிலிருந்து விடுபட்ட நித்தியானந்தன் மாஸ்டர் வாருங்கோ "ரீச்சர்" என்று மெதுவாக முனகினன்.

உள்ளே இருந்து வந்த மாஸ்டரின் தாய் மிக வலிந்து ஒரு புன்னகையை முகத்தில் வரவழைத்துக்கொண்டு,

"என்ன விஷயமாய் வந்தனீங்கள் ரீச்சர்?" என்று கேட்டாள்.

நடந்து முடிந்து குழம்பிப் போன திருமணப் பேச்சைப் பற்றி எல்லாரும் முற்றாக மறந்து விட்டது போலவும் மகேஸ்வரி ரீச்சர் என்றொரு புதுமுகம் வேறு ஏதோ விடயமாய்த் தங்களைத் தேடி வந்திருப்பதுபோலவும் அந்த வீட்டார் கற்பனை செய்திருப்பது அவளைச் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்தது எப்படி என்று தெரியாமலே இந்தக் குளிரிலும் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்து விட்டு அவள் மிகத் தெளிவாக,

"குழம்பிப்போன எங்கடை கலியாண விஷயமாய்த்தான் கதைக்க வந்தனன்" என்றாள்.

இவ்வளவு தோட்ட வேலை செய்து பழக்கப்பட்ட பின்னரும் இருவாட்சிப் பூப்போல இருக்கும் விரல்கள், வியர்வை முத்துக்களைத் துடைத்துவிட்ட அழகை இரசிக்காமல் இருக்க நித்தியானந்தனல் முடியவில்லை. ஆனலும் அந்த லயிப்பு நீடிக்க முன்னரி அவளது பதில் அவனை மேலும் குழப்பியது.

"அதைப்பற்றிக் கதைக்க இனி என்ன இருக்கு?" அவன் முகத்தை மறுபக்கம் திருப்

நேரை நேரைதான் கதைக்க வேணும் அதுதான் யோசிச்சிட்டு நானே வெளிக்கிட்டு வந்தனன்..."

அவள் நிறுத்தினள், ஆனல் அவளைப்புரிந்து கொள்ளக்கடினப்பட்ட அவர்கள் அவளே மேலும் தொடரட்டும் என்பது போல் மௌனமாகவே இருந்தனர்.

'என்னைப் பொம்பிளை பாக்க வந்து எல்லாம் திருப்திப்பட்டு சந்தோஷமாய்க் கலியாணத்துக்குச் சம்மதிச்ச நீங்கள் பிறகேன் திடீரெண்டு மனதை மாத்திக்கொண்டியள். இதுக்கு உண்மையான நேர்மையான பதிலை நீங்கள் சொல்லவேணும்..."

அவளுக்குச் சுற்றிவளைக்கத் தெரியவில்லை.

அவன் பதிலை எப்படிச்சொல்வது என்று மனதிற்குள் உருப்

போட்டுப் பார்த்ததில் சில விநாடிகளைச் செலவிட்டுவிட்டு "ஒரு பிரின்சிப்பலிட்டையே நல்லபேர் எடுக்க முடியாத ஒரு பொம்பிளை கட்டின புருஷனிட்டையும் மாமன் மாமியிட்டையும் நல்லபேர் எடுத்துக் குடும்பப் பொம்பிளையா வாழுறது கஷ்டம் எண்டு நினைச்சன்" என்று நிறுத்தி நிறுத்தித் தயங்கியபடியே சொல்லி முடித்தான். அவனலும் பொய்க்காரணங்களைச்சொல்ல முடியவில்லை. அவனது நேர்மையானபதிலை அவள் விரும்பினள்.

## 12

"அவர்... அவர்தான் பிரின்சிப்பல் ஒரு மாமிசப் பிரதிநிதி. அவமானத்தின் சின்னம், பாவத்தின் வடிவம். அவருசியின் உருவம் எண்டு நான் சொன்ன என்னை நீங்கள் நம்புவியளா"?

"எனக்கு விளங்கேல்லை."

"நான் வெட்கத்தை விட்டிட்டு வெளிப்படையாச் சொல்லிறன். அவர் என்ரை அழகை ரசிக்க விரும்பினர். நான் இடம் குடுக்கேல்லை. என்னைப்பழிவாங்க... எனக்குப் பேசிவந்த கலியாணத்தைக் குழப்பி விட்டுவிட்டார்"

"......"

"நான் சொல்றதை நீங்க நம்பேல்லையா?"

"வெங்காயத் தோட்டத்திலை ஆரோஒரு பெடியனுக்கு கடதாசி குடுத்ததெண்டு சொன்னர்"

அவன் தனது சந்தேகங்கள் எல்லாவற்றையும் தெளிவுடுத்திக்கொள்ள விரும்பியிருக்க வேண்டும்.

"நான் குடுக்கேல்லை... அவன் தந்தது உண்மைதான். ஆனல் நான் பதில் கடதாசி குடுக்கேல்லை. இது என்ரை பிழை எண்டு நீங்கள் நினைக்கிறியளா?... அழகாய்ப் பிறந்திட்டது என்ரை பிழைதான்..."

உடலை 'லேசர் கதிர்களால்' அரிவது போலப் பிசிறின்றிப் பேசிவந்த மகேஸ்வரி கடைசி வசனத்தில் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுக் குரல் நடுங்கிக் கண்களில் கரகரவென்று நீர் பெருக மெலிதாக விம்மியதை மற்றைய இருவரும் கவனிக்கவே செய்தனர்.

"வேறை ஆருக்கும் தெரியாட்டிலும் நான் சொல்றது உண்மை எண்டிறது கடவுளுக்கும் எனக்கும் தெரியும்."

-பெருகிய நீரைத் தட்டிவிட்டுக் கொண்டு அவள் முடிவுரை போலச் சொன்னள்.

"நீங்கள் பேசின முறையும் இஞ்சை எங்கடை வீட்டை நேரை வந்த தைரியமும் நீங்கள் சொல்லுறது உண்மையாய்த்தான் இருக்க வேணும் எண்டு கடவுளையும்உங்களையும் விட என்னையுந்தான் சிந்திக்க வைக்குது."

-இப்போது அவன் மெலிதாகச்சிரித்துக்கொண்டுஅவளுக்கு ஆறுதல் கூறுவது போலச் சொன்னன்.

"ஆனல், நான் உங்களை எந்த வகையிலும் நிர்ப்பந்திக்கேல்லை. நிர்ப்பந்திக்கவும் முடியாது. உங்கடை கலியாணத்தைப் பற்றி முடிவு செய்யிறது நீங்கள்தான். அதுக்கு உங்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்கு. உங்களுக்கு உண்மையள் தெரியவேணும். முடிவுகளுக்குப்பின்னலை அநீதியளும் பொய்யளும் மட்டும் இருக்கப்பிடாது நீங்கள் ஒரு பக்கத்தைப் பார்த்து ஒரு முடிவைச் செய்தியள். நீங்கள் பாக்காத மற்றப் பக்கத்தை நான் இப்பக் காட்டியிருக்கிறன். இனி நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் அது சரியான முடிவாயிருக்கும் எண்டு நான் நம்பிறன். அவ்வளவுதான். அப்ப நான் வரப் போறன்."

நித்தியானந்தனின் தாயார் கொண்டு வந்து வைத்த தேநீரை 'மடக்மடக்'கென்று விழுங்கிவிட்டு. அவள் புறப்பட்டுவிட்டாள்


"என்னலை முடிஞ்சதைச் செய்திட்டன். இனி மனம் அமைதியா இருக்கும்" என்ற

(10ம் பக்கம் பார்க்க]

## அப்பா சொன்ன உண்மை: கதை - 2

சூரியனை தெய்வமாக வழிபட்ட எமது மூதாதையோர் அதன் சக்தியை அறிந்திருந்தனர். சூரியனை ஏழு குதிரைகள் இழுப்பதாகவும் எமது இதிகாசங்களும் - சமய நூல்களும் கூறுகின்றன. எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்பு எழுதிய அந்நூலாசிரியர்களின் கருத்துக்களை 'பொய்' என கூறி பரிகசித்தவர்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர். எத்தனையோ நூற்றாண்டுகளின் பின் இந்த நூற்றாண்டு- விஞ்ஞான வளர்ச்சியின் உன்னத காலமென வர்ணிக்கப்படும் இப்போது- சூரிய சக்தியிலிருந்து மின்சாரமும்-ஒலியும்-ஒளியும் காந்த சக்தியையும் பெறமுடியும் என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர் அத்துடன் சூரிய ஒளியில் வைலட், கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு ஆகிய ஏழு நிறங்கள் சேர்ந்துள்ளன எனவும் அறியப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டில் இதனை கூறியோர் விஞ்ஞானிகள் என்றல் பல நூற்றாண்டுகட்கு முன் இந்த உண்மைகளை அறிந்தோர் விஞ்ஞானிகள் இல்லையா?

– ஜனனி சபா. புஷ்பநாதன்




## காட்சி 2

(அங்கம் 2)

இடம்: ஆத்தூர் அரசசபை

நேரம்; காலை

பாத்திரங்கள்:
ஆத்தூர் அரசன் அக்கிரன்
நன்மந்திரி; துன்மந்திரி
ஆடல்மகளிர்
மாணிக்க வியாபாரிகள்
தண்டத்தலைவன்
காவலர்கள்
கட்டியக்காரன்

(வேறு)

அக்கிரன்:

மூத்த சிறைக் காவலனின்
மூக்கினை அரிந்துவிடு
பார்த்திருந்த மற்றவரின்
பாதங்களை வெட்டிவிடு
காத்திருந்த காவலரின்
கைகளைத் தறித்துவிடு
கள்ளத்திற் குடந்தை யானோர்
கண்களைப் பறித்துவிடு

(வேறு)

நன்மந்திரி:

வேந்தே ஒன்று விளம்ப விரும்புறேன்
சாந்த மாகத் தயவாய்க் கேளும்
விசாரணை யின்றி வேண்டிய வாறு
தண்டனை கொடுப்பது தருமமே யல்ல
பண்டைய தரும சாத்திர நூல்களும்
இதனைத் தானே எடுத்துரைக் கின்றன

(வேறு)

அக்கிரன்:

சாத்திரமும் நானறிவேன்
தர்மமெலாம் தானறிவேன்
தக்க தென்ன தென்ப
துணர்வேன்—எனக்கு
ஆத்திரத்தை யுண்டுபண்ணும்
அற்பசெயல் செய்தவனின்
ஆவியையும் போக்கிவிடுவேன்
ஆவியையும் நான் பறிப்பேன்
ஆஸ்திகளையும் பறிப்பேன்
ஆக்கினைகள் தான்புரிகுவேன்—எனைப்
பாவியென்று சொல்வதற்கோர்
பாவியுண்டேல் அத்தகையோன்
நாவினையும் வெட்டி விடுவேன்

(வேறு)

நன்மந்திரி:

மன்னவா என்னை மன்னிக்க வேண்டும்
உந்தன் ஆட்சி உயர்ந்திட வேண்டும்
என்பதால் தானே இதனைச் சொல்கிறேன்
ஆத்தூர் மக்கள் அவலமே யின்றி
மகிழவுடன் வாழ வைத்திட வேண்டும்
கோன்முறை தவருக் கொற்றவன்
ஆட்சியை
நான்மறை வாழ்த்தும் நல்லவர் துதிப்பர்
உங்களின் போக்கு ஒருசில நாளாய்
எங்களைத் துயர்கொள வைப்பதை
உணர்வாய்
மக்களுக் காக மன்னனேயன்றி
மன்ன னுக்காக மக்களே யில்லை
குடிகள் வருந்திஞல் கொற்றவன்
அழிவான்
தடியெடுத் தவனத் தடியால் கெடுவான்
அரசே உன்மேல் அன்புடை யேன்யான்
சுயநல மென்பது சொற்பமும் அறியேன்
துயர்கொளும் மக்களின் துன்பம் கண்டு
இயலாமை யாலே இதனைச் சொன்னேன்
பொறுத்தருள் புரிக புவியாளும் வேந்தே!

(மந்திரி கண்கலங்கி நிற்கிறர்)

(வேறு)

அக்கிரன்:

இத்தனை பேரு மிங்கே
இருக்கிறர் ஊமை போல;
வித்தக நினைப்புக் கொண்டோ
வேறெந்த எண்ணம் கொண்டோ
கத்துறய்; சபையில் நீதான்
கருணையின் சின்ன மாமோ?
புத்தி யில்லாத உன்தன்
புலம்பலை விடுக: செல்க

நன்மந்திரி:

மன்னவ! நாட்டு மக்கள்
வருந்திடு கின்ற வேளை
எந்தனல் வாயை மூடி
எப்படி யிருக்க லாகும்

அக்கிரன்:

உன்முடி விதுதான் என்றல்
உனக்கிங்கே பதவி இல்லை
எந்தனை எதிர்ப்போ ருக்கு
இவ்விடம் வேலை இல்லை

அக்கிரன்;

காவல இவனைக் கட்டிக்
கடுஞ்சிறை தனிலே தள்ளு
பாவியை வெளியே விட்டால்
பச்சைப்பொய் பரப்பி நிற்பான்

நன்மந்திரி;

ஆவியைப் போக்கு கின்ற
அருந்துயர் தந்த போதும்
கூறுவேன் உண்மை; பொய்யைக்
கூறிடேன்; அறிக மன்ன

அக்கிரன்:

எந்தனை எதிர்த்துப் பேசும்
இழிஞனே! இதோ சவுக்கால்
தந்திடு கின்றேன் வாங்கு
சத்திய வானும் நீயோ?
(சவுக்கால் அடிக்கிறன். மந்திரி மயங்கி வீழ்கிறன்)

தந்திரம் செய்யும் இந்தச்
சழக்கனைத் தூக்கிச் செல்க

(மந்திரியைத் தூக்கிச் செல்கின்றனர். அக்கிரன் வணிகனைப் பார்த்து)

வந்துள்ள வணிக! உந்தன்
வழக்கினைக் கூறு கேட்போம்

மாணிக்க வியாபாரி; (பணிவுடன்)

வேந்தே! என் வழக்கைப் பற்றி
விளம்பிட ஒன்று மில்லை
சாந்தமே யான உந்தன்
தரிசனம் ஒன்றே போதும்

அக்கிரன்:

வணிக நீ இச்சபைக்கு
வழக்கொடு வந்த தாலும்
துணிவுடன் சிப்பாய்கள்தான்
திருடினர் என்ற தாலும்
ஆயிரம் களஞ்சு பொன்னை
அபராத மாகக் கட்டு
ஈயவே முடியா தென்றல்
எழுந்திடு சிறைக்குச் செல்ல;

மாணிக்க வியாபாரி:

அன்புள்ள அரசே உந்தன்
ஆணையின் படியே செய்வேன்
பொன்னையே தருகின்றேன் யான்
பொறுத்தருள் புரிய வேண்டும்

(பொன்னைக் கொடுத்துவிட்டு மாணிக்க வியாபாரிகள் செல்கின்றனர்)

(திரை)

(வளரும்)

## தமிழ்தந்த தாதாக்கள்

(முன் தொடர்ச்சி)

கூழங்கை தம்பிரான் சுவாமிகளைத் தினமும் வணங்கி அருள்பெற்ற கோபால் செட்டியாருக்கு அக்கலாலத்துல் ஓர் ஆண்மகவுபிறந்தது. செட்டியாருடைய மனைவியார் தையலாச்சி என்பாள் சங்கேந்தி என்னும் ஊரிற் பிறந்தவள். அவள் பெற்றமைந்தன் பிறந்த வேளையையும் அவனுடைய அங்கலட்சணங்களையும் கணித்த தம்பிரான் சுவாமிகள் ''இவன் யாழ்ப்பாணத்தில் அரும்பணிகள்செய்வதற்கு வந்தவன்'' என்றுஆசீர்வதித்தார்.

தம்பிரானை வணங்கிஎழுந்த தையலாச்சியை வாழ்த்திய சுவாமிகள், அவள் பிறந்த சங்கேந்தி என்னும் ஊரையும் அவள் பெயரையும் சிலேடையாகக்கொண்டு அரியதொரு வெண்பாப் பாடியுள்ளார். ஒருகையில் பாஞ்சந்நியம் என்னும் சங்கினை ஏந்தியவரின் தங்கை ஒரு தையல். இங்கே சங்கேந்தி ஊரில் பிறந்த இவளும் தையல் அவள் பசுக்க

## கூழங்கையர் வண்ணம்

ளைப்பரிபாலிக்கும் கோபாலனுய சிவபெருமானின் தேவி. இங்கே இவளும் கோபாலன் என்னும் செட்டியாரின் மனைவியாவள்.

''சங்கேந்தி தங்கச்சி தைய
லென்பா ரிங்கிவளும்
சங்கேந்தி தங்கச்சிதையலே-
அங்கவளைக்
கோபாலன் றேவியெனக்
கூறுவா ரிங்கிவளுங்
கோபாலன் றேவியெனக்
கூறு''

தம்பிரான் சுவாமிகள் இலக்கணம் வல்லவராயிருந்தமையால் நன்னூலுக்கு நல்ல வியாக்கியானம் செய்துள்ளார். இன்றுபோல் அன்றும் அருள் கொழித்து விளங்கிய நல்லைக்கந்த சுவாமியார் மீது நல்லைக்கலிவெண்பா ஒன்று பாடியுள்ளார் இது குமரகுருபர சுவாமிகள் திருச்செந்தூர் முருகன் மீது பாடியருளிய கந்தர்கலிவெண்பா போன்றதாகும்.

தம்பிரான் சுவாமிகள் சில காலம் அரியாலை மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்கு அறிவு நூல்கள் பலவற்றை ஐயந்திரக் கற்பித்து வந்த காலத்தில் அங்கே எழுந்தருளியுள்ள சித்திவிநாயகர் பொற்பாதத்தைத் தினமும் வணங்கி சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்னும் திருவருள் மாலை ஒன்றும் பாடியுள்ளார்.

தம்பிரான் சுவாமிகள் அமைதியான துறவு நெறியில் வாழ்ந்தவர் அவருக்குச் சமய விடயங்களில் காய்தல் உவத்தல் உண்டாகவில்லை. அவர் எல்லோருக்கும் நண்பராய்க் காட்சிக்கு எளியவராய் வாழ்ந்தவர். கிறிஸ்தவ சமயத்தவர் பலர் அவரையடுத்துத் தமது தமிழறிவை விருத்தி செய்து கொண்டனர். அவர் கதா காலட்சேபம் செய்வதில் நல்லதொரு முறையினைத்தாடனப்படுத்திப் பொதுமக்களுக்கும் முதியவருக்கும் கல்வியறிவூட்டியவர்.

### யோசேப்பு புராணம் தந்த தம்பிரான்

கோவாவிலிருந்து வந்த குருமார் சிலர் இவரையணுகித் தமிழ்மொழியை ஆழமாகக் கற்றுக்கொண்டதோடுஇவரை நயந்து வேண்டித் தங்கள் மதத்துக்கு அருமையானதொரு பெரிய நூலையும் செய்வித்தார்கள் யோசேப்பு புராணம் என்னும் நூல் இருபத்தொரு காண்டங்களைக் கொண்டதாய், 1023 பாடல்களில் நிறைவுறுவது தமிழ்நயம் களிநடம் புரியும் இனியபாக்கள் விரவிவர நன்றகப்பாடப்பெற்றது அதில் ஆற்றுப் படலத்தில் வரும் ஆறு விருத்தப்பாக்கள் ஆசிரியர்கள் பலரால் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன நூல் அச்சில் வெளிவரவில்லை என்பது உறுதியாக நம்பக்கூடியதாயுள்ளது.

யோசேப்பு புராணத்தை வெகுவாக நயந்து அதிலிருந்து ஆறு பாடல்களை எடுத்து முதலில்சுவைத்தவர்கற்பிட்டிவாசியும் பழந்தமிழ்ப் புலவருமான சைமன் காசிச் செட்டியாரவர்களாவர் யோசேப்பு புராணம் பாடுவித்தபெருமை பிலிப் மெல்லோ என்னும் பாதிரியாரையே சாரும். மெல்லோ பாதிரியார் ஒல்லாந்தர் காலத்தில் சிறந்து விளங்கிய கொழும்புத் தமிழன் அவர் ஹீபுறு மொழியோடு கிரேக்கம், லத்தீன், போர்த்துக்கல், ஒல்லாந்தம் ஆகிய மொழிகளையும் நன்கறிந்த பன்மொழிப் புலவர் அவர் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் ஆறுமுக நாவலரவர்களின் தந்தையார் அவரிடம் ஒல்லாந்த மொழியினை நன்கறிந்தார். மெல்லோ பாதிரியார் ஹீபுறுமொழியிலிருந்து பைபிள் நூலைத் தமிழில் மொழி பெயர்த்துப் பெருமை பெற்றவர் அந்த மொழிபெயர்ப்பை நாவலரவர்களின் தந்தையார் ஆராய்ச்சி கந்தப்பிள்ளை பார்வையிட்டுள்ளார். கூழங்கைத் தம்பிரான் தமது யோசப்பு புராணத்தில் மெல்லே பாதிரியாரையும் பாடியுள்ளார் என்று அறிந்தவர்கள் எழுதியுள்ளார்கள் தம்பிரான் சிலேடையாகப்பேசுவதில் சமர்த்தர்என்ப.


### 'செட்டியார் சிவன்கோயில்' என்னும் வைத்தீஸ்வரன்கோயில்

கூழங்கைத்தம்பிரான் குடியிருந்த மனையின் கோபாலுச் செட்டியாரின் மைந்தன் வைத்திலிங்கம் செட்டியார், தம்பிரான் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர். நல்லவியாபாரப் பெருக்கத்தாலும், முத்துக் குளிப்பாலும் பெருநிதிபெற்ற வைத்திலிங்கச் செட்டியார் தமக்கு ஒரு பெரிய வீடுகட்டுவதற்கு விரும்பினர். தமது விருப்பத்தை அவர் தம்பிரான் சுவாமிகளிடம் விண்ணப்பித்தபோது சுவாமிகள் மகிழ்ந்து ஆசீர்வதித்ததோடு ''நீ உனக்கு மனைவகுப்பதன் முன், உன்னை ஆளாக்கிய இறைவனுக்கு ஆலயம் அமைத்தல் அமைவுடையதேயாகும்'' என்று ஆலோசனை கூறினர்.

குருவாக்கைத் தலைமைமேற்கொண்ட வைத்திலிங்கஞ் செட்டியார் தமிழ் நாட்டில் தாமறிந்த வைத்தீஸ்வரன் கோயிலமைப்பில் சிவபூமியாகிய இலங்கையின்சிரத்தானமா

(10ம் பக்கம் பார்க்க)

க.சி.குலரத்தினம்




ஒரு நாள் திரு. பம்பிள் எங்கோ சென்றுவிட்டு தொழில் கூடத்துக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தார். வழியில் சவர்பெரி என்ற பெயர் கொண்ட ஒருவனைச் சந்தித்தார். பிரேதங்களை அடக்கம் செய்வதைப் பொறுப்பேற்று நடத்துபவனுன அவன், உயரமும், எலும்புக்கூடுபோன்ற உடலும் கொண்டவன் இருவரும் கைகுலுக்கிக்கொண்டார்கள்.

''கடந்த இரவு மரணமான இரண்டு பெண்களை அளந்து அளவுஎடுத்துள்ளேன் மிஸ்டர் பம்பிள்'' என்று சவர்பெரிகூறினுன்.

''அப்போ உனக்கு நல்ல வாசிதான்'' என்றுர் பம்பிள்.

''அப்படியா நினைக்கிறீர்? நிர்வாகசபையால் கொடுக்கப்படும் கட்டணம் ரொம்பவும் குறைவு'' என்றுன் சவர்பெரி.

''உனது சவப்பெட்டிகளும் அப்படிதான் அளவில் ''சிறிது'' என்றுர் பம்பிள்.

இந்த நகைச்சுவைப்பேச்சைக் கேட்டுவிட்டு சவர்பெரி நீண்டநேரம் சிரித்தான். பிறகு, ''சரிசரி திரு. பம்பிள்! நான் அதைமறுக்கவில்லை, புதிய உணவுத்திட்டம் நடைமுறைக்குவந்த பிறகு சவப்பெட்டிகளும் முன்போலன்றி அளவில் சிறுத்துத் தான் போய்விட்டன ஆனுல் எங்களுக்கும் சிறிது லாபம் இருக்க வேண்டும், மரமெல்லாம் இப்போது நல்லவில்லை'' என்று விளக்கினுன்.

''சரி, சரி, எந்தத் தொழிலிலும் குறைகள் உண்டுதான் அதிருக்கட்டும், யாருக்காவது ஒரு பையன் தேவைப்படுகிறதா என்று அறிந்து சொல்வாயா?'' ''ஆகா''. என்று வாயைத்திறந்த சவர்பெரி, ''அதுபற்றித்தான் நானும் உம்மோடு பேசநினைத்தேன்

3

வேன், நான் ரொம்ப சின்ன பையன் ஐயா, அதனுல் ''

''அதனுல் என்ன? பம்பிள் சற்று ஆக்சரியத்துடன் கேட்டார்

''அதனுல் தனிமையாய் இருக்கு ஐயா. ரொம்பவம் தனிமையாய் இருக்கு அந்தக் குழந்தை அழுதது. திரு. பம்பிள் வந்துசேர்ந்த சமயம் பிரேத அடக்க ஒப்பந்தகாரன் தமது கடையை மூடிவிட்டு அன்றைய பட்டுவாடாக்களைக் கணக்குப்பார்த்து மெழுகு திரியின் உதவியுடன் புத்தகத்தில் எழுதிக்கொண்டிருந்தான்.

''இந்தாரும் சவர்பெரி, பையனைக் கொண்டுவந்து விட்டேன்'' என்றுர் பம்பிள்.

''ஓ! இவன்தானு பையன்?'' என்று கேட்டவாறே மெழுகு வர்த்தியை தலைக்குமேலே தூக்கிப்பிடித்து ஒலிவரைத் தெளிவாகப் பார்த்தான் சவர்பெரி. அதேசமயம் தனது மனைவியையும் அங்கே வரும்படி அழைத்தான்

திருமதி சவர்பெரி ஒரு குட்டையான, மெலிந்த, சண்டைக்கார மனுஷி. கடையின் பக்கமிருந்த ஒரு சிறிய அறையிலிருந்து அவள் வெளிப்பட்டாள்.

''இதுதான் அந்தப்பையன் பிள்ளைதொழில்கூடத்திலிருந்து போனுன் என்று சொன்னேனே அவன்'' என்றுன் சவர்பெரி.

''அடப்பாவமே, மிகச்சிறிய பையனுகவல்லவா இருக்கிறுன்'' என்றுள் அவள்.

''சிறியவன்தான் திருமதி சவர்பெரி, ஆனுல் அவன்வளர்வான், நிச்சயம் வளர்ந்துவிடுவான்'' என்று கூறினுர் பம்பிள்.

''ஆ. எங்கள் வீட்டு சாப்பாட்டில் அவன் வளர்வது பற்றி சொல்லத்தேவையில்லை. தொழில்கூடத்திலிருந்து வரும் பிள்ளைகளினுல் எதுவித மிச்சமும் ஏற்படுவதில்லை. அவர்களின் பெறுமதியைவிட அதிகம் செலவு வைப்பார்கள். இருந்தபோதிலும், ஆண்கள் உங்களுக்குத்தான் அதிகம் தெரியுமென்று நினைத்துக் கொள்கிறீர்கள் இந்தா எலும்புமூட்டை! கீழ்மாடிக்குப் போ!'' என்று கூறியபடி பிரேத அடக்க ஒப்பந்தக்காரனின் மனைவி ஒரு பக்கத்திலிருந்த கதவொன்றைத் திறந்து ஒலிவரை கீழே இருந்த ஒரு ஈரமான இருட்டு அறைக்குள் தள்ளிவிட்டாள். அதுதான் சமையல் அறையாகப் பயன்படுத்தப்பட்டது. அங்கே அறுந்துபோன சப்பாத்தும். கிழிந்துபோன பேகோடும் போட்டுக்கொண்டு ஒரு அசுத்தமான சிறுமி அமர்ந்திருந்தாள்.

''இங்கே பார் சார்லட்'' என்று அழைத்தபடி ஒலிவரைப் பின்தொடர்ந்துவந்த திருமதி சவர்பெரி, ''அந்த நாய்க்கு வைத்திருக்கும் துண்டுகளில் கொஞ்சத்தை இந்தப் பையனுக்கு கொடு - அந்த நாயைக் காலையிலிருந்தே காணும் இன்றைக்கு சும்மா கிடக்கட்டும்'' என்றுள்.

இறைச்சியைப்பற்றி கேட்டவுடனேயே ஒலிவரின் கண்கள் பிரகாசிக்க ஆரம்பித்தன ஒரு கோப்பை நிறைய எலும்பு துண்டுகளுடன் கூடிய சாப்பாடு அவன் முன்வைக்கப்பட்டது ஆசையோடு அதனை ஒலிவர்சாப்பிட்டான். மௌனமாகவே அவனைக் கவனித்துக் கொண்டிருந்த திருமதி சவர்பெரி அவன் சாப்பிட்டு முடிந்தவுடன் ''என்னேடுவா'' என்று கூறியபடி ஒரு அசுத்தமான விளக்கை கையில் எடுத்துக்கொண்டு மேல்மாடிக்கு அழைத்துச் சென்றுள். ''உன் படுக்கை பட்டறைக்குக் கீழே தான். சவப்பெட்டிகளுக்கிடையில் படுப்பது கஷ்டமாய் இருக்காது என்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் உனக்கு படுக்கவேறு இடம் ஏதுமில்லை'' என்று கூறிமுடித்தாள்.

இந்தப் புதிய எஜமானியின் உத்தரவுகளின்படி ஒலிவர் மிகக் கீழ்ப்படிவுடன் நடந்து கொண்டான்.

தனிமையில் விடப்பட்ட ஒலிவர் விளக்கை ஒரு வாங்கின் மேல் வைத்துவிட்டு சுற்றுமுற்றும் பயத்துடன் பார்வையைச் செலுத்தலானுன். அரைப்பங்கு செய்து முடிக்கப்பட்ட சவப்பெட்டியொன்று கடையின் நடுவில் வைக்கப்பட்டிருந்தது. அதைப்பார்க்கவே அவனுக்குப் பயமாய் இருந்தது மரணமே அங்கு உட்கார்ந்துகொண்டு தன்னை முழித்துப் பார்ப்பதுபோல் அவன் நினைத்துக்கொண்டான். அந்தப்பக்கமாக தன்பார்வை செல்லும் போதெல்லாம் அந்தப்பெட்டிக்குள்ளிலிருந்து ஒரு பயங்கர உருவம் தலையைத் தூக்கப்போகிறது என்று அவன் நினைத்துக்கொண்டான்.

(தொடரும்)

திரு பம்பிள் ''அந்தப்பையனை நானே எடுத்துக்கொள்கிறேன்'' என்றுன்.

பிரேதங்களைப் பொறுப்பேற்று அடக்கம் செய்யும் அந்த மனிதனின் கையைப் பிடித்து கட்டிடத்தின் உள்ளே திரு. பம்பிள் அழைத்துச் சென்றுர் ஒலிவரை அவனேடு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் விரைவாக நடைபெற்றன.

இந்த விஷயம் ஒலிவரின் காதுக்கு எட்டியபோது அவன் மிகவும் அமைதியாக அதனைக் கேட்டுவைத்தான்

மண்நிறக்கடதாசியில் சுற்றப்பட்ட ஒருசிறு பார்சலுடன் — அதுதான் அவனிடமிருந்த பொருள்கள் திரு. பம்பிள் புதிய இடத்துக்கு ஒலிவரைக் கூட்டிச்சென்றுர் இருவரும் சிறிதுதூரம் அமைதியாக நடந்தார்கள் சவர்பெரியின் கடைக்கு அண்மித்த போது, பையன் புதிய எஜமானிடம் சேரும்போது ஒழுங்காய் இருப்பானு என்று சற்று நோட்டம்விட்டுப்பார்த்தார் பம்பிள்.

''ஒலிவர்! தொப்பியைக் கண்ணைமறைக்காமல் கொஞ்சம் இழுத்துவிட்டுக்கொள், தலையை நேரே நிமிர்த்திநட'' என்று உத்தரவுபோட்டார் பம்பிள்.

அவர் சொன்னபடியே செய்தான், ஆனுல் தலையைத் தூக்கி அவரைப்பார்த்தபோது அவன் கண்களில் நீர் நிறைந்து விட்டது பம்பிள் எரிச்சலுடன் முறைத்துப்பார்த்தார். குழந்தை அழுகையை அடக்க பெருமுயற்சி செய்தான் ஆனுல் கண்ணீர் கன்னங்கள் மீதாக வழிந்தோடியது. அதனுல் இருகைகளாலும் கண்களை அவன் பொத்திக்கொண்டான். ''சரிதான்'' ஆத்திரமும் எரிச்சலும்மிகுந்த குரலில்கத்தினுர் பம்பிள், எனக்குத் தெரிந்த நன்றிகெட்ட, ஒழுக்கங்கெட்ட பையன்களில் நீதான்''.

அவர் முடிக்குமுன்பே, ஒலிவர் குரல்கொடுத்தான்'' ''இல்லை, இல்லை ஐயா'' பிரம்பைப்பிடித்திருந்த அவரது கையில் தொத்திக்கொண்டு கெஞ்சலானுன்; ''இல்லை, இல்லை ஐயா, நான் உண்மையாக நல்லாய் நடந்துகொள்

மற்றவர்களது குற்றங்களைச் சுட்டிக்காட்டுமுன்பாக, முதலில் உங்கள் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பி, உள்ளே ஆராய்ந்து பார்த்து, அத்தகைய குற்றங்கள் இருக்கின்றனவா எனக்கண்டறியச் சொல்லுங்கள்.

- பெஞ்சமின் பிராங்லின்

## மின்சாரம்

கூட்டலும் [+] கழித்தலும் [—]
இணையும் போதினில்
நாட்டிலும் வீட்டிலும்
நல்லொளி பிறக்குமே!

**காதல்**

ஏட்டில் படிக்கையில்
இனித்திடும் காதல்
வீட்டில் நடக்கையில்
கசப்பது ஏனே?

**அறிவுரை**

பிறருக்குத் தரும்போது
பெருமை கொள்வதேன்?
பிறரதைத் தரும்போது
குறைவெனக் கொள்வதேன்?

**சூது**

தொட்டவர் எவரும்
வாழ்ந்ததும் இல்லை!
விட்டவர் எவரும்
தாழ்ந்ததும் இல்லை!!

**விஞ்ஞானம்**

உயிரைக் காத்திட
மருந்துகள் தரும் நீ
உயிரைக் குடித்திட
குண்டுகள் தருவதேன்?

**யுத்தம்**

அவனியின் அழகை
அளித்திடும் யுத்தம்!
அமைதியின் உயர்வை
உணர்த்திடும் யுத்தம்

**உழைப்பு**

உழைப்பவர் யாரோ!
உண்பவர் எவரோ!!
உழைப்பின் உயர்வை
உணர்வது கடிதோ?

**ச[கி]ம்பளம்**

உழைத்துப் பெறுவது
சம்பளம் என்றுல்
வளைத்துப் பெறுவது
கிம்பளம் தானே?

**நிக்குச்சு**

உன்னினத் தவருடன்
உரசுகிறுய் எரிகிறுய்!
அந்நியருடன் நீ
இணக்கமாய் இருக்கிறுய்?

''முருகு''

விவசாயிகளே!

BAYER

மோரூட் 80% W. P.(Morut)
விலை : 20 கிராம்ஸ் ரூபா 12/50 100 கிராம்ஸ் ரூபா 60/00

பயிர்களைத் தாக்கும்
அடி அழுகல், வேர் அழுகல், விதைகள் மூலம்
பரவும் பூஞ்சண நோய்களையும்
சிறப்பாகக் கட்டுப்படுத்தும்
'மோரூட்' பாவித்து சிறந்த பலன் பெறுங்கள்.

இது பல வருடங்களாக உங்களுக்கு சேவையாற்றும்
"பாயர்" தயாரிப்பு
போமசொல் போட்டோ(Pomosol Forte)
விலை : 100 கிராம் ரூபா 17/50

மிளகாய் மற்றும் காய்கறி நாற்றுமேடையில்
ஏற்படும் அடி அழுகல், பயிர் அழுகல் போன்ற
பூஞ்சண நோய்களை சிறப்பாகக் கட்டுப்படுத்தும்
மற்றுமோர் சிறந்த "பாயர்" தயாரிப்பு.

ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள் :
யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னுர்.

# ஆணவத்துக்கும் அறிவுக்குமிடையே நிகழ்ந்த ஒரு போர்

★ தா. தேவமதுரம்

அதர்மமும் ஆணவமும் கொண்ட சூரபன்மனின் கொட்டத்தை அழித்துத் தர்மமும் நீதியும் தழைத்தோங்குவதற்காக வீறுகொண்டு எழுந்த ஆறுமுகப்பெருமானின் அற்புதவரலாறு கந்தபுராணத்திலே வெகுசிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

சைவசமயம் ஒரு தத்துவார்த்தமான சமயம் ஆகும். எங்கள் வளமான வாழ்க்கைக்கு மூலகாரணமாக ஒளிரும் உண்மையான சமயநெறியுமாகும். இந்நெறிமுறையில் அதர்மம் அழிந்து, ஒழிந்து தர்மம் அரசோச்சுவதைத் தத்துவார்த்தமாக எடுத்துக்காட்டுவதற்காகவே சைவக்கோயில்களிலும் குறிப்பாக முருகன் கோவில்களில் வருடாவருடம் சூரன்போர் நடாத்தப்பட்டு வருகின்றது. சூரன்போரைப் பற்றி ஸ்ரீ கச்சியப்பசிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் கூறும் வரலாற்றைச் சற்று கவனிப்போம்.

சூரபன்மன் தன் ஆணவமிடுக்கால் அறநெறி பிறழ்ந்து அரசோச்சும்போது தேவர்களுக்குச் சொல்லொணாக் கொடுமைகளைச் செய்துவந்தான். வான் சுமந்த தேவர்களைக் கடலில் மீன் சுமக்க வைத்தும், வன்சிறையில் அடைத்தும் வருத்தினன். சூரபன்மனின் ஆணையைப் பிரமா, விஷ்ணு தேவர்கள், முனிவர்கள் அனைவரும் கடக்கமுடியாதிருந்தனர். அவன் வலிமைக்கு இதுவொன்றே சான்றுபகரும். இக்கொடுமையிலிருந்தும் விடிவு காண்பதற்குத் தேவர்கள் விரும்பினர் இதில் முதற்கட்டமாக வெஞ்சிறையில் வாடும் வானவர்களை விடுதலை செய்யவேண்டுமெனக் கோரிச் சூரபன்மனிடம் முருகப்பெருமான் வீரவாகுவைத் தூதனுப்பி வைக்கின்றார்.

தூதுசென்ற வீரவாகுவைத் துச்சமென மதித்த சூரபன்மன் அவர் கூறியதைக் கேட்டபின் வெஞ்சினம் கொண்டவனாக நீ பேதையாதலின் என்னிடம் தூதனாய் வந்தாய். பிழைத்துப் போக உனக்கு உயிர்ப்பிச்சை தந்தேன் என்று எள்ளிநகையாடி ஏளனமாக உரைத்துக் கனல் கக்கும் கண்களுடன் ஆரவாரித்தான். ஆயினும் வெம்போர் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் அறநெறி நின்ற தூதனுப்பும் சீரியபண்பாட்டுப் போர் முறைக்கு முருகப்பெருமான் அடி எடுத்துக்கொடுத்துள்ளமையைக் கந்தபுராண வரலாறு மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

சூரபன்மனுடன் போருக்குக் குரல் எழுப்பிய முருகப்பெருமானின் குரல் அறக்குரலாகவே ஒலித்தது. மன்னுயிர் எல்லாம் நிலைதடுமாறவும், நல்லறம் நடுங்கவும் போர் ஆரம்பமாகின்றது அதர்மமும் ஆணவமும் கொண்ட சூரபன்மனுக்கும் அறக்குரலால் போருக்கு வீறுகொண்டு எழுந்த ஆறுமுகப்பெருமானுக்குப் போர் நடைபெறுகின்றது.

ஆதிசிவனிடம் அழியாத வரம்பெற்ற சூரபன்மன் தன் தவவலிமையால் மாயவடிவங்கள் பல எடுத்துப் போர்புரிகிறான். ஆறுமுகப்பெருமானின் திருக்கரத்தில் இருக்கும் வேலாயுதத்துக்குச் சூரபன்மனின் போர்வலு எம்மாத்திரம். திருமுருகனின் வேலாயுதம் சூரபன்மனின் மார்பை இரண்டாகப் பிளக்கின்றது. சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத வரம்பெற்ற சூரபன்மனின் பிளவுபட்ட மார்புகள் இரண்டும் சேவலாகவும், மயிலாகவும் உயிர்பெறுகின்றன.

அகந்தையையும், ஆணவத்தையும் அதர்மத்தையும் அசுர உடலையும் முருகப்பெருமானின் வேலாயுதம் அழித்தது அந்த அழிவினால் சூரபன்மன் சாகவில்லை வேலும் மயிலுமாக வாழ்வு பெற்றான். சூரன் முருகப்பெருமானுக்குப் பகைவனாக இருந்தபோதும் தன் திருவுருவத்தைச் சூரபன்மனுக்குக் காட்டுகின்றார். அவனை ஆட்கொள்ளுகின்றார். ஈற்றில் சூரன் மயிலாகமாறி முருகப்பெருமானைச் சுமக்கும் பேறு பெறுகின்றான். சூரபன்மனுக்குப் பெருவாழ்வு அளித்த பெருமான் எமக்கும் நல்வாழ்வு தருவார் எத்தனை தீவினைகளைச் செய்தவர்களும் திருமுருகன் தலம் வந்தால் தூயவராகி நற்கதி அடைவாரென்பது

> "தீயவை புரிந்தார் ஏனும்
> குமரவேள் திருமுன் உற்றால்
> தூயவர் ஆகிமேலைத் தொல்
> கதி அடைவர் என்கை
> ஆயவும் வேண்டும்
> கொல்லோ அரசமர் இந்
> நாள் செய்த
> மாயையின் மகனும் அன்றே
> வரம்பிலா அருள்பெற்
> றுய்ந்தான்."

என்ற கந்தபுராணப் பாடலால் நிரூபணம் செய்யப்படுகின்றது.

எமது உள்ளத்தில் அன்றாடம் ஞானசக்திக்கும், அஞ்ஞான சக்திக்கும் இடையில் ஏற்படுகின்ற போராட்டமே சூரன்போரின் தத்துவமாகக் காண்பிக்கப்படுகின்றது. அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட வீறு கொண்டு எழுந்த ஆறுமுகப்பெருமானின் அற்புத வரலாற்றைச் சிந்தனைத்திறம்படைத்த யாம். ஓர் அறிவியற் கலையாகக் கொண்டு அதன் தத்துவத்தை உணர்ந்து வாழ்வதற்கு முனைவோமாக.

[சூரன்போரையொட்டி இக்கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது ]

## கூழங்கையர்

(-8ம் பக்கத் தொடர்ச்சி)

கிய யாழ்ப்பாணத்தில் அமைக்கத்திட்டமிட்டுத் தமிழ் நாட்டிலிருந்து ஆகமம் வல்ல ஸ்தபதிகளையும் கலைஞர்களையும் வரவேற்றுபசரித்துக் கோயிற்பணியைக் குறைவறக் கவனித்து உபசரித்து உடன் நின்று உருவாக்கினார்

ஒல்லாந்தர் காலத்தில் ஆரம்பித்து நிறைவேறிய கட்டட வேலைகள், ஒல்லாந்தர் ஆட்சி முடிவடையும் காலத்தில் நிறைவு பெற்றன. நல்லூர்க் கந்தசாமியாருக்கு இன்றுள்ள ஆலயம் கட்டி முடிக்கப் பெற்றபின் ஒல்லாந்தர் காலத்திலேயே எழுந்த பழைய ஆலயங்களுள் செட்டியார் சிவன் கோயிலும் ஒன்று.

இக்கோயில் பிரதிட்டைப் பெருவிழா 1791ஆம் ஆண்டுக்குச் சரியான சாதாரண வருடத்து சித்திரை மாதத்து பூர்வ பட்சத்து சப்தமி திதியிலே புனர்பூச நட்சத்திர வேளையிலே ஆகமவிதிகளுக்கமைய அருமையாக நடைபெற்றது. அந்த வேளையிலேயே வைத்திலிங்கச் செட்டியாருக்கு அருகில் நின்று கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் மனமுருகிப் பாடிய அவருடைய சொந்தத் தோத்திரப் பாடல் எம்மை அசைக்கிறது

ஆசிரிய விருத்தம்

> நதிகரவ மதியிதழி புரிசடை
> யவிழ்ந்து நடநண்ணுமா
> காசலிங்கம்
> நால்வருக்கு குக்கலா
> னிழலினல் லுபதேசம்
> நவிலுள்ள மவுன லிங்கம்
> நிதிபதித னன்புடைத்
> தோழானு யீசான நிலை
> நின்ற வேட லிங்கம்
> நிவாதமுறை யிருவர்க்
> கழற்கம்ப வடிவாகி
> நின்றெழும் சோதிலிங்கம்
> துதி துதிக் கையானை யன்
> பொடும் போற்றிடுஞ்
> சுயம்பான வப்பு லிங்கம்
> துய்யவுணர் வோரிதய
> கமலா லயத்திலெழு
> சுடற்பொற் கொழுந்து
> லிங்கம்
> மதிதவழ மதிலோடு
> கோபுரந் திகழ்வுறும்
> வண்ணையெல் லையினி
> றுத்தும்
> மாதங்க புரிதையல் பாக
> மிசை மீதமரும்
> வைத்தீச மாலிங்கமே

தையல்நாயகி சமேத வைத்தீசுவரப் பெருமான் பஞ்சலிங்க சமஸ்டியாக வண்ணையில் எழுந்தருளிய பெரும் பேற்றினைக் கண்களிப்பக் கண்டுருகி வருஞ் சந்ததியார்களில் நெஞ்சிற் பதியுமாறு அன்று தம்பிரான் சுவாமிகள் பாடலின் அமைதியே அமைதி

யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் மறுமலர்ச்சிக் காலத்து முன்னோடிகளுள் ஒருவராய் ஒளி வீசிய பின் 1795 ஆம் ஆண்டளவில் ஒய்வுடன் ஞானவொடுக்கத்தமர்ந்து சமாதியாயினர். அவர் சமாதியான இடம் நல்லூரையடுத்த திருநெல்வேலியோ அரியாலையோ என்பது ஆய்வுக்குரிதாகும்.

## புதிய புத்தகம்

நன்னூல்மூலம்-காண்டிகை உரை - விருத்தியுரை என்னும் இந்நூல் நூலும் பதிப்பும் என்னும்தொடரில் முதலாவது நூலாக வெளிவந்திருக்கின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய எழுத்து சொல் இலக்கணங்களைக்கூறும் நூல்களுள் தலைமையுடையதாக உள்ள நன்னூல் எப்போதெப்போது யார் யாரால் பதிப்பிக்கப்பெற்றது என்ற விபரங்களை தொகுத்து வெளியிட்டிருக்கும் இப்பணி பெறுமதிமதிக்க அரியதமிழ்ச்சேவையாகும்.

வெகுசுலபமாக நூல்களை எழுதி வெளியிட்டு புகழ்பெறுவோர் மலிந்த இக்காலத்தில் ஆதாரபூர்வமான செய்திகளோடு இதுபோன்ற நூலை எழுத நினைத்துத்துணிந்ததையிட்டே இன்று நூலாசிரியர் தமிழர்களால் பாராட்டப்படத்தக்கவர் எனலாம். தமிழ் நூல்களைத் தேடிக்கற்கும் ஆர்வத்துடன் முயற்சி செய்பவர்களான கல்விக்கண்ணுடையோரே இப்பதிப்பின் சிரமத்தையறியத்தக்கவர்களாவர்.

நன்னூல் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும், உரையாசிரியர் பதிப்பாளர்கள் பற்றி அறிய விரும்புவோருக்கு இந்நூல் நல்லதுணைசெய்யும் 35 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் 18 நன்னூல் உரைப் பதிப்புக்கள் பற்றிய விபரங்களும் உரையாசிரியர் பற்றிய குறிப்புக்களும் அடங்கியுள்ளன

1181 - 1212 ஆண்டுகாலப் பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் தமிழ் வித்தகரான பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் உரைப் பதிப்புக்களில் 835ம் ஆண்டு தொடக்கம் 1957ம் ஆண்டு வரையிலான உரைப்பதிப்பு விபரங்களே இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. 1825-ம் ஆண்டுக்கு முன் வழங்கிய உரைகள் பல அச்சேறாது ஏட்டு உருவிலேயே இருந்து மறைந்தும் இருக்கலாம்

1936ல் கா. நமச்சிவாய முதலியார் பதிப்பும் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரின் பதிப்பும் கிடைக்கவில்லை என்று இந்நூலாசிரியர் கூறுவதிலிருந்து சில பதிப்புக்கள் இவரது இந்நூலில் அகப்படாமலும் இருக்கும் எனக் கருதலாம்.

இவ்வெளியீட்டில் உரையாசிரியர்கள் விசேடமாகச்செய்த பணிகள் குறிப்பிடப் பெற்றிருந்தால் மிக அதிக பயனுடையதாயிருந்திருக்கும். சில உரையாசிரியர் மூல நூலில் திருத்தம் செய்திருப்பர். சிலர் பாடபேதம் கொண்டிருப்பர். சிலஉரையாசிரியர் உரையிற்கோடல் என்னும் உத்தியால் சிலவிளக்கங்களை எழுதியிருப்பர். அனுபந்தம்- வினாக்கள்- செய்யுளகராதி- மேற்கோளகராதி, அரும்பத விளக்கவகராதி என்பனவற்றைச் சில உரையாசிரியர்கள் சேர்த்திருப்பர் இப்படியான சிறப்புக்களை எந்த உரையாசிரியர் எப்படிச் செய்திருக்கின்றார் எனகொடுப்பது மிகவும் பயனுடையதாகவிருக்கும்.

நூலும் பதிப்பும் என்னும் தொடரில் குறிப்பிட்ட ஒரு நூலைப் பற்றிய பல பதிப்புக்களைத்தேடி எடுத்து அவற்றை ஒழுங்குபடுத்தும் பணி மிக்க சிரமசாத்தியமானதால் இதுபோன்ற பணிகளில் ஒருவரே துணிந்து செயற்பட்டதையிட்டு பாராட்டுவதோடு இப்படியான பதிப்புக்களுக்கு நல்ல வரவேற்பும் ஆதரவும் வழங்குவது தமிழ் அறிஞர்களது தலையாய கடமையாகும்.

நன்னூல் பற்றிய சிறப்புக்களைக் கல்லாதாரும் அறிந்து மதிக்கத்தக்க வகையில் இன்ன இன்ன காலத்தில் இன்ன தகுதியுடைய இன்னாரின்னாரெல்லா இதற்கு உரையெழுதி வெளியிட்டிருக்கின்றனர் என்று எழுதிய இந்நூலாசிரியர், பிற நூல்களைப் பற்றிய தனது வெளியீடுகளையும் வெளியிடுவது தமிழ் மொழிக்கும் தமிழறிஞர்களுக்கும் செய்யும் அரும் சேவையாகவே இருக்கும்

– அருளாளன்

## சிதைவுகளில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு வீடு திரும்பிக்கொண்டிருந்த மகேஸ்வரிக்கு ஒரு மலர்வைக் கொடுத்தது.

"அமிர்தா குங்குமக் கொம்பனி நடத்தின குறுக்கெழுத்துப் போட்டியிலை உனக்குப் பிறைஸ் கிடைச்சிருக்கக்கா. இரண்டு பக்கற் குங்குமம் தபாலிலை வந்திருக்கு..."

—முற்றத்தில் அவள் கால் வைக்க முதல் தம்பி அமிர்தன் ஓடிவந்தான்.

வீட்டு முற்றத்தில் பூத்துக் குலுங்கிய கரடி மல்லிகை இப்போது அவள் கவனத்தை ஈர்த்தது. இவ்வளவு நாளும் இந்தச் செடியின் அழகைத் தான் கவனிக்காதிருந்தது அவளுக்கு வியப்பைக்கொடுத்தது

(நிறைவு)

## கண்ணதாசன்

> ஒராண்டும் ஒன்று ஓடோடிச் செல்ல,
> ஓர் நினைவுப்பார்வை என்னுதடு சொல்ல;
> ஈராண்டும் அன்று ஈண்டு நிறை கொள்ள,
> எடுக்கின்றேன் என்பேனு மூன்றாண்டில்—மெல்ல!
>
> சீராண்டும் அன்றுநீ "தமிழ்ச்சினிமா" வெல்ல,
> சிறப்பாகப் பலதுறையிற் சீர்பெற்றுத் துள்ள,
> யாராண்டும் என்றும் யாரை இணைசொல்ல?
> யான் சொல்வேன் கண்ண தாசன்போலல்ல!

–ஜெ. கிறிஸ்ரி ஜெயசீலன்

## ஊறணியில் ஒரு கலைவிழா

காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் தேவாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைக் கொண்டாடும் வகையில் கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஆலய முன்றலில் கலைவிழாவொன்று நடாத்தப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு. தேவராஜன் அடிகளார் இவ்விழாவுக்குத் தலைமைதாங்கினார். ஊறணி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகளின் வெவ்வேறுவகையான நடன நிகழ்ச்சிகள் கலைவிழாவின் ஆரம்ப அம்சமாக இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து பல முறை மேடையேற்றப்பட்டு பலரது அபிமானத்தைப் பெற்ற அமரர் மஹாகவியின் "புதியதொரு வீடு" கவிதை நாடகம் இடம்பெற்றது. இதனைத் திரு. அ. அருளானந்தம் தயாரித்தளிக்க திருவாளர்கள் ஆனந்தராசா மாஸ்டர் வின்சன்ட் போல் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தார்கள்.

மேற்படி கலைவிழாவில் இடம் பெற்ற இன்னொரு அம்சமான "கள்வனின் காதல்" என்ற நாட்டுக்கூத்துப் பாணியில் அமைந்த நாடகம் ரசிகர்கள் அனைவரினதும் அபிமானத்தை பெற்றுக்கொண்டது திரு. பி. நேசமுத்து தயாரித்து வழங்கிய இந்தநாடகத்தில் ஊறணி கிராமத்தைச் சேர்ந்த இளம் மகளிர் பலர் நடித்திருந்தார்கள் குறிப்பாக செல்வி ரூபினி மிக்கேற்பிள்ளை, செல்வி நேசகுமாரி நேசமுத்து, செல்வி மனோகரி நேசமுத்து ஆகியோர் அதி சிறப்பாக நடித்திருந்தமையால் பலரது பாராட்டையும் பெற்றார்கள்

புனித அந்தோனியார் சிறப்பு பாடல் கலைவிழாவின் இறுதியில் இடம்பெற்றது.

அ, கனகசூரியர்

31—10—84 நினைவு தினம்

# வீரமும் மானமும் மிக்க பண்டாரவன்னியன்

காலத்துக்குக் காலம் வீரம் செறிந்த பல மன்னர்கள் நம் நாட்டை ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் வன்னி எனும் பகுதியை கடைசியாக ஆண்டு பெருமை பெற்றவனும் ஒரு வன்னியனே. அவன் பண்டாரவன்னியன் என அழைக்கப்பட்டவன்.

ஈழத்தின் வடபகுதியில்இந்த வன்னியர் ராசதானி அமைந்திருந்தது. இவ் வன்னிநாடு வடக்கு எல்லையாக யாழ்ப்பாணக்கடலையும், கிழக்கு எல்லையாக திருகோணமலை மாவட்டத்தையும், தெற்கு எல்லையாக அருவி ஆற்றையும், மேற்கு எல்லையாக மன்னார் மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இந்தப் பிரதேசத்தை ஆண்ட பரம்பரையினர் வன்னியர் எனப்பெயர் பெற்றனர்.

''எல்லை வடக்கின் எழில்
யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி
தெற்கெல்லை- நல்லதிருக்
கோணமலைக் கீழ்ப்பால்
கேதீச்சரம் மேற்கில்
மாகாணத் திகழ்
வன்னிநாடு''

என்ற இந்தப்பாடலும் வன்னி நாட்டின் எல்லைகளை வரையறுத்துக் கூறுகின்றது.

## இராசதானி

இவர்களுடைய இராசதானி அமைந்திருந்த இடம் முதலில் ''அடங்காப்பற்று'' எனும் பெயரைக் கொண்டிருந்தது. இப்பகுதி மக்கள் தன்மான உணர்ச்சி நிறைந்தவர்களாயும், வடபகுதி யாழ்ப்பாண மன்னனுக்கோ அன்றி தெற்கே அநுராதபுர மன்னனுக்கோ அடிபணியாது சுதந்திரமாக வாழ்ந்தவர்கள் என வரலாறு காட்டுகிறது. இதனால்தான் இப்பகுதிக்கு 'வன்னி' என்ற பெயரும் தோன்றியதாகக் கூறப்படுகிறது. இந்த வன்னி என்ற சொல்லுக்கு 'நெருப்பு' என்ற ஒரு கருத்தும் உண்டு.

வன்னியர் ஈழத்துக்கு வந்தது பற்றி ''யாழ்ப்பாண வைபவ மாலை'' எனும் நூலிலே கூறப்பட்டதாவது: ''சாலிவாகன சகாப்தம் 358ம் வருஷத்தில் (கி. பி. 436) மனுநீதி கண்ட சோழன்மகன் குளக்கோட்டுமகாராசன் யாத்திரை செய்யும்போது கோணேசர் ஆலயத்தை தரிசிக்க தம்பலகாமம் வந்தபோது அங்கு கோணேசர் சிவாலயம் பழுதடைந்து இருப்பததைக்கண்டு சிவாலயத்தை புதுப்பித்துக் கொண்டு அங்கு தங்கியிருந்தான். அந்தக்காலகட்டத்தில் கண்டியிலிருந்துகொண்டு இலங்கையை ஆண்ட பாண்டு மகாராசன் 'மணற்றிடர்' என அழைக்கப்பட்ட இடத்திற்கு வந்திருந்தான்.

**கஜன்**

## குளக்கோட்டு மன்னன்

குளக்கோட்டு மகாராசன் திருகோணமலையில் தங்கியிருந்து கோணேசர் ஆலயத்தை திருத்துவிப்பதைக் கேள்விப்பட்ட பாண்டு மகாராசன் மனைவி ஒரு படையை திருகோணமலைக்கு அனுப்பி குளக்கோட்டனை துரத்திவிடும்படி கட்டளையிட்டாள். அரசியின் ஆணையை ஏற்று திருகோணமலையை அடைந்த படைவீரர் குளக்கோட்டன் படைகளைக் கண்டு அஞ்சினர். வந்தபடைவீரரை குளக்கோட்டன் விசாரித்தபோது குளக்கோட்டனுக்கு உதவுவதற்காகவே அரசி, தங்களை அனுப்பியதாக படைவீரர் கூறியதைக்கேட்ட குளக்கோட்டன் தனக்குஉதவி தேவையில்லை எனவும் அரசர் சேமத்தை விசாரித்ததாகவும் கூறி படைகளை அனுப்பிவிட்டான்.

கட்டி முடிக்கப்பட்ட கோணேசர் ஆலயத்தை பரிபாலிப்பதற்காக வன்னியரை அழைப்பித்தான். சிறிதுகாலத்தில் குளக்கோட்டன் இறந்துபோக வன்னியர் ஆட்சியைப் பிரித்துக் கொண்டனர். இதே காலத்தில் பாண்டி நாட்டில் இருந்து இன்னும் ஐம்பது வன்னியர் வருகை தந்தனர். இவர்களே பின்னர் வன்னியர் பரம்பரை என அழைக்கப்பட்டனர்.

ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றியவுடன் தாங்கள்தான் வன்னிக்கும் ஆட்சியாளர் எனக்கருதி வந்தனர். இதனால் வன்னியரை திறைசெலுத்துமாறும் ஆண்டுதோறும் நடைபெறும் சேனாதிபதிகள் தர்பாருக்கு சமுகமளிக்கும்படியும் கட்டளையிட்டனர். வன்னி மன்னர் அன்னியர் ஆணையை முழுவதும் ஏற்றுக்கொள்ளவில்லை. திறையும் செலுத்தாமல் தர்பாருக்கும் செல்லாமல் இருந்து வந்தனர். இருந்தும் ஒல்லாந்தர் அவர்களைப் பகைக்க விரும்பவில்லை. பனங்காமத்தை ஆண்ட கைலாய வன்னியன் தொடர்ந்து 12ஆண்டு காலம் தர்பாருக்கு சமுகம் அளிக்கவில்லையாம்.

இப்படியான வீரம் செறிந்த வன்னி மன்னர் பரம்பரையில் வன்னிநாட்டை கடைசியாக ஆண்ட மன்னனும் ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாகத் திகழ்ந்து பெருமை அடைந்தவன் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் என்ப

(14ம் பக்கம் பார்க்க)

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்
A B C
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6
MASTERS ABC 4/82 (C)

# இவ்வாரம் எப்படி?

**இன்று**

மாதம்- ஐப்பசி
திகதி- 12 [28-10-1984]
வாரம்- ஞாயிறு
திதி- சதுர்திமுற் பகல் 11-45வரை
நக்ஷத்திரம்- கேட்டை பிற்பகல் 1-17 வரை

### மேஷம்

குடும்பத்தில் சிறுபிணி தலைதூக்கும். கடமையில் அதிக கவனம் செலுத்தவும். தெளிந்த மனம் தெய்வ சிந்தை. தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வுண்டு.

### ரிஷபம்

ஆயுத பயத்திற்கு இடமுண்டு. கைலப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிரிகள் விடயத்தில் அதிக விழிப்புடனிருக்கவும். எண்ணம்போல் யாவும் நடக்கும்.

### மிதுனம்

வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக பொருள் ஈட்டுவதில் புதிய பாதையை வகுத்துக் கொள்வீர்கள். கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும். வீட்டில் சுப கருமம் நடைபெறுவதற்கும் இடமுண்டு.

### கடகம்

சிந்தையில் குழப்ப நிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல் நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவீனங்கள் அளவிற்கு மிஞ்சும் சிலர் கடன்படவும் நேரிடலாம். பதாவழிச் செய்திகளும் கிடைக்கும்.

### சிம்மம்

பிதா வழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. நீண்டநாள் மனக்குறை நிவர்த்தியாகும். உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும்,

### கன்னி

தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதியதொடர்புகள் ஏற்படும். வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும். வாழ்க்கையில் சுமுகமான நிலைதென்படும்.

### துலாம்

பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். புகழும் கிடைக்கும். வணிகர்களுக்கு வியாபாரத் துறையில் வெற்றி கிடைக்கலாம். புதிய நண்பர்களை நம்பிக்கை கொள்வீர்கள். சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

### விருச்சிகம்

வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். வீணான சிந்தனைகளால் மனதளவு படாதீர். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில் துறைகளிலும் தொல்லைகளுக்கிடமுண்டு.

### தனுசு

தொழில் புரியுமிடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள், பொருள் விடயத்திலும் உடல் நலத்திலும் கவனம் செலுத்தவும். எதிலும் அவசரமுடிவைத் தவிர்த்துக் கொள்ளவும்.

### மகரம்

வாழ்வு கட்டி வெல்லம் போல் இனிக்கும். காதலர் எண்ணங்கள் கைகூடும். இனபந்தக்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்த வரவிலும் திருப்தியேற்படும். நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான வாரம்.

### கும்பம்

தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும், கடந்த கால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்குமிடமுண்டு. வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

### மீனம்

மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம், அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். மாதுரு வழிப்பெருமைக்கும் இடமுண்டு. மனம்போல் யாவும் நடக்கும், கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

**திருமலை.க.வே.ரவீந்திரன்**

விஷவைத்திய நிபுணர்
க. சிற்றம்பலம்.

# கூடியிருந்து கொடுமை செய்யும் விஷ ஜந்துக்கள்




மனிதன் பூரணசுகவாழ்வு வாழவேண்டுமானால், அவனது உடல் ஆரோக்யமாக இருக்க வேண்டும். உள்ளம் அறிவு சார்ந்த நூல்களாலும், கல்வி கேள்விகளாலும் நலம்பெற வேண்டும். உயிர் சமய தத்துவ நூல்களாலும், தெய்வ வழிபாட்டாலும், ஞானத்தியானங்களாலும். சமயவாழ்விலும் நலம்பெற வேண்டும். இப்படியாக வாழ்ந்தால் தான் மனிதவாழ்வின் மகத்துவத்தை அடையமுடியும்.

இப்படியான மனிதவாழ்வின் குறுகிய காலத்தில் கூடுதலான வருடங்களை உறக்கத்திலும், சில வருடங்களை பாலப்டும் உபாதைகளைத் தீர்க்கும் வழிவகைகளையும் நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியமும் அறிவுடைமையுமாகும் ஆகவே மனிதனைத் தீண்டுகின்ற பலவிதமான கொடிய நச்சுத்தன்மையுடைய உயிரினங்களைப்பற்றிய விளக்கங்களும், அவை தீண்டிவிட்டால் ஏற்படும் விளைவுகளும், அதற்கு உடனடியாகச் செய்யக்கூடிய சிகிச்சைமுறைகளும் ஒவ்வொருவரும் ஓரளவாவது அறிந்திருப்பது, நமக்குத் தேவை மாத்திரமல்லாது, மற்றவர்களுக்கும் உதவியாயிருக்கும். இங்கே நான் தெரிவிக்கப் போகும் பிரதானமான சில மருந்துகள், எங்கள் வைத்தியராப் பிரகாரமாக நிகழ்வது. காரணம் அது சிறிய பிராணி. மறைந்திருக்கும் காணமுடியாத நிலையில் இருக்கும் ஆனால் கொட்டியவுடன் தாங்கமுடியாத கடுப்பும் எரிவும் ஏற்படும். தேளிலும் ஆறுவகையான தேள்கள் உண்டு. [1] கருந்தேள் [2] செந்தேள் [3] மரத்தேள் [4] வயல்தேள் ]5] ஜலமண்டலத் தேள் [6] ராஜாத்தேள். இவற்றில் ராஜாத்தேள் கொடிய விஷமுடையது. இது கடித்த இருபத்துநான்கு மணித்தியாலயத்தில் மனிதன் மரணிக்கவும் கூடியது. ஆகவே தேள் தானே கடித்தது என்று அசிரத்தையுடனிருந்தவர்கள்

## மரணத்தை விளைக்கும் தேள்களும் உண்டு

பருவத்திலும் கழித்துவிட்டால், மிகுதியான ஒரு கணிசமான காலமே நலமான வாழ்வுக்குரியதாகின்றது.

இக்காலங்களிலும் பல பிணிகளுடன் வாழவேண்டியவனாக இருக்கின்றான். உலகிலுள்ள உயிரினங்களும், மனிதனுக்குப் பிணியைக் கொடுக்கின்றன. அவற்றில் விஷ ஜந்துக்களால் ஏற்படும் பிணிகள் பலவகையினதாகும்.

விஷ ஜந்துக்கள் பலவகையின. பாம்பு மட்டும்தான் கொடிய விஷத்தை உடையதல்ல. பல ஜந்துகளும், கொடிய விஷமுடையனவாக அமைந்துள்ளன. பாம்பு கடித்தது எனக்கண்டால் உடனடியாக ஏற்ற சிகிச்சை மூலம் குணப்படுத்துவதற்குத் தற்காலத்தில் போதிய மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் மனிதனுக்குத் தெரிந்தும் தெரியாமலும், நம்முடனேயே வாழ்ந்தும், நமது சூழலையே தனது சூழலாகப் பயன்படுத்தியும் எம்முடனேயே வாழுகின்ற பலவகையான விஷஜந்துக்களைப் பற்றிக் கவனமாக இருப்பதுடன், அவை தீண்டிவிட்டால் ஏற்ப குடும்பத்தில் தலைமுறைதலைமுறையாகக் கையாண்டு ஆராய்ச்சியும் அநுபவமும் பெற்றவையாகும். ஆகவே இந்த மருத்துவமுறைகள், சிலரிடம் மாத்திரம் சிக்குண்டு பலருக்குத் தெரியாது, பாதுகாக்கப்பட்டு, மங்கி மறைந்து காலத்தால் செயல் இழந்து, கறையானல் கொள்ளப்பட்டு, கைக்கெட்டியும் வாய்க்கெட்டாதவாறு அழிந்து ஒழிந்து போகாமல் பலரிடமும் இவ் வைத்தியமுறை பரவி, உயிர் வாதையும், உபத்திரவமும் நீங்கி, மக்கள் சுகவாழ்வு வாழவேண்டும் என்னும் நோக்கத்துடன் அவற்றை இங்கு தருகின்றேன்.

விஷஜந்துக்கள் என்று வகுக்கின்றபொழுது. மனிதனுக்கு அதிகமான ஊறு செய்பவைஎவையென ஆராய்ந்தால் பாம்பு. தேள், பூரான், நட்டுவக்காலி, பல்லி, அரணை, பூனை, கீரி, எலி, சிலந்தி, வண்டுகள், குளவி, நாய், கரப்பான், புழுதி உண்ணிகள் முதலியனவாகும்.

### தேள்

தேள் கொட்டுவது காத்தி ஆபத்தில் அகப்பட்டதும் உண்டு. கொடிய விஷமுடைய தேள் கொட்டினால், கடுப்பு எரிவு மாத்திரமன்றி, உடலெல்லாம் வியர்த்து. வாந்தி, மயக்கம் முதலிய அறிகுறிகள் காணப்படும். இப்படி இருந்தால் உடனடியாக வைத்தியனைச் சென்றடைய வேண்டும்.

செய்யக் கூடிய முதலுதவிகள்.

1. கடித்த இடத்துக்குமேல் கட்டப்படவேண்டும்.

2. கடித்த இடத்தில் நாயுருவி விதையின் சூரணத்தைத் தண்ணீர் கலந்து கொட்டுவாயில் தடவினல் விஷம்இறங்கும்.

3. கொட்டிய இடத்தில் கொடுக்கின் முள் இருக்கின்றதா என அவதானித்து நகத்தின் நுனியால் நீவி அந்த முள்ளை எடுத்துவிடவேண்டும்.

4. வினிக்கர் என்னும் காடியை எடுத்து கொட்டிய இடத்தில் நன்ருகத் தேய்த்தல் வேண்டும்.

5. பெருங்காயத்தை அரைத்து கொட்டிய வாயில் பத்து போடுதல் வேண்டும்.

6. தேங்காய்ப்பாலில்கொஞ்சம் வெல்லத்தைக்கரைத்துப் பருகவேண்டும்.

7 கொட்டிய இடத்தில் ஈர வெங்காயச்சாற்றைத் தடவவும்.

இதுவரை தேளின் விஷத்துக்குப் பொதுவாகச் செய்யக்கூடிய முதலுதவிகளைக் குறிப்பிட்டுள்ளேன். ஆனல் இதை வைத்திய ரீதியாகப்பாராது முதலுதவிச் சிகிச்சையாகப் பாவித்துக்கொள்வதுடன் உடனடியாக தகுதி பெற்ற வைத்தியரிடம் செல்லல்வேண்டும். எல்லாவகைத் தேள்களுக்கும் சிகிச்சை முறைகளில் பல மாறுபாடுகள் உண்டு.

இராஜத்தேள் எல்லாத்தேள்களிலும் கொடிய விஷத்தை உடையது இது கடித்து இருபத்து நான்கு மணித்தியாலத்தில் கடியுண்ட வரைக்கொல்லும் சக்தி கொண்ட விஷமுடையதாக இருப்பதைக்காணலாம். இத்தேள் கடித்தவுடன் தாங்க முடியாத வலியும், வியர்வையும், தேக நடுக்கமும் ஏற்படும். கடியுண்டவர் வாந்தி எடுக்கக்கூடும். உமிழ் நீர் ஊறிச் சுரந்து கொண்டேயிருக்கும், மயக்கம், மூச்சுவிடமுடியாத நிலைமைகளை உண்டாக்கி மரணத்தையும் ஏற்படுத்தலாம், இப்படியான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாகத் தகுந்த வைத்தியனை நாடிச் செல்லவேண்டும். ஆகவே தேள் தானே கொட்டியது என்று அசிரத்தையாக இராதீர்.

[தொடரும்]

---

## நீர்வைப்பதி அரசே!

இராகம்: சாரங்கா
தாளம்: ஆதி

பல்லவி

மாறுபடும்சூரர்குலம் வதைத்தவா இம்
மாநிலத்தில் தமிழை என்றும் வளர்த்தவா - (மாறு)

அனுபல்லவி

யாறை தொறுநின்புகழைப் பறைவோமையா தமிழ்ப்
பக்தி யொடுமெங்கள் குறை தீருமையா (மாறு)

சரணம்

நாளுமுன் தமிழன்பர்க்கெலாம்
நடப்பதை அறியாயோஇது
நாடகமல்லவே நவிலவும் வேண்டுமோ
தாளுண்மையன்பாய்(ச்) சரணடைந் தோமையா
தந்திடுவாய் இன்பசுகந் தண்ணீர்வைப்பதியரசே (மாறு)

—முருகதாசன்

★நீர்வைக் கந்தசாமி கோவில்
கந்தசஷ்டித் திருவிழா இன்று 5-ம் நாள்

---

நினைவில் நிறைந்த அரசியலார்சிலர் –7

# பட்டிருப்பு இராசமாணிக்கம்

தேர்தலில் தோல்வியடைந்ததும் அடுத்த தேர்தல் வரை அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பது பொதுவாகக் கிழக்கு மாகாணத்திலிருந்து வந்த ஒரு நடைமுறை. இதற்கு விதி விலக்காக இருந்து வழிகாட்டியவர் முன்னாள் பட்டிருப்பு எம். பி. திரு. சின்னப்புமூத்ததம்பி இராசமாணிக்கம் ஆவார்.

தேர்லில் தோல்வியடைந்த போதிலும தனது தொகுதி மக்களுக்காகவும் இனத்துக்காகவும் தொடர்ந்துஉழைத்து வந்தவர் திரு இராசமாணிக்கம்.

1961-ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கச்சேரி வாசல்களிலும்இதர அரசாங்கஅலுவலகங்களின் வாசல்களிலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மறியல் போராட்டம் நடத்தியபோது அந்த நெருக்கடியான கட்டத்தில் தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்து பொறுப்புக்களைச்சமாளித்தவர் திரு இராசமாணிக்கம்.

இன்று உயிரோடிருந்தால் எழுபத்தொரு வயதை எட்டிப்பிடிக்கவேண்டிய திரு. இராசமாணிக்கம் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையிலும் யாழ்ப்பாணம் மத்திய கலலூரியிலும் கல்வி பயின்ற

**எஸ். எம். ஜி.**

வர், மத்திய கல்லூரியின் பின் இலங்கைப்பல்கலைக்கழகக் கல்லூரியில்சேர்ந்து இன்டர் மீடியற் பரீட்சையில் தேறிய திரு. இராசமாணிக்கம் அரசாங்க சேவையில் கூட்டுறவுப் பரிசோதகராகச் சேர்ந்தார்.

நான்கு வருடங்கள் இந்த உத்தியோகத்திலிருந்த திரு. இராசமாணிக்கம் மீண்டும் பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்வதற்காக அரசாங்க உத்தியோகத்தை ராஜினமாச் செய்தார். பல்கலைக்கழககல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றபின் மீண்டும் அரசாங்க சேவையில்சேர்ந்த திரு, இராசமாணிக்கம் உள்நாட்டு நுகர்ச்சித்திட்டத்தில் உதவிக் கட்டுப்பாட்டாளராகவும் உணவுக்கட்டுப்பாட்டாளராகவும் கடமையாற்றினர்.

1947-ஆம் ஆண்டில் முதலாவது பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசாங்க சேவையிலிருந்து ராஜினமாச் செய்த திரு. இராசமாணிக்கம் பட்டிருப்புத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டுத்தோல்விடைந்தார். இதன் பின் மீண்டும் அரசாங்க சேவையில் சேர்ந்த இவர் உதவி உணவுக்கட்டுப் பாட்டதிகாரியாகவும் பின்னர் காணி அபிவிருத்தி அதிகாரியாகவும் பணியாற்றினர்.

1952-ஆம் ஆண்டில் இரண்டாவது பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசாங்க சேவையிலிருந்து மூன்ருவது தடவையாக திரு. இராசமாணிக்கம் ராஜினமாச் செய்தார். பட்டிருப்புத் தொகுதியில் இரண்டாவது தடவையாக சுயேச்சையாகப் போட்டியிட்ட இவர் 474 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினர்.

இதன்பின் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியில் சேர்ந்த திரு. இராசமாணிக்கம் இறுதிவரை அக்கட்சி உறுப்பினராகவே இருந்தார். 1956ம் ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ் அரசுக்கட்சி வேட்பாளராகப் பட்டிருப்புத் தொகுதியில் போட்டியிட்ட திரு. இராசமாணிக்கம் 106 வாக்குகளால் தோல்வியடைந்தார். இதன் பின் சிறிது காலம் உள்ளூராட்சி அரசியலில் இறங்கிய திரு. இராசமாணிக்கம் மண்முனை தெற்கு, கிழக்கு எருவில் பகுதிகளின் கிராமசபைத்தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றார். மட்டக்களப்புப்பகுதியைச் சேர்ந்த இருபத்திரண்டு கிராமசபைகளைக் கொண்ட கிராமசபைத் தலைவர்களின் சங்கத்துக்கும் அவர் தலைவராகத் தெரிவு செய்யப் பெற்றுப் பணியாற்றினர்.

### தடுப்புக்காவலும் சிறைவாசமும்

1958ஆம் ஆண்டு வகுப்புக் கலவரகாலத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழரசுக்கட்சித்தலைவர்களுடன் திரு இராசமாணிக்கமும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இதற்கு முன் ஸ்ரீஎதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டு ஒருவாரம் சிறைத் தண்டனையையும் அனுபவித்தார்.

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் 4282 அதிகப்படியான வாக்குகளால் பட்டிருப்புத் தொகுதியில் வெற்றியீட்டிய திரு. இராசமாணிக்கம் நான்கு மாதங்களில் ஜூலை மாதம் நடைபெற்ற ஐந்தாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில் ஐயாயிரம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினர்.

1961ஆம் ஆண்டு மறியல் போராட்டத்தை தொடர்ந்து தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் தடுப்புக்காவலில் இருந்த திரு. இராசமாணிக்கம் 1957ஆம் ஆண்டில் தமிழரசுக்கட்சி நடத்திய பிரசித்தி வாய்ந்த ''திருமலை யாத்திரை'' யில் கிழக்கு மாகாணத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.

அமைதியும் அடக்கமும் நிரம்பிய திரு. இராசமாணிக்கம் 1965ஆம் ஆண்டிலும் பட்டிருப்புத் தொகுதியில்வெற்றியீட்டினர். திரு. டட்லியின் தேசிய அரசில் அங்கம் வகித்த தமிழரசுக்கட்சியில் ஒருவராக இருந்த திரு இராசமாணிக்கம் 1965ஆம் ஆண்டில் கல்முனையில் நடந்த தமிழரசுக்கட்சியின் ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நிறைவேறுவதற்குக் கடுமையாக உழைத்தவர்.

இன்றும் கிழக்கு மாகாணம் செல்லும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் களுவாஞ்சிக்குடியிலுள்ள திரு. இராசமாணிக்கத்தின் இல்லத்துக்குச்சென்று திரும்புவதற்குத் தவறுவதில்லை! அவரது இல்லத்துக்கு அருகே நன்றி மறவாத பட்டிருப்புத்தொகுதி மக்கள் அவருக்குச் சிலை எடுத்துள்ளனர்.

## ஏமாற்றுதே, ஏமாறுதே

தாமரைக்குளம் என்ற ஊரிலே மூன்று சகோதரர்கள் வசித்து வந்தனர் மூத்த சகோதரனின் பெயர் கண்ணன் மற்றவர்கள் ராமனும், வேலனும் ஆவர்.

கண்ணன் நல்ல குணங்கள் நிரம்பப் பெற்றவன். ஆனால் மற்ற இருவரும் தமையனுக்கு நேர்விரோதமான குணம் கொண்டவர்கள். அடுத்தவரை ஏய்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள்.

ஒருநாள் மூவரும் தொழில் தேடி அடுத்த கிராமத்துக்குச் செல்லத் திட்டமிட்டனர்.

நெடுந்தூரம் செல்லவேண்டியிருந்ததால் வழியில் உண்பதற்கு ஒருபானையில் பாயாசம் காய்ச்சிஎடுத்துக்கொண்டனர்.

மூவரும் அடுத்தகிராமத்தை நோக்கிப் பயணமானார்கள். வழியில் அவர்கள் ஒரு சத்திரத்தை அடைந்தனர். பொழுது இரவாகிவிட்டது. அவர்களும் களைப்படைந்து விட்டார்கள் அன்றிரவு சத்திரத்தில் தங்கி மறுநாள் பயணத்தைத்தொடரத் தீர்மானித்தார்கள்.

மூவரும் படுக்க ஆயத்தமானார்கள். இளைய சகோதரன் அப்போது மற்ற இருவரையும் பார்த்தான்.

''அண்ணா, நாம் நாளை காலையில் எழுந்ததும் பாயாசத்தைக் குடித்தால் தெம்புடன் நடக்கலாம். இப்போ குடித்தால காலையில் செமித்துவிடும்'' என்றான். இரண்டாவது சகோதரன் உடனே,

''அப்படியானால் ஒன்றுசெய்வோம். நாம் மூவரும் தூங்கும் போது யார் நல்ல கனவு காண்கிறார்களோ அவர்களுக்குத் தான் பாயாசம்'' என்று போட்டிவைத்தான்.

கண்ணனுக்கு இவர்கள் இருவரும் திட்டம் போட்டுத் தன்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று உணர்ந்து கொள்ள முடிந்தது. இவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டுமென மனதில் நினைத்துக்கொண்டு பேசாமல் படுத்துக்கொண்டான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. மூவரும் எழுந்தனர். தம் காலைக்கடன்களை முடித்ததும் பழையபடி சத்திரத்தில் வந்து அமர்ந்தனர். மூவரும் தங்கள் கனவுகளைப்பற்றி கூறலானார்கள்.

இளையவன் சொன்னான், ''நான் இந்திரலோகத்துக்குப் போனேன் திரும்பும்போது இந்திரன் எனக்குப் பொன்னும் பொருளும் தந்து வழியனுப்பிவைத்தான்'' என்றான்.

அடுத்தவன் இதைவிட ஒரு படிமேலே சென்று, 'நான் சிவனிடம் சென்றேன் அவர் எனக்கு அளவற்ற வீரத்தையும், பொன், பொருள் ஆகியவற்றையும் தந்தார்'' என்றான்.

இருவரது புளுகையும்கேட்டு மனதுக்குள் சிரித்தபடி அண்ணன் கூறினான்,

''என்கனவில் ஒரு முனிவர் தோன்றினார். அவர் பாயாசம் முழுவதையும் குடிக்கும்படி வற்புறுத்தினார். என்னால் மறுக்கமுடியவில்லை. குடித்து விட்டேன்'' என்றான்.

அவர்களிருவரும் உடனே ஏன் நீர் எங்களைக் கூப்பிடவில்லை'' என்றார்கள்

''நீங்கள்தான் இந்திரலோகத்திலும், சிவனிடமும் சென்றிருந்தீர்களே! நான் கூப்பிட்டது உங்களுக்குக் கேட்டிருக்காதே!'' என்றான்.

அவர்கள் ஓடோடிச் சென்று பாயாசப் பானையைத் திறந்தனர். அது காலியாக இருந்தது.

**ஸ்ரீகணேசன் சுந்தரலிங்கம்**
இந்து த. க. பாடசாலை,
திருநெல்வேலி.

### நீங்களும் பாடலாம் 4–5

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் பாடலாம் 4,5 சரியாக நிரப்பியனுப்பியவர்கள் பெயர் விபரங்களும், மூளைக்கு வேலை சரியாக நிரப்பியனுப்பியவர்கள் பெயர் விபரங்களும் அடுத்த வார மஞ்சரியில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

### அலகுகளை அறிந்து கொள்வோம்

மின் கொள்ளவு — கூலோம் அல்லது அம்பியர்மானி
மின் ஓட்டம் — அம்பியர் அல்லது ச.கி.செ அலகுகள்
மின் வலு —உவாற்று அல்லது யூல்/செக்கன்
மின் கணியம்— கூலோம்
மின் சக்தி — யூல் அல்லது ஏக்குகள்
மின் வேலை — யூல் அல்லது ஏக்குகள்
மின் இரசாயனச் சமவலு நிறை— கிராம்/கூலோம்
மின் கொள்ளளவம்— பரட்டு
மின் ஏற்றம்— கூலோம்
தடை— ஓம்
அழுத்தவேறுபாடு--உவோற்று
தற்றடை— ஓம்/ ச.மீ3
தற்கடத்துதிறன் —மோ/சமீ 3
விசை — நியூற்றன்
காந்தப்பாயம் — உவேபர்
தூண்டு திறன்— ஹென்றி

தொகுப்பு: சுபத்திராதேவி செல்வத்துரை
யா/வேம்படி மகளிர் உ.க




★ தொகுப்பு: என். செல்வராஜா

### வாழிய தமிழ்

தமிழே நமதுதாய் மொழியாம் - நம்
தாய் முதல் தந்த வாய்மொழியாம்
அமிழ்தினும் அதுவே சிறந்ததுவாம் - எம்
ஆருயிரோடு பிறந்த ததுவாம்

முதலில் தாய்மொழி கற்றிடுவோம் - அது
மொழியும் பண்பினைப் பெற்றிடுவோம்
நிதமதை நெஞ்சில் போற்றிடுவோம் - அதன்
நீழபுகழ் நாள்தொறும சாற்றிடுவோம்

வாழிய செந்தமிழ் வாழ்த்திடுவோம் - எம்
வளமிகு தாய்மொழி போற்றிடுவோம்
வாழிய நம்முயர் வாழியவே - தமிழ்
வையம் வாழிய வாழியவே

செல்வி கயல்விழி அருளம்பலம்
மட்டுவில் மகாவித்தியாலயம், சாவகச்சேரி.

### "மன்னரும் தாது கோபுரங்களும்"

தேவநம்பியதீசன் — தூபாராமை [அனுராதபுரம்]
துட்டகைமுனு — ருவான்வெலிசாயா [அனுராதபுரம்]
வலகம்பா — அபயகிரி [அனுராதபுரம்]
இளநாகன் — திசமகராமை [உருகுணை]
மகாபராக்கிரமபாகு — சேதவனாராமை [பொலனறுவை]
நிசங்க மல்லன் - இரன்கொட்டு விகாரை [பொலனறுவை]

சி, கேதீஸ்வரன்
7C, யாழ். இந்துக்கல்லூரி.


**லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாகும் பால்மா.**




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது


லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ)
லிமிட்டெட், வெலிசர.

**லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.**

ZENITH

# மனிதர்களை நேசித்த மகோன்னத மனிதர்

## சிதம்பர திருச்செந்திநாதன்

**1941-ம்** ஆண்டு மாஸ்கோவிலிருந்து 200 கிலோ மீற்றர் தூரமுள்ள ''யாஸ்னுயா பால்யானு'' என்ற அழகும் செழிப்பும் நிறைந்த எஸ்டேட்டை ஹிட்லரின் நாஜிகள் முற்றுகையிட்டார்கள்.

எஸ்டேட்டின் மத்தியில் அமைந்திருந்த பெரிய மாளிகையை சூறையாடி நாஜிகள்-

**டால்ஸ்டாய் நினைவு தினம் இன்று**

இடத்தை விட்டுப்போகும்- ஆக்கிரமிப்புக்கு உரிய குணத்தின்படி- மாளிகைக்கு தீவைத்தார்கள்.

எரிந்துகொண்டிருந்த மாளிகையை கிராமமக்களும் சோவியத் ரஷ்யாவின் இராணுவ வீரர்களும் ஓடிவந்து அணைத்தார்கள். அப்படியிருந்தும் அவர்களால் மாளிகையின்- முழுப்பகுதியையும் தீயிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை.

ஆனால் முன்னெச்சரிக்கையாக நாஜிகள் முற்றுகையிட முன்னர்- மாளிகையில் இருந்த பெறுமதியான பொருட்களை அகற்றியிருந்தபடியால் மீண்டும் அந்த மாளிகையைபுனரமைக்க சோவியத்ரஷ்யாவின் மக்களால் முடிந்தது.

1910ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் திகதி காலமான புகழ்பெற்ற நாவலாசிரியரும், லட்சியவாதியும் மனிதநேயங்களை-ஆழமாக நேசித்தவருமான அந்த மகத்தான மனிதரை ரஷ்யாவின் ஒவ்வொரு குடிமகனும் மிகத்தீவிரமாக அன்பு செலுத்தியதால்தான் அவர் வசித்த மாளிகையை இவ்விதம் நாஜிகளிடமிருந்து காப்பாற்ற முடிந்தது.

19ம் நூற்றுண்டில் ரஷ்யாவில் மிகப்பெரிய புகழுடன் மனித மனங்கள் ஆட்சிசெய்த அந்த மாபெரும் மனிதருக்கு ரஷ்யன், இங்கிலீஷ், பிரெஞ், ஜெர்மன், இத்தாலி, சுவிடிஷ், க்ரீக் ஜப்பானிஷ், ஸர்பியன், ஹீப்ரு, ஸ்பானிஷ், டேனிஷ் போன்ற பன்னிரு மொழிகள் தெரியும்.

பின்னர் அவர்-தனது கடைசிக் காலத்திில்மேலும்இரண்டு மொழிகளை படித்துக்கொண்டு இருந்தார் என்றால்அவருடைய புலமையை என்னவென்று சொல்லமுடியும்.

அவர் காலமானார் என்ற செய்தியைக் கேட்டதும் ''யாஸ்னுயா பால்யானு'' எஸ்டேட்டை மக்கள் சூழ்ந்து நின்று அழுது புலம்பினார்கள்.

மாளிகைக்குள் -சென்று அந்த மகோன்னதை மனிதரை தரிசித்து பின்னர் வெளியேற முடியாமல் போனதால் ஒரு அறையின் சுவரையே இடித்து மக்கள் அவரை தரிப்பதற்கு வழிசெய்யவேண்டியதாயிற்று

இவ்வளவுக்கும் அவரது குடும்பம் மிக வசதியானது தகப்பனார் மிகப்பெரிய பணக்காரர் தாயாரோ அரச குடும்பத்தவரை சேர்ந்தவர் குதிரை சவாரி செய்யக்கூடிய அவர் அதற்கான வசதியும் இருந்து தான் இருக்கும் இடத்தில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரமான மாஸ்கோவிக்கு மூன்று தடவை நடந்துசென்று வந்தார் என்று கூறப்படுகின்றது.

தொண்ணூற்று இரண்டு வயது வரை வாழ்ந்த லட்சியவாதியான அவர் சிறுவயதிலேயே சூதாட்ட காரனாகவும் பெண்ணாசை உள்ளவராகவும் இருந்தார்

''நான் படுக்கை சென்றால் புகழையும் பெண்களையும் கனக் காணுகின்றேன் என்று சொன்ன அவர் தான் பிற்காலத்தில்,

''குடிக்காதீர்கள், புகைக்காதீர்கள், உலகு ஆசையில் ஈடுபடவேண்டாம்; கலியாணம் செய்வது பாவமான காரியம்'' என்று சொன்னார்.

குடும்ப வாழ்க்கைசந்தோஷமாக இருக்கவில்லை. காதலித்து கலியாணம் செய்த 'மரியானு' அவரை ஒரு கெட்டவராக எண்ணினாள், காரணம் அவரது பெண்கள் தொடர்பே.

நாளடைவில் பர்சோனி என்ற பெண்ணைக்காதலித்தார். இக்கால கட்டத்திலேயே காதல் பற்றி பலகட்டுரைகள் எழுதினார்

பின்னர் வலேறியா என்ற பெண்ணைக்காதலித்தார்.இந்த விடயம் இப்படியே தொடர்ந்தது. அதனால்தான் ''என்னையே நினைக்க எனக்கு பயமாக இருக்கின்றது''

அவரது அகவாழ்க்கை இப்படி இருந்த போதும் சிறுவயதில் ''மிருக வாழ்க்கை வாழ்ந்து தன்னுடைய தொழில்கள் எல்லாவற்றையும் கைவிட்டு உலகில் எதுவித அக்கறையும் இல்லாமல் இருந்தாலும்'' உண்மைகளை அறிவதில் அவருக்கு அதிக அக்கறை இருந்தது. ஏனையவர்களுக்கு நன்மை செய்வதை விரும்பினார். ரஷ்சிய விவசாயிகளை பற்றி கவலைகொண்டார். அவர்களது நலனில் அக்கறை கொண்டார்.

அதுகாரணமாக அவரை விரும்புபவர்கள் அதிகமானார்கள்- நேரில் அவரைப் பார்க்க விரும்புவோரின் தொகை பெருகிக்கொண்டு போனது.

மனிதர்களை அதிகமாக நேசித்ததன் காரணத்தால் அவரால் மக்கள் இலக்கியங்களை படைக்கமுடிந்தது. இன்னும் ரஷ்சியாவில் அவரைஒரு மிகப்பெரிய மேதையாகி மதிப்பதற்கும் உலகிலே அவர் சிறந்த நாவலாசிரியர் எனவும் லட்சியவாதி என்றும் போற்றுவதற்கு அவரது புறவாழ்க்கையே காரணம்.

இப்போதும் அவர் வாழ்ந்த மாளிகையை தரிசித்து- அவர் பாவித்த நாற்காலிகள், படித்த புத்தகங்கள், கட்டில்கள், சாப்பிட்ட மேசைகள், அவரது படங்கள், அவர் உபயோகித்த கோட்டு கைத்தடி, பேனமைக்கூடு என்பனவற்றை எல்லாம் பார்த்து அவரை தரிசித்தது போலே மக்கள் மகிழ்கின்றனர்.

அந்த மாளிகையில் ஒரு அறையில் ''அன்னு கரீனு'' கதையின் ''ப்ரூவ்'' அவர் தனது கைப்பட திருத்தம் செய்யப்பட்ட திருத்தங்களுடன் கண்ணாடி பிரேம்போட்டு மாட்டப்பட்டுள்ளது

அவர் எழுதிய நாவல்கள் மிகப்பெரியன அவற்றைப்பற்றிச் சிந்திக்கவே தன்னுடைய சொந்த ஊரில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரமான மாஸ்கோவிற்கு நடந்திருப்பார் என்று சிலர் கருதுகின்றனர்.

48வருடங்களாக அவர் எழுதிய ஒரு காதல் கதையினை சாகும்போதும் அவர் எழுதி முற்றுக்கவில்லை.

சிறுவர்களுக்காக பல கதைகளை எழுதிய அவரை ரஷ்சியாவில் ஒரு மிகப்பெரிய மேதையாக ஞானியாக மதிக்கின்றனர்.

போரும் சமாதானமும், அன்னு கரீனு, ரிசரெக்ஷன், கொன்பெஷன் போன்ற புகழ்பெற்ற நாவல்களை எழுதிய அவர் தான்- ரஷ்சியாவின் புகழ் பெற்ற லியோ டால்ஸ்டாய் ஆகும்.

# மனித உரிமைக்கும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்காகப் போராடுவதே முக்கியம். அதன் முடிவு அல்ல என்று நான் திருப்தி கொள்கின்றேன். பகவத்கீதை கூறுகின்றது: ''செயல்படுவதற்கு உனக்கோர் உரிமையிருக்கிறது. அதன் பயனில் அல்ல'' என்று. இந்தக்கருத்து எனது வாழ்வில் பெரும் ஆறுதலை அளித்துள்ளது மன அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் அவசியமான பற்றற்று நிற்கும் ஓர் உணர்வினை வளர்த்துக் கொள்ள இது உதவியுள்ளது.

### முதன்மையான தர்மம்

இந்நாட்களில் சட்ட செயல்பாட்டை முன் எப்போதையும் விட முனைப்பாக நின்று நிலை நிறுத்தவேண்டியிருக்கின்றது, ஒரு நாகரிக சமூகத்தில் சமூகத்தின் நாகரிகத்தன்மையை சட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மனிதர்கள் அல்ல - சட்டங்கள் தான். இதுதான் முதன்மையான தர்மம். சகல மனிதர்களுக்கும் வேறு எந்தப்பொருளுக்கும் இதுவே மேன்மையானதாகக் கருதப்படவேண்டும் தர்மமானது ''அரசர்களுக்கு அரசனாக அவர்களை விட அதிக சக்தியுடன் விளங்குகின்றது'' என உபநிடதம் பேசும். தர்மத்தை விட உயர்வானது ஒன்றுமில்லை. அதன் சக்தியின் வாயிலாக பலவீனரும் வலியவர்களை வெற்றிகொள்வர் நீதி வெற்றிபெறுகின்றது,

தர்மத்திலிருந்துதான் சகல தார்மீகக் கொள்கைகளும் நீதிகளும் ஊற்றெடுக்கின்றன.

நாட்டில் நீதி நிலை நாட்டப்படவேண்டுமானால் பொறுப்புள்ள பதவிகளில் அமர்ந்துள்ளவர்கள் நேர்மையானவர்களாகவும் பற்றறுத்தவர்களாகவும்நன்நோக்கமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் அரசியல் காரணங்களுக்காக தமது வழியிலிருந்து பிறழாமல் நீதியை செயல்படுத்தவேண்டும். தர்மத்தை எவரேனும் அழித்தார்களானால் அதே தர்மத்தின் வழியில் தெய்வ தண்டனை அவர்களுக்கு வழங்கப்படுவது தவிர்க்கமுடியாதது.

### ஜனநாயகத்தின் ஊற்றுவாய்

சட்ட ஆட்சிதான் ஜனநாயகத்தின் ஊற்றுவாய். ஜனநாயகம் என்பது ஒரு தார்மிகக்கொள்கை. தர்மமும், சத்தியமும் பாதுகாக்கப்படுதற்கான ஒரு மார்க்கம் தீமையோடும், அநீதியோடும், அசத்தியத்தோடும், நாம் பேரம் பேசிக்கொண்டிருப்போமானால் தற்காலிகமாக ஏதும் நன்மை விளையலாம் ஆனால் நிரந்தரமான அபாயம் விளைந்தே தீரும்.

என்ன தேவைப்படுகின்றது என்றால் மன அமைதியைத் தரும் நேர்மையான மனித சுபாபவமே இதற்கு கல்வியும், ஆரோக்கியமும் தேவை. ஆரோக்கியம்முக்கிய தேவை. ஆரோக்கியம் தேவைப்படும் மனிதர்கள் நோய்களாலும் அதன் விளைவுகளாகவும் அவதிப்படநேர்கின்றது.

நாம் அறியாமையினால் அல்லலுறுகின்றோம். கல்விதான் அதனை அகற்று மருந்தாகும் அக்கல்வி சரியான கல்வியாக இருக்கவேண்டும். ஒரு படித்த மனிதன் என்பவன் அதிகம் தெரிந்தவனாகவோ, அதிகப் பயிற்சி பெற்றவனாகவோ மட்டும் இருந்து விடலாகாது அவன் சிறந்த மனிதனாகவும், தன்னடக்கம், ஒழுங்கான பழக்கவழக்கங்களின் உதாரண புருஷனாக விளங்கவேண்டும். சொத்து சுகங்களாலும் கல்வியினாலும் புருஷோத்மனாக வளர்ந்துவிடமுடியாது.

ஆரோக்கியத்தை வைத்தியரால் சிட்டைபோட்டு எழுதிக் கொடுக்கமுடியாது மருந்துக் கடையிலும் அதை வாங்கிவிட முடியாது. இயற்கையுடன் இசைந்து வாழ்வதின்மூலமே நாம் அதனை அடையமுடியும். ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வு நமக்குத்தேவை. உள்ளத்தில் அமைதியின்றி மகிழ்ச்சியாக இருத்தல் முடியாது

தமிழில்: 'பேனு'

# இன்று திருநாள்



புனித யூதாதேயுவின் புகழ்பரப்பும் திருத்தலங்கள் மட்டக்களப்புப் பகுதியில் தேற்றாத் தீவுக் கிராமத்திலும் யாழ்ப்பாணத்தில் அரியாலைப் பகுதியிலும் அமைந்துள்ளன இப் புனிதரின்புனித மகிமையால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகின்றது.

இப்புனிதரின் திருத்தலம் இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, இத்தாலி, இலங்கை முதலிய நாடுகளில் அமைந்துள்ளது. இந்தப் புனிதர் இவ் இடங்களில் எல்லாம் இருந்து கொண்டு எமக்கு நல்வழி காட்டி அருள்பாலிக்கின்றார்.

இப்புனிதரின் தலத்திற்கு வரும்பக்தர்களிற்பெரும்பாலானவர்கள் இனிமேல் தீர்க்கவே முடியாதெனக் கைவிடப்பட்ட நோய் உபாதைக்காரரும் கெட்ட ஆவியால் பீடிக்கப்பட்டவர்களுமாவர்.

இயேசுவின் இறுதி இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட பன்னிரு அப்போஸ்தலர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த இப்புனிதர் தனது மறை பரப்பும் பணியில் பாமர மக்கள் மத்தியிலும் தாழ்மையும் அன்பும் நிறைந்த தனது அன்பால் பல மூடக் கொள்கைகளைக் களைந்து நற்செய்தியைப் பாரெங்கும் பரப்பினார்.

யூதேயா, சமேரியா, இதுமியா, சிரியா, மொசப்பத்தேமியா போன்ற தேசங்களிலெல்லாம் காட்டுமிராண்டித்தனமாகச் சீவியம் நடத்திய மக்களைக் கட்டுப்பாடும் சீர்திருத்தமும் உள்ள மக்களாக்கி, பக்தியையும் சமாதானத்தையும் அவர்கள் மனதிலே பதிய வைத்தவர் இப் புனிதராவார்.

இறைவனின் நற்செய்தியைப் போதிக்கும் தூதுவராக இறுதிவரை விசுவாசமாக உணர்வால் தமது வாழ்வையே கொடுத்து கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழும் கைவிடப்பட்டவர்களாகிய மக்களுக்கு காவலராகத் திகழ்த்திடப் பிரார்த்திப்போம்.

-செல்வி செ. எலிசபெத்

## 'டிஸ்கோ டான்சர்' 'மியூஸிக் மாஸ்டர்'

இவ்வாண்டு தீபாவளிக்கு சிவகாசியில் 30கோடி மதிப்புள்ள பட்டாசுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவாம்.

140 வகையான புதிய இன பட்டாசுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

'டிஸ்கோ டான்சர்' 'மியூஸிக் மாஸ்டர்' என்ற ரகங்களுக்கே இம்முறை மவுசுஅதிகமாம்.

— 'சச்சி'

## கிடைக்கப் பெற்றோம்

'ஜோஸ்யர்'
(சோதிடப் பத்திரிகை)
வெளியீடு;
அனுஷ்யா சச்சிதானந்தம்
விலை: ரூ 2-00

சோதிட உலகில் முதல் பத்திரிகையாக ஜோஸ்யர் வெளிவந்துள்ளது சனி மாற்றம் உட்படப் பல அரசியல் விஷயங்களும் இதில் இடம்பெற்றுள்ளன

'கவி'

## வீரமும்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வன். இவனுடைய இராசதானி பண்டாரிக்குளம் என்னும் இடத்தில் அமைந்திருந்தது.

### பெருமைக் குரியவன்

வன்னிநாடு யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழதான் அமைந்திருக்கிறது என்ற அன்னியர் கொள்கையை அர்த்தமில்லாததாக்கி அன்னியருக்கு பெருந்தொல்லை கொடுத்தவன் இந்த பண்டாரவன்னியன்

தாய் மண்ணின் சுதந்திரத்திற்காக ஈழநாட்டிலே பல மன்னர்கள் அயராது போரிட்டுள்ளார்கள். அந்த மன்னர்கள் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவன் பண்டார வன்னியன்.

இப்படியெல்லாம் பெருமை பெற்ற பண்டாரவன்னியன் இறப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவனும் ஒருவன்னியன்தான். குலத்தையே கருவறுக்கப்புறப்பட்ட கோடாரிக்காம்பு போல் ஆட்சிக்கு ஆசைப்பட்டு தான் பிறந்த வன்னிமண்ணையும் வன்னி அரசனையும் காட்டிக்கொடுத்த வன் காக்கை வன்னியன் என்பான். கட்ட பொம்மனுக்கு ஒரு எட்டப்பன் பண்டார வன்னியனுக்கு ஒரு காக்கை வன்னியன் காட்டிக்கொடுத்து பெயர் பெற்றவர்கள் ஆவர். காக்கை வன்னியன் மூலமே பண்டார வன்னியனை ஆங்கிலேயர் கொலை செய்தனர். அவன் நினைவாக ஒரு சிலைக்கல் கற்சிலைமடுவில் அமைத்துள்ளனர்.

## யாருடையது ?

மினிபஸ் ஒன்றிற்குள் கண்டு எடுக்கப்பட்ட ஒருசோடி சப்பாத்தினை திரு. ஆர். சிவகுமார் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.


**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்—ராதா
சிவச்சந்திரன்
**ஆனந்த ராகம்**
(புதியபிரதி- ஈஸ்மன்கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Carolyn Judd, Teri Gusman
Angel Colbert
FIVE ANGRY WOMEN
(Strictly For Adults)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)
புரூஸ்லியின் திகிலூட்டும் பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த படம். இதுவே யாழ். நகரில்கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.

**வின்ஸர்** [யாழ்.]
10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்-விஜயா
**நல்ல நேரம்**
(புதிய பிரதி)
29-10-84 முதல்
EBONY IVORY
AND JADE

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES
AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குங்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CONAN THE
BARBARION

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15 4-45
THE WARRIORS
(Strictly for adults)

27 To 30
**றீகல்** (யாழ் நகர்)
10-30, 2-15, 4-30 only
CHARLES BRONSON
LEE MARVIN in
**Death Hunt**
Action-Packed-Adventure
இரண்டு குழுவினருக்கிடையில் ஏற்படும் இத்துப்பாக்கிச் சண்டையின் முடிவுதான் என்ன?


# இலக்கியச்சந்தி

ஆரோக்கியமான இலக்கிய விடயங்களை அறிந்து கொள்ளவும் தரமான இலக்கியங்களுடன் பரிச்சயம் கொள்ளவும் சமகால இலக்கியச் சூழலைப் புரிந்து கொள்ளவும் 'இலக்கியச் சந்தி' பெரிதும் துணைபுரியும்.

நீங்கள் அறியும் தரமான - கண்ட, கேட்ட, படித்த இலக்கிய விடயங்களை எழுதி அனுப்புங்கள். எல்லோரும் பயனடைய, விவாதித்துக்கொள்ள.

'முந்தியசந்தியில் க. நா சுப்பிரமணியம் குறிப்பிட்டிருந்த பல கதைகளை நாம் படிக்கவில்லை. அக்கதைகளை எப்படியாவது தேடிப்பெற்று மறுபிரசுரம் செய்ய வேண்டும்: இது புதிய தலைமுறைக்கு நல்ல அறிமுகமாகவும், பழைய தலைமுறைக்கு உற்சாகமான நினைவூட்டலாகவும் அமையும்' என்று பல நண்பர் நேரிலும் எழுத்திலும் கேட்டுள்ளனர்.

நல்லது நிச்சயம் முயல்வேன்.

ஜராதுஷ்டிரன்

## முனியப்பதாசன்

'ஈழநாடு வெள்ளிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட நூலொன்றில் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சியில்- ஈழநாடு' என்ற அந்தத் தலைப்பில் 'செங்கை ஆழியான்' அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் சிறுகதைத்துறையில் 'முனியப்பதாசன்' தொண்டு பற்றிக் குறிப்பிட்டிருந்தார் அவர்.

பல வாசகர்களுக்குப் பெரும் திகைப்பு.

யார் இந்தமுனியப்பதாசன்?

1960ஆம் ஆண்டளவில் எழுத்துத்துறையிலீடுபட்டவர் எஸ் சண்முகநாதன் என்ற முனியப்பதாசன் ஈழமன்னனின் உயிர்நாடியைப் புனைபெயராகக் கொண்டவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இவரது சகபாடிகளாகவிருந்த நண்பர்கள் செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் எஸ். எஸ். சிவகுப்பைத்தானும் தாண்டமுடியாத முனியப்பதாசனின் எழுத்துக்கள் ஈழஇலக்கியத் துறையின் மைல்கற்கள்.

கட்டுப்பாட்டிற்குள் அடங்காத அவரின் நடத்தைகள் கல்லூரியில் அவரைக் 'குழப்படிகாரன்.', 'மொக்கன்' எனக் கூறவைத்தாலும், அவருக்குக் 'கல்லூரிக் கல்விமுறைகள்'- வெறுப்பை யூட்டினவேயன்றி' கல்வியில் மாறுதாகம் கொண்டவர் என்பதனை அவர் எப்பொழுதும் யாழ்ப்பாணம் நூல் நிலையத்தில் ஆங்கில உயர்இலக்கிய, தத்துவ, விசாரணை நூல்களுடன் மூழ்கிப் போயிருந்ததைக் கண்டவர்கள் உணருவர்.

### 'ஜராதுஷ்டிரன்'

ஆழ்ந்த படிப்பும், தத்துவ விசாரணைகளும் அவருக்கு உலகியலின் போலி வேடங்களைத் துறக்கச்செய்தன.

கட்டையான, சிவந்த உருவம்; வாயில் வெற்றிலை, கையில் பொடிமட்டை, இடுப்பில் வேட்டி, கசங்கிய பழைய சட்டை, வயது இருபத்தைந்துடைய ஒரு வாலிபரை உங்களால் இந்தக்காலத்தில் கற்பனை செய்துகொள்ள முடிந்தால் அதுதான்-

முனியப்பதாசனின் புற உருவம்.

(16ம் பக்கம் பார்க்க)


## ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான
# விண்ணப்ப முடிவு திகதி

1970ம் ஆண்டின் 7ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ்,

பொதுப் பதிவு-பிரிவு 27 (2)

இடைக்காலப் பதிவு - பிரிவு 27(3) (ஏ)யும் (பி)யும்,

ஹோமியோபதி பேரவை, அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க, மேற்படி இரு பிரிவுகளின் கீழ் பதிவுபெற விண்ணப்பிக்கும் கடைசித் திகதியை 31-12-1984 வரை நீடித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கான கோரிக்கைகள் 30-11-1984 வரை ஹோமியோபதி பேரவைக் காரியாலயத்திலுல் ஏற்றுக்கொள்ளப்படும்,

த. பெ. இல: 579, கொழும்பு.
(397)

சி. ஜே. பி. கோயில்பிள்ளை,
பதில் பதிவாளர்,
ஹோமியோபதி பேரவை.


## கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்
இன்று வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனாபிஷேகமும். விஷேச பூஜையும், திருச்செந்தூர் புராணபடனமும், மாலை சந்தனக்காப்பு சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியசபூர்வ ஷண்முகார்ச்சனையும், வசந்தமண்டப பூஜையும், திருவிழாவும் நடைபெறும்.


**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சயதாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

உங்கள் விலைமதிப்புள்ள டி. வி. வீடியோ, றேடியோ போன்ற எலெக்ரோனிக்ஸ், எலெக்றிக்கல் பொருட்கள் பழுதாகிவிட்டதென்ற கவலையா?

**உங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய இத்துறையில் தேர்ச்சிபெற்ற பாறியியலாளர்களைக் கொண்ட 'ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்'ஐ நாடுங்கள்**

# ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்

இல: 37/6, 37/7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# விற்பனைக்கு
## வீடும் நிலமும்

**1. கலட்டி ஒழுங்கை, வட்டுக்கோட்டை**

மூன்று அறை, குசினி, குளிக்கும் அறை, மலசல அறைகள் மின்சாரம், தண்ணீர்வசதிகளுடன் அமைந்த புதிய வீடு நான்கு நிலப்பரப்புடன் விற்பனைக்குண்டு. தெல்லிப்பளை-வட்டுக்கோட்டை றோட்டிற்கு அருகாமையில் உள்ள சிறந்த ஆதனம்.

**நிலம்**

**1. மூளாய், சுழிபுரம்**

1.1. மூளாய் றோட்டில் S. S. Grinding Mill - Farm அருகாமையில் ஐந்து பரப்பு நிலம் வீடுகட்ட உகந்தது விற்பனைக்குண்டு.

1.2. மூளாய் றோட்டில் தண்ணீர் தொட்டி ஒழுங்கையில் S. S. Grinding Mill - Farm அருகாமையில் பத்துப்பரப்பு கிணறுடன் விற்பனைக்குண்டு.

1.3. மூளாய் றோட்டில் தபால்பெட்டிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் இரண்டு அரைப் பரப்பு வீடுகட்ட உகந்த நிலம் விற்பனைக்குண்டு.

1.4. மூளாய் மாதர் சங்கமுள்ள ஒழுங்கையில் எட்டுப் பரப்பு வீடுகட்ட உகந்த நிலம் விற்பனைக்குண்டு.

**2. சித்நன்கேணி**

யாழ்ப்பாணம்-காரைநகர் ரோட்டில் சித்தன்கேணிச் சந்திக்கு அருகாமையில் வீடுகட்ட / தொழிற்சாலை அமைக்க உகந்த இருபது பரப்பு நிலம் நல்லதண்ணீர் மின்சாரவசதிகளுடன் விற்பனைக்குண்டு.

**3. கொல்லன்கலட்டி – தெல்லிப்பளை**

கீரிமலை - கருகம்பானை (795) பஸ் றோட்டில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் ''திருமாலையுடை'' என்னும் நிலப்பரப்பு பன்னிரண்டு விற்பனைக்குண்டு.

**4. பொன்னாலை, சுழிபுரம்**

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அரைமையிலுக்கு அப்பால் ''விலாப்புலம்'' என்னும் இருபது நிலப்பரப்புப் பனந்தோட்டம் கிணறுடன் விற்பனைக்குண்டு.

**5. நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி.**

உடுப்பிட்டி-மால்சந்தை றோட்டில் பனந்தோட்டம் நிலப்பரப்பு அறுபது கிணறுடன் விற்பனைக்குண்டு.

மேற்கூறிய ஆதனங்களை வாங்கவிரும்புவோர் கீழ்க் காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**RTR Holdings (Private) Ltd.**
DEALERS IN REAL ESTATE
Next to Moolai Sub Post office
**Moolai, Chulipuram.**
460 Tel: Vaddu. exch 231

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

# AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99 2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

## முறையிடச்சென்ற விவசாய அதிகாரி

# கைதாகி விடுதலை!

(வண்ணார்பண்ணை)

கிளிநொச்சி விவசாய அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற களவு தொடர்பாக பொலிசாருக்கு முறையீடு செய்யச் சென்ற விவசாய விரிவாக்க அதிகாரி ஒருவர் பொலிசாரினல் கைது செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைகளவு தொடர்பாக முறைப்பாடு செய்யச் செல்பவர்களை றிமாண்டில் வைத்து விசாரணை செய்ய வேண்டுமென்வ உத்தரவின் மீது இந்த அதிகாரியும் இவரது அலுவலகத்தைச் சேர்ந்த மற்றுமிருவரும் கிளிநொச்சிப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி விவசாய விரிவாக்க அதிகாரி ஒருவர் தமது அலுவலக களவு தொடர்பாக முறையீடு செய்யச் சென்ற போதே றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பொலில் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டதன் பின்னரே அந்த அதிகாரி விடுதலை செய்யப்பட்டதாக இத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு உத்தியோகத்தர் விடுதலை செய்யப்பட்டதாகவும் இவ்வலுவலக ஊழியர் ஒருவர் விசாரணைக்காக தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த விவசாய அத்தியட்சகர் அலுவலககத்தில் இருந்த ரேுணியோ யந்திரம் உட்பட பல பொருட்கள் இளைஞர் கோஷ்டி ஒன்றினல் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக இவர்கள் பொலிசாருக்கு முறையீடு செய்யச் சென்ற போதே பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

## 48 மணி நேர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரும் தந்தித் தூண்களில் கட்டப்பட்டுஅவர்கள் கழுத்தில் இருகாகித அட்டைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஒருவர் யாழ். ஆஸ்பத்திரி வீதி - கஸ்தூரியார் வீதி சந்தியிலும், மற்றவர் முற்றவெளியிலும் கட்டிவைக்கப்பட்டிருந்தனர்.

பிற்பகல் 3 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கட்டிவைக்கப்பட்ட இவர்கள் 48மணித்தியாலங்களுக்குப்பின்னரே கட்டிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்எனக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிற்பகல் 4 மணியளவில் ரோந்துப் படையினர் வந்ததைத்தொடர்ந்து அவர்கள் மேல் இரக்கம் கொண்டு கட்டவிழ்த்துவிட்டனராம். (மா)

## சங்கீத இசையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு வைத்திய நடவடிக்கைகள் எடுப்பதுகுறித்து பரிசீலிக்க திரு. எம். ஜி. ஆரை முன்னர் பரிசோதித்த ஜப்பானிய வைத்திய நிபுணர் டாக்டர் சனூக் மீண்டும் தமிழகம் அழைக்கப்படவுள்ளார்.

திருமதி எம் ஜி. ஆர்தமது கணவரின் பிரதான வைத்தியர்கள் சகிதம் ஜப்பானிய புணரை தமிழகம் அழைப்பதற்கானஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (கி)

## இலக்கியச் சந்தி..

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஓயாத சிந்தனையும் உலக நடப்பு விசாரணைகளும் அவரைப்பித்தராக்கி அலையவிட்டன. பித்தம் சற்று அடங்கிய வேளையிலெல்லாம் எழுதினர், எழுதியவை சொற்பம். அத்தனையும் சொக்கத்தங்கம்.

வெற்றுமேனியுடன் அரையும் வேட்டியுடன் தெருவில் வெறிபிடித்துக் கூவி அலைந்த போதும் எழுத்தாளர்களைக் கண்டபோதெல்லாம் நிதானம் தெரியும்; அமைதி நிலவும்.

பேச ஆரம்பித்தால் உலக இலக்கியங்கள் தத்துவ அளவையியல் சமூகவியல் அடிப்படையில் ஆழமாக ஆழ்ந்துவிடுவார்.

பிரமிப்பையே ஊட்டும்.

இவர் இறுதியில் இரந்துண்டு வாழும் சிலையைக்கூட, ஒரு சமூகப் போராட்டமாக- ஆழ்மனப் போராட்டமாகவே நடாத்தினர் என்பது நெருங்கிய நண்பர்களுக்குத்தெரியும்.

எவரையும் எந்த எழுத்தையும்பின்பற்ருத, எவர்கருத்துக்களினலும் கற்பழிக்கப்படாத அவரின் தனித்துவமான ஆளுமையின் வெளிப்பாடுகளாகவே அவரின் படைப்புகள் இருந்தன அவரின் பலபடைப்புகள்ஈழநாட்டில்தான் வெளிவந்தன.

கலைச்செல்வியில் அவரது பரிசுச் சிறுகதை வெளிவந்த போது கதையும் அவர் புனைபெயரும் பலருக்கு வியப்பை ஊட்டின.

ஓயாதசிந்தனையும், தத்துவ விசாரமும் அந்த இளைஞரை முப்பது வயதுக்குள்ளேயே- பித்தராக்கி இறப்பினை உணரா வண்ணம் எங்களிடமிருந்து பிரித்துவிட்டது.

## 'சுஜாதா'வின்

## தொகுப்பு

சமீபத்தில் 'கல்கி' இதழில் மொழிபெயர்ப்பில் ஒரு பஞ்சாபி சிறுகதை (விஷக்கடிவேளை) எனக்குப்பிடித்திருந்தது. மானசீகமாக ஒருசிறுகதைத்தொகுப்பு வெளியிட இருக்கிறேன். தமிழ்ச் சிறுகதைகள்தான். அதற்காக இருபத்தைந்து கதைகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். இருபத்தைந்து இதுவரைதேறவில்லை.

கு ப.ராவின் ஒருகதை இருக்கிறது.

புதுமைப்பித்தன் (ரொம்ப யோசனைக்குப்பிறகு) இல்லை.

ஜானகிராமன், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், அசோகமித்திரன், கிருஷ்ண மூர்த்தி, ந. முத்துசாமி, இ ராஜநாராயணன், ராஜேந்திரச்சோழன், சார்வாகன், சுப்ரமண்யராஜு இந்திரா பார்த்தசாரதி, ஆதவன் என்று பிரத்தியேகமாகப் பதினைந்து கதைகள் சேர்த்திருக்கிறேன். பதினைந்தும் வார, மாத, வருஷ அவசரங்களை மீறி 1985ஆம் வருஷம் படித்தால் கூட அப்பொழுதும் அதற்கு Relevance இருக்கவேண்டும். இதுதான் நான் தேர்ந்தெடுப்பதற்கு முக்கியவிதி.

— சுஜாதா - கணையாழி

ஏப்ரல் 1973

பூமணி, பா. செயப்பிரகாசம், மாலன்; பாலகுமாரன், சு, முத்துலிங்கம்,காவலூர் ராசதுரை, எஸ். பொன்னுத்துரை, டொமினிக்ஜீவா, கே. டானியல், செ. யோகநாதன், செம்பியன் செல்வன், மு. தளையசிங்கம், நீர்வைப் பொன்னையன். யோ. பெனடிக்ற்பாலன், செங்கை ஆழியான், எம். எஸ். எம், ராமையா, தெளிவத்தை யோசப் - போன் ருேரின் சிறுகதைத் தொகுதிகளைப் படித்தால் சுஜாதாவுக்குத் தேவையான மீதிபத்துக் கதைகள் நிச்சயமாகக் கிடைக்கும்.

## சூசைதாசனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் அவரது இல்லத்தில் நிகழ்ந்தது. சம்பவம் இடம் பெற்றபோது திருமதி சூசைதாசனே இல்லத்தில் இருந்ததாகவும், திடீரென அங்கு பிரவேசித்த சில இளைஞர்கள் திரு. சூசைதாசனின் கைத்துப்பாக்கியை அங்கிருந்து எடுத்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர வேறு எந்தவிதமான அசம்பாவிதமும் திரு. சூசைதாசனின் இல்லத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம் பெறவில்லையென்று கூறப்பட்டது. இக்கொள்ளைச்சம்பவம் தொடர்பாக மன்னர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (கி)

## இளைஞர் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் குழு தலையிட்டு அவ்விதம் நிகழாவண்ணம் தடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

''நானுவித இம்சைகளுக்கு மத்தியிலும் மாணவர்கள் அவஸ்த்தைப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் 'ராக்கிங்' போன்றவையும் எம் மத்தியில் நிகழவேண்டுமா? என்று அவ்விளைஞர் குழு அவர்களிடம் எச்சரித்ததாம்.

இம்மாதம் 31ம் திகதி வரை அடுத்தவருடம் அனுமதிபெறும் மாணவர்கள் தங்களைப்பதிவு செய்யும்படி பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் சேட்கப்பட்டுள்ளது தெரிந்ததே. [மா]

## இலங்கை இனப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையிலான உறவுகள் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியம் மிக்கவை'' என்ருர்.

யங் சீமாட்டி இலங்கையில் ஜனதிபதி, பிரதமர் ஆகியோர் உட்படப் பல முக்கிய அமைச்சர்கள், பிரமுகர்களையும் சந்தித்தார்.

பிரிட்டனின் வெளிவிவகார, பொதுநலவாயப் பிரிவுக்கான அமைச்சராக யங் சீமாட்டி விளங்குகிருர்.

யங்சீமாட்டி இலங்கை இனப் பிரச்னை குறித்து மேலும் விளக்கமளிக்கையில், இந்தியப் பிரதமர் திருமதிஇந்திராகாந்தி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரிடம் தமக்கு இலங்கை இனப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் இருக்கும் ஆர்வத்தை கடந்த சில மாதங்களுக்கு முதல் வெளியிட்டிருந்ததையும் குறிப்பிட்டார்.

யங் சீமாட்டி நேற்று முன்தினமிரவு தனது குழுவினர் சகிதம் இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பிலிருந்து திரும்பினர். (கி)

## நியாயமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அதன் விருப்பங்களையேநிறைவேற்றி வருகிறது. இது நமது நாட்டைப் பயங்கர நிலைக்குத் தள்ளிவிடும்.

கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான சூழ்நிலை இலங்கையில் காணப்பட்டது.

ஆனல் அரசாங்கம் இச் சூழ்நிலையைப் பயன்படுத்தாது தொடர்ந்து சமரச முயற்சிகளை பிற்போட்டு வந்துள்ளதால் தற்போதுநிலைமை மோசமாகிவிட்டது என்ருர். (கி)

## மன்னர் விபத்தில் சிக்கிய

# கான்ஸ்டபிள் மரணம்!

(மன்னர்)

வளைவொன்றில் திரும்போது விபத்துக்குள்ளான மன்னர் பொலிஸ் ஜீப்பில் பயணம் செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளிதினத்தன்று மரண விசாரணையொன்றுக்காகச் செல்லும்போது இந்தவிபத்து மன்னர் செபஸ்தியார் கோவிலடியில் நடந்தது. இந்த ஜீப்பில்மன்னர் பொலிஸ் நிலைய 5 கான்ஸ்டபிள்கள் பயணம்செய்தனர். இந்த விபத்தில் கடுமையாகக் காயமுற்ற குணத்திலக்கா என்ற கான்ஸ்டபிள்அனுராதபுரத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பில் அனுமதிக்கப்பட்டார் அங்கு நேற்று இவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் பொதுக்கூட்டம் இன்றுமாலைநல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய ஆய்வரங்கில் ''தமிழ் அட்சரத்தில் எண்'' என்னும் தலைப்பில் சோதிடர் மு. மு. மார்க்கண்டு உரையாற்றுவார். (கெ)

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை இப்புதிய தூதரகக் கட்டிடம் கிழக்கு-மேற்கு பிராந்தியங்களின் கட்டிடக் கலைச்சிறப்பைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றது ஜனதிபதி ஜயவர்த்தன இக் கட்டிடத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்தார். (கி)

## வெளிநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் மூவரும் கைதடி மேற்கைச்சேர்ந்தவர்கள். பண்டாரி செல்லத்துரை (வயது34) வேலன் பூபாலசிங்கம் (வயது 25), சின்னத்தம்பி சந்திரபாலன் (வயது 26) ஆகிய மூவருமே கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்துப் பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்டவர்களாவர். இம் மூவரில் பண்டாரி செல்லத்துரை மன்னரிலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியராகக்கடமையாற்றுகின்ருர்.

## எம். ஜி. ஆர்.

## சுகமடைய

## விஷேச பூசை

[புலோலி]

நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் விரைவில் குணமடையவேண்டிப் பருத்தித்துறையிலும் விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெற்றன.

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் ஆலயத்திலும் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன்) ஆலயத்திலும் இவ் விசேட பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன. பருத்தித்துறை நகர சபை சுகாதாரத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக சுகாதாரத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் இணைந்து இவ் விசேட பூசைகள், ஆராதனைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

## மாதகலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல் - காஞ்சிபுரம் கடற்பகுதிகளில் பீரங்கி வேட்டுக்கள் அடிக்கடி பலத்த சத்தத்துடன் தீர்க்கப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம்வரை இப்பீரங்கி வேட்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

இதனையடுத்து மாதகல் கடற்கரையோரப் பகுதி வாசிகள் பலர் பீதியினல் தமது வீடுகளிலிருந்தும் அகன்று வயல் வெளிகளிலேயே இரவைக் கழித்தனர் என்று கூறப்பட்டது இதே வேளை ஹெலிகாப்டர் விமானங்களும் மின்னெளியைப் பாய்ச்சிய வண்ணம் தாழப் பறந்து இப்பகுதியில் அடிக்கடி வட்டமிட்டன என்றுதெரிவிக்கப்பட்டது. (கி)


## மரண அறிவித்தல்

### கதிரவேல் நடராஜா

யாழ்ப்பாணம் பிரபல புருேக்கர் கதிரவேல் நடராஜா 27-10-1984ல்காலமாகிவிட்டார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன். ஜெகநாதன், யோகநாதன், கதிரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவர் காலஞ்சென்ற அன்னலட்சுமி, மங்கையற்கரசி. சிவாஜினி, விமலாதேவி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னரின் ஈமக்கிரிகைகள் 28-10-1984 50/45 வைரவர் கோவில் ஒழுங்கை கொட்டடி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக மாலை 4 மணிக்கு வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 484



## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இரகுநாதன்

[T. N. Lingam and Sons]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் இரகுநாதன் 26-10-84 அன்று காலமானர் இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜலிங்கம் [கனடா], சாந்தாதேவி, சகுந்தலாதேவி, லிங்கேஸ்வரன், (கனடா), நிர்மலாதேவி [கனடா] சரோஜினிதேவி [கனடா] செந்தில்நாதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரன் [தேசிய சேமிப்பு வங்கி Pettah] அருள்ஜோதி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனரும், காலஞ்சென்ற திருமதி சுந்தரமூர்த்தி பரமேஸ்வரி, திருமதி பவானந்தம் நாகேஸ்வரி ஆகியோயோரின் அன்புச் சகோதரனும், கிருஷாந்தி, சுகந்தன் நிஷாந்தன், பத்மசொரூபி, மஞ்சரி ஆகியோரின் பாட்டனரும் ஆவார். அன்னரின் மரணச் சடங்குகள் 28-10-84 இன்று ஞாயிற்றுக்கிழமைமாலை4மணிக்கு 179 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும். 482


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.